# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28+4

சுடர் 32 | கதிர் 54 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 06, வியாழக்கிழமை 19.01.2017


## கூட்டமைப்பின் பொங்கல் விழா இன்று கிழக்கில்

கொழும்பு, ஜன. 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் பொங்கல் விழாவும் பேரணியும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்றைய தினம் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாக்கப் >> 25

## ஓரினச் சேர்க்கை இங்கு ஒத்துவராது

*அமைச்சரவையில் சலசலப்பு*

கொழும்பு, ஜன. 19

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையைப் பெற்றுக் கொள்வதற்கு, ஓரினச் சேர்க்கையை இலங்கையில் குற்றமற்றதாக்குவதற்கு முன்வைக்கப்பட்ட நிபந்தனை தொடர்பில் அமைச்சரவைக் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் >> 25

## வறட்சியைப் போக்க புதிதாகக் கிணறுகள்

**அமைச்சரவை அனுமதி**

கொழும்பு, ஜன. 19

வறட்சி நிலைமையைப் போக்குவதற்குக் கிணறுகள் அமைப்பதற்கும் - சீரமைப்பதற்கும், பவுசர் மூலம் மேலதிகக் குடிதண்ணீர் விநியோகிப்பதற்கும் அமைச்சரவை நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கியுள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சியான கால நிலையினால் கிராமிய >> 25



## சீன அரச தலைவருடன் ரணில் முக்கிய சந்திப்பு

**இலங்கை முதலீடுகள் குறித்து விரிவாகப் பேச்சு**

கொழும்பு, ஜன. 19

கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, சீன அரச தலைவர் சி ஜின்பிங்கை, நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். சுவிற்சர்லாந்தின் டாவோஸ் நகரில் உலக பொருளாதார மாநாட்டின் தொடக்க >> 25

## இலங்கையில் இலகுவான வர்த்தகச் சூழல்

**சுவிற்சர்லாந்தில் கூறினார் ரணில்**

கொழும்பு, ஜன. 19

புதிய வரிச் சலுகைகள், பொருளாதார உறுதிப்படுத்தல்கள் மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்துடன் இணைந்து செயற்படுவதானது இலங்கையில் மிகவும் இலகுவாக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான சூழலை உருவாக்கும்.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சுவிற்சர்லாந்தில் நடைபெற்று >> 25

# படுகொலை கடத்தலில் படையினர் சிலர் தொடர்பு

## ஒப்புக்கொண்டது அரசு



கொழும்பு, ஜனவரி 19

**போ**ரின்போது மனிதப் படுகொலையை நிகழ்த்தியிருந்தால் இராணுவத்தினரைக் கைது செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்போவதில்லை. இராணுவத்தில் சிலர் போர் செய்தது போன்று சிலர் மனிதப் படுகொலையையும், கடத்தல்களையும் செய்தனர்.

இவ்வாறு அமைச்சரும், >> 25

## ஓமந்தை முகாமை அகற்றவேயில்லை

**கூறுகிறது இராணுவம்**



கொழும்பு, ஜன. 19

ஓமந்தை முகாம் அகற்றப்படவில்லை. அருகில் உள்ள பொதுமக்களின் 18 ஏக்கர் காணிப் பிரச்சினை தொடர்பான நடவடிக்கைகள் வவுனியா மாவட்டச் செயலரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப் பட்டுள்ளன. இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொசான் செனவிரத்ன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக் களத்தில் நேற்று இடம் பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் >> 25

## ஐ.நாவுடன் கூட்டுறவாக இலங்கை செயற்படும்

**ரணிலைச் சந்தித்த பின்னர் எரிக் சொல்ஹெய்ம் தகவல்**

கொழும்பு, ஜன. 19

சூழல் இயைவுப் பொருளாதாரம், நீடித்து நிலைத்திருக்கக் கூடிய சுற்றுலாத்துறை உள்ளிட்ட விடயங்களில் ஐ.நாவின் சூழல் பிரிவுடன் கூட்டுறவாகச் செயற்பட இலங்கை இணங்கியுள்ளதாக அதன் தற்போதைய தலைவரும், இலங்கைக்கான முன்னாள் சமாதானத் தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

உலகப் பொருளாதார மாநாட்டில் கலந்துகொள்வதற்காக >> 25



## குறுகிய காலத்தினுள் மகிந்த தலைமையில் அமையும் புதிய அரசு

*நிரோசன் பிரேமரத்ன எம்.பி. தெரிவிப்பு*

கொழும்பு, ஜன. 19

மிகக் குறுகிய காலத்துக்குள் மகிந்த தலைமையில் புதிய அரசு அமைப்பதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் நிரோசன் பிரேமரத்ன தெரிவித்தார். அவர் >> 25

## விவசாயிகளுக்கு வறட்சி நட்டஈடு

*2.5 பில்லியன் ரூபா ஒதுக்கீடு*

கொழும்பு, ஜன. 19

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவதற்காக 2.5 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் >> 25

## அலங்கா நல்லூர் ஆடும்வரை ஈழ நல்லூரும் அடங்காது

**ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக நேற்று அணி திரண்ட இளைஞர்கள் கோசம்**



யாழ்ப்பாணம், ஜன. 19

தமிழகத்தில் ஜல்லிக்கட்டுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை எதிர்த்துப் பெரும் போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றது. தமிழகம் முழுவதிலும் பரந்துபட்டு முன்னெடுக்கப்பட்டுவருகின்ற இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும், ஜல்லிக்கட்டு மீதான தடையை நீக்கவேண்டும் எனக் கோரியும் நல்லூரில் நேற்று மாலை மாபெரும் >> 25

முச்சந்தி முரளி



உண்மையை எத்தின நாளைக்குத்தான் ஒளிக்கலாம் பாருங்கோ...

## வறட்சி நிவாரணப் பணி குறித்து மைத்திரி ஆராய்வு

கொழும்பு, ஜன. 19

வறட்சி நிவாரணங்களை வழங்குவதற்கு அமைச்சு மட்டத்தில் முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுக் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் அரச தலைவர் அலுவலக ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: >> 25

# ஜல்லிக்கட்டுக்கு நல்லூரில் அணி திரண்டு ஆதரவு




# எம்.பி. பதவியையும் துறக்கட்டும் ரத்ன தேரர்

## ஜாதிக ஹெல உறுமய சவால்

கொழும்பு, ஜன. 19

சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படுவதற்கு அத்துரலிய ரத்ன தேரர் எடுத்துள்ள முடிவை வரவேற்றுள்ள ஜாதிக ஹெல உறுமய, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் விலகி தனத்துவமாகச் செயற்படுவதன் மூலமே சுயாதீனம் என்ற விடயம் அர்த்தமுடையதாக இருக்கும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படவுள்ளார் என்று ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமான அத்துரலிய ரத்னதேரர் கடந்த செவ்வாயன்று அறிவித்தார். இதையடுத்து இவ்விவகாரம் தொடர்பில் அரசியல் களத்தில் சூடான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.

களுத்துறையில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் பங்கேற்று இது சம்பந்தமாக கருத்து வெளியிடுகையிலேயே ஜாதிக ஹெல உறுமயவின் முன்னாள் தலைவரான ஓமல்பே சோபித தேரர் மேற்கண்ட விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி இலங்கையில் அரசியல் புரட்சியொன்று ஏற்பட்டது. அதில் ரத்ன தேரருக்கும் முக்கிய பங்குண்டு. புதிய அரசு உதயமாகி இரண்டு ஆண்டுகள் கடந்துள்ளன. இருந்தாலும் அரசின் செயற்பாடுகளில் சிற்சில குறைபாடுகள் இருக்கின்றன. விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

தற்போது அரசமைப்புத் திருத்தப்பணி இடம்பெற்று வருகின்றது. பொருளாதாரக் கொள்கைகளும் வகுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறானதொரு கட்டத்தில் அரச தரப்பிலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி அரசை நல்வழிப் படுத்துவதற்கும் நாட்டைப் பாதுகாப்பதற்கும் ரத்ன தேரர் எடுத்துள்ள முடிவை வரவேற்கின்றோம்.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் சுயாதீனமாக செயற்பட்டால்தான் 'சுயாதீனம்' என்ற வசனத்துக்குரிய அர்த்தம் முழுமை பெறும் - என்றார்.(த-5)

பேராதனைப் பல்கலையில்

# பகிடிவதை விவகாரம் மாணவன் மீது தாக்கு

கண்டி, ஜன.19

கண்டி பேராதனைப் பல்கலைக் கழக மாணவர் ஒருவர் மாணவர்கள் சிலரால் தாக்கப்பட்ட நிலையில் பேராதனைப் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் பல்கலைக் கழகத்தில் உயர் கல்விப் பட்டப் படிப்பு நிறுவனத்துக்கு அருகில் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பகிடிவதை தொடர்பாக எழுந்த கருத்து முரண்பாட்டையடுத்து பகிடிவதைக்குச் சார்பான மாணவர்கள் இவரைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்குள்ளான மாணவன் நீதிபதி ஒருவரின் புதல்வர் என பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் எனக் கூறப்படும் எட்டுப் பேரை கைது செய்வதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(த-ய)

# 22 இல் கட்சி மாநாடு தலைவரோ சிறையில்

## அதிதியாக மகிந்த பங்கேற்பு

கொழும்பு, ஜன. 19

தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய மாநாடு எதிர்வரும் 22 ஆம் திகதி கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமை அதிதியாக பங்கேற்கவுள்ளார். அத்துடன், பொது எதிரணி உறுப்பினர்களும் பங்கேற்கவுள்ளனர்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ச எதிர்வரும் 24 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். தலைவர் இல்லாத நிலையிலேயே மாநாடு நடைபெறவுள்ளது.

மாநாட்டின்போது புதிய அரசமைப்பு, உள்ளூராட்சி சபைத் தேர்தல் உட்பட முக்கிய சில விடயங்கள் தொடர்பில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

(த-5)



# மழை வேண்டிக் கிழக்கில் 1008 பானைகளில் பொங்கல்

மட்டக்களப்பு, ஜன.19
மட்டக்களப்பு - போரதீவுப் பற்று பிரதேச செயலகமும் பிரதேச மக்களும் ஒன்றிணைந்து 1008 பானைகளில்பொங்கிமழைவேண்டிப் பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.
நேற்று வெல்லாவெளி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் பிரதேச செயலாளர் என். வில்வரெத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மழை வேண்டி மழைக் காவியமும் பாடப்பட்டது. மழையின்றி, போரதீவுப் பற்றுப் பிரதேசத்தில் செய்கை பண்ணப்படடுள்ள வேளாண்மை மற்றும் மேட்டுநிலப் பயிர்களும் கருகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-ய-46)

# ரத்ன தேரரின் கருத்துக்கள் தவறானவை

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 19
புதிய அரசமைப்புப் பணிகளில் வெளிப்படைத் தன்மை இல்லை என்று கூறிச் சுயாதீனமாகச் செயற்படப்போவதாக அத்துரலிய ரத்ன தேரர் கூறியுள்ள கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. அனைத்துக் கட்சியின் உறுப்பினர்களின் பங்கு பற்றலுடன்தான் அரசமைப்புப் பணிகள் இடம் பெறுகின்றது.
இவ்வாறு சுகாதார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு அரச தகவல் திணைக் களத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசமைப்பு என்று ஒன்றும் இதுவரை தயாரிக்கப்படவில்லை. அனைத்துக் கட்சியின் உறுப்பினர்களும் குறித்த பணிகளில்உள்வாங்கப்பட்டுத்தான் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக மகிந்தவின் ஆதரவாளர்களும் உள் வாங்கப்பட்டுள்ளனர்.
வழிநடத்தல் குழு மற்றும் உப குழுக்களின் விவாதங்களில் அனைவரும் கலந்துகொள்கின்றனர். அங்கு எதனையும் தெரிவிக்காது வெளியில் வந்து வேறுவிதமாகக் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதுவரை அரசமைப்புத் தொடர்பான சட்டவரைவு மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அத்துரலிய ரத்ன தேரர் குறித்த விடயம் தொடர்பில் அறியாது தவறான கருத்துக்களைக் கூறியுள்ளார் - என்றார். (த-5)

# பக்குரு மீன்பிடி வலைக்கு தடை

கொழும்பு, ஜன. 19
இலங்கைக் கடற்பரப்பினுள் இயந்திரப் படகுகளினால் கட்டி இழுக்கப்பட்ட பக்குரு வலைகளைப் பயன்படுத்தி நிறைவேற்றப்படுகின்ற மீன்பிடிச் செயற்பாடுகளுக்குத் தடை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீரவால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
இயந்திரப் படகுகளினால் கட்டி இழுக்கப்பட்ட பக்குரு வலை களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மீன்பிடிச் செயற்பாடுகளுக்கு தடை விதிப்பதற்குத் தேவையான விதப்புரைகளை ஏற்படுத்தும் வகையில், 1996ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கக் கடற்றொழில் மற்றும் நீர் வாழ் உயிரின வளங்கள் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான சட்டவரைவுக்கு நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக முன் வைப்பதற்கு அனுமதி கோரிச் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப்பத்திரத்திற்கே, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (த-5)

# ஒவ்வொருவராக விலகுவர் நல்லாட்சியின் உறுப்பினர்கள்

## அடித்துக் கூறுகிறார் மகிந்தானந்த

கொழும்பு, ஜன. 19
அரசின் எதேச்சதிகரமான போக்கால் அரசிலிருந்து அத்துரலிய ரத்னதேரர், பிரியங்கர ஜயரத்ன ஆகியோர் விலகியுள்ளனர். பொது எதிரணியின் நுகேகொடைக் கூட்டத்தைத் தொடர்ந்து நல்லாட்சி அரசின் உறுப்பினர்கள் ஒவ்வொருவராக விலகுவார்கள்.
இவ்வாறு மகிந்த ஆதரவு அணியான பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.
பொரளை என்.எம்.பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த அரசின் மோசடி நடவடிக்கைகள் தொடர்பில் பொது எதிரணி தகவல் வெளியிட்டு வருகின்றது. இதுவரை நல்லாட்சி அரசால் முன்னெடுக்கப்பட்ட 6 மோசடி நடவடிக்கைகளை வெளியிட்டுள்ளோம். தற்போது அரசில் உள்ள சில அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த அரசால் முன் னெடுக்கப்பட்ட மோசடிகள் தொடர்பான உண்மைகளை எமக்கு வழங்கி வருகின்றனர்.
பொது எதிரணி இந்த அரசின் மோசடிகளை வெளியிட ஆரம்பித்தவுடன் அரசில் உள்ள சிலரும் ஊடகச் சந்திப்புகளை நடத்தி அரசால் இடம்பெற்று வரும் மோசடிகள் தொடர்பில் தகவல் வெளியிட்டு வருகின்றனர். அதற்கமைவாக அண்மையில் மாகாணசபை உறுப்பினர் மைத்திரி குணரத்ன ஊழல் தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தார்.
அரசுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் என நாம் அடையாளப்படுத்திய போதும் இந்த மோசடிக் குற்றச்சாட்டுகள் அனைத்தும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் மலிக் சமரவிக்ரம மற்றும் பாஸ்கரலிங்கம், சரித்த ரத்வத்தை ஆகிய ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு எதிராகவே முன் வைக்கப்பட்டுள்ளன. அதனாலேயே அரசின் பக்கம் உள்ள சிலர் உண்மைகளை வெளியிட்டு வருகின்றனர்.
சட்டமா அதிபர் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், நாடாளுமன்றம் ஆகி யவற்றைத் திசைதிருப்பும் வகையில் செயற்படுவதோடு, 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி பொதுமக்கள் வழங்கிய ஆணைக்குப் புறம்பாகவே இந்த அரசு செயற்பட்டு வருகின்றது - என்றார். (த-5)



தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் புதிய தலைவராக பீ.என். மனதுங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டார். அவருக்கான நியமனக் கடிதம், ஜனாதிபதி செயலகத்தில் வைத்து நேற்றுக் கையளிக்கப்பட்டது. (து)

# இலங்கையின் அபிவிருத்தி வரைபடம் சுவிற்சர்லாந்தில்

கொழும்பு, ஜன 19
இலங்கையின் எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பான வரைபடம் சுவிற்சர்லாந்தில் நடக்கும் உலகப் பொருளாதார மாநாட்டில் வெளியிடப்பட்டது.
உலகப் பொருளாதார மன்றத்தின் சிறப்புக் கூடத்தில் இது தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டது. அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, மலிக் சமரவிக்ரம, ஹரீன் பெர்னாண்டோ ஆகியோர் இதில் கலந்து கொண்டார்கள்.
இலங்கையின் எதிர்காலப் பொருளாதாரச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லவும், அது தொடர்பான தகவல்களை வழங்கும் பொருட்டு உலகப் பொருளாதார மன்றத்தின் கொள்கைகள் கற்கை நிறுவகத்தினால் இந்த வரைபடம் சமர்ப்பிக்கப்பட்டது. (து)

# சிலை திறப்பு

யாழ்ப்பாணம்,ஜன.19
கொக்குவில் இந்துக் கல்லூரியின் கலைத்தாய் சரஸ்வதி தேவி சிலை திறப்பு நிகழ்வு இன்று காலை 8.05 மணிக்கு கல்லூரியின் வடபகுதி வளாகத்தில் பதில் அதிபர் சொ.லோகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.
இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக ஓய்வு நிலை உப அதிபர் திருச்செல்வம் சுசிலாதேவி கலந்து கொள்வார். (த-8)

# புதிய அரசமைப்புச் சட்டத்தால் வடக்கிலும் தெற்கிலும் அச்சம்

## கூறுகிறார் தம்பர அமில தேரர்

கொழும்பு, ஜன 19
புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் போது ஒற்றையாட்சி நாடாகுமா என்ற அச்சம் வடக்குக்கும், சமஷ்டி அரசு உருவாகுமா என்ற அச்சம் தென் பகுதிக்கும் ஏற்பட்டுள்ளதாகச் சிரேஷ்ட விரிவுரையாளர் தம்பர அமில தேரர் தெரிவித்துள்ளார்.
புதிய அரசமைப்புச் சட்டத்துக்குப் பயப்படுவது யார் என்ற தலைப்பில் கொழும்பு பொது நூலகத்தில் நேற்று நடைபெற்ற கருத்தரங் கில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
புதிய அரசமைப்புச் சட்டம் அனைத்து மக்களின் விருப்பம் மற்றும் கருத்துக்களின் அடிப்படையில் உருவாக்கப்பட வேண்டும்.
இவற்றைக் கவனத்தில் கொள்ளாது தனித்த நிலைப்பாட்டில் அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கி, அதில் ஒரு வீதமேனும் மாற்றம் ஏற்பட்டால், மீண்டும் 30 வருட காலப் போரைப் போன்ற நிலமையும், 88-89 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட புரட்சியும் ஏற்படக் கூடும்.
புதிய அரசமைப்புச் சட்டம் வேண்டாம் எனவும் திருத்தங்கள் மாத்திரம் போதும் எனவும் சிலர் கூறுகின்றனர். உறுதியளித்தது போல் புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டும்-என்றார். (து)

# தேசிய மனித உரிமைகள் திட்டத்துக்கு அங்கீகாரம்

தேசிய மனித உரிமைகள் செயற்திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. நடப்பு ஆண்டிலிருந்து 2021ஆம்ஆண்டுவரையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள விடயங்களை இது உள்ளடக்கியுள்ளது.
தேசிய மனித உரிமைகள் செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கும் மற்றும் இதன் போது கவனத்திற் கொள்ள வேண்டிய அனைத்து அம்சங்களையும் உள்ளடக்குவதற்காகவும் அமைச்சர்கள் சிலரின் இணைத் தலைமைத்துவத்தின் கீழ் அமைச்சரவைக் குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை கடந்த வருடம் அனுமதி வழங்கியிருந்தது.
இதனடிப்படையில் குறித்த குழுவின் முழுமையான கருத்துக்களை பெற்று தயாரிக்கப்பட்ட ஐந்து வருட 'தேசிய மனித உரிமைகள் செயற்பாட்டுத்திட்டம் அமைச்சர் ஹர்ச டி சில்வாவால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள் ளது. (த-5)

# அமெரிக்க ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய அனுமதி

கொழும்பு, ஜன.19
இரணவிலவில் வொய்ஸ் ஒவ் அமெரிக்கா வானொலி ஒலிபரப்பு நிலையத்தை அமைப்பது தொடர்பாக அமெரிக்காவுடன் செய்து கொள்ளப்பட்டிருந்த உடன்பாட்டை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.
சிலாபம் - இரணவில பகுதியில் சுமார் 520 ஏக்கர் பரப்பளவில் வொய்ஸ் ஒவ் அமெரிக்கா ஒலிபரப்பு கோபுரங்கள் மற்றும் அதற்கான தொழில்நுட்ப வசதிகளை அமைப்பதற்கு அனுமதிக்கும் உடன்பாடு 1983ஆம் ஆண்டு அமெரிக்காவுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டது.
1994ஆம் ஆண்டு இங்கு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வொய்ஸ் ஒவ் அமெரிக்கா ஒலிபரப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
தற்போது சிற்றலை ஒலிபரப்பு நிறுத்தப்படும் சூழலில் இரணவிலவில் உள்ள வொய்ஸ் ஒவ் அமெரிக்கா ஒலிபரப்பு நிலையத்தை மூட அமெரிக்கா முடிவு செய்துள்ளது. தற்போது இதுதொடர்பாக அமெரிக்காவுடன் செய்து கொண்ட உடன்பாட்டை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.
வொய்ஸ் ஒவ் அமெரிக்கா ஒலிபரப்பு நிலையம் அமைந்திருந்த நிலப்பரப்பு அரசின் கட்டுப்பாட்டில் வரவுள்ளது.
அதேவேளை, இந்த நிலப்பரப்பைத் தமக்கு வழங்குமாறு சீனா கோரியிருப்பதாக அதிகாரபூர்வமற்ற தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற)

# தவறுகள் மீண்டும் இழைக்கப்படாது

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஜன.19
கடந்த காலத்தில் இழைக்கப்பட்ட தவறுகள் மீண்டும் ஏற்பட இடமளிக்கப்படமாட்டாது. சகல மக்களுக்கும் சம அந்தஸ்து வழங்கும் நிலை உருவாக்கப்படும்.
இவ்வாறு அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.
சர்வதேச ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
அதிகாரத்தை பகிர்ந்தளித்தல் மற்றும் அரசமைப்பு உருவாக்கம் குறித்து முறையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 13ஆவது திருத்தச் சட்டத்தை முன்னோக்கிக் கொண்டுசெல்லத் தேவையான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுப்பது அவசியம் - என்றார். (ற)

# வடக்கு மக்களில் கால்பங்கினர் வறட்சியால் பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 19
வடக்கு மாகாணத்தின் ஒட்டுமொத்த சனத்தொகையின் கால் பங்கினர் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர்முகாமைத்துவ அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.
வடக்கின் 5 மாவட்டங்களையும் சேர்ந்த 2 லட்சத்து 36 ஆயிரத்து 346 பேர் வறட்சியினால் நேரடியாகப் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இடர்முகாமைத்துவ அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், யாழ். மாவட்டத்தில் 27 ஆயிரத்து 224 குடும்பங்களைச் சேர்ந்த 95 ஆயிரத்து 387 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 8 ஆயிரத்து 846 குடும்பங்களைச் சேர்ந்த 38 ஆயிரத்து 606 பேரும், மன்னார் மாவட்டத்தில் 15 ஆயிரத்து 258 குடும்பங்களைச் சேர்ந்த 51 ஆயிரத்து 369 பேரும், வவுனியா மாவட்டத்தில் 2 ஆயிரத்து 786 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயி ரத்து 644 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 12 ஆயிரத்து 176 குடும்பங்களைச் சேர்ந்த 41 ஆயிரத்து 340 பேரும் வறட்சியினால் பாதிக்கப்பட் டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.
வடக்கு மாகாணம் முழுவதும் 66 ஆயிரத்து 290 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 36 ஆயிரத்து 346 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
நாடு முழு வதும் ஒரு லட்சத்து 71 ஆயிரத்து 407 குடும்பங்களைச் சேர்ந்த 6 லட்சத்து 95 ஆயிரத்து 74 பேர் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

# வீரவன்சவின் கைதை கண்டித்து போராட்டம்

கொழும்பு, ஜன 19
அரச வாகனங்களைத் தவறாகப் பயன்படுத்திய சம்பவம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கைது செய்யப்பட்டதைக் கண்டித்து கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.
இந்த ஆர்ப்பாட்டத்தைப் பிவித்துரு ஹெல உறுமய ஒழுங்கு செய்திருந்தது.
விமல் வீரவன்ச கைது செய்யப்பட்டது போல், பிரதியமைச்சர் லசந்த அழகியவண்ண, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசூமாரசிங்க ஆகியோரும் கைது செய்யப்படவேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கோரினர்.
ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில உட்பட பிவித்துரு ஹெல உறுமயவின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (த)

# அமைச்சர் கபீர் கசீமுக்கு எதிராக முறைப்பாடு பதிவு

கொழும்பு, ஜன.19
அமைச்சர் கபீர் கசீமுக்கு எதிராக லஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழு மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒன்றிணைந்த எதிர்க்கட்சி இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.
150 பில்லியன் ரூபா மோசடி செய்யப்பட்டது என்று கூறப்படும் விடயம் தொடர்பிலேயே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று ஒன்றிணைந்த எதிர்க்கட்சி கூறியுள்ளது.
அண்மைக் காலமாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சியால், அரச அமைச்சர்களின் ஊழல் குற்றச்சாட்டுக்களை வெளிப்படுத்தும் நோக்கோடு, டொப் டென் வெளிப்படுத்தல் என்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இது ஆறாவது முறைப்பாடாகும். பிரதமர் ரணில் விக்ரமசிங்க அமைச்சர்களான மலிக் சமரவிக்ரம, தலதா அதுகோரள, ரவி கருணாநாயக்க போன்றோருக்கு எதிராகவும் இதுபோன்று ஊழல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.
இந்த விடயம் தொடர்பாக நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, கருத்து வெளயிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே, எயார் பஸ் கொள்வனவு நடவடிக்கைகளின்போது அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்தும் வகையில் ஒப்பந்தம் செய்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.
எதிர்காலத்தில் டொப் டென் வரிசை டொப் 30 - 40 எனச் செல்ல வாய்ப்புள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ற)



# டிஜிற்றல் கல்விமுறை இலங்கையில் மேம்படும்

## உதவி வழங்குகிறது சுவிற்சர்லாந்து

இலங்கையில் டிஜிற்றல் கல்வி முறைமையை மேம்படுத்துவதற்கான ஆதரவையும், அது தொடர்பிலான ஆலோசனைகளையும் வழங்க தயாராக இருப்பதாக சுவிஸ்சர்லாந்து மைக்ரோசொப்ட் கிளையின் தலைவர் பிலிப் னே கார்ட்டோஸ் தெரிவித்துள்ளார்.
இலங்கையின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
டிஜிற்றல் முறைமையை வளர்த்தெடுப்பதற்கான முறையான தலைவர்கள் இலங்கையில் உருவாகவேண்டும். எதிர்காலத்தில் காகித கோப்புகள் இல்லாமல் அனைத்துத் துறைகளிலும் கணினியின் பயன்பாடே மேலோங்கவேண்டும். வேகமான கல்வியறிவை இலங்கையில் ஏற்படுத்தவதுற்கு ஒத்துழைப்பு வழ்ங்கத் தயாராக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (த)

# தமிழர் பாரம்பரியங்களை அழிக்கின்றது மேற்குலகம்

## ஜல்லிக்கட்டுக்கு ஆதரவான போராட்டத்தில் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் ஜன. 19
பழமை வாய்ந்த தமிழரான எங்களின் பாரம்பரியங்களையும் கலாசாரங்களையும் மேற்குலக நாடுகள் அழித்து வருகின்றன.
இவ்வாறு நேற்று நல்லூரில் நடைபெற்ற ஜல்லிக்கட்டுக்கு ஆதரவான போராட்டத்தில் கலந்துகொண்டவர்களில் ஒருவர் தெரிவித்தார்.
தமிழ் நாட்டில் இடம்பெற்றுவரும் ஜல்லிக் கட்டு தடையை நீக்கும் போராட்டத்துக்கு ஆதரவாக நல்லூர் ஆலய முன்றிலில் யாழ்ப்பான இளைஞர்கள் நேற்றுப் போராட்டம் ஒன்றை நடத்தினர். முகநூல் ஊடாக ஒன்று சேர்ந்த இளைஞர்கள், பெரியவர்கள், பெண்கள் சிறுவர்கள் எனப் பலரும் இதில் பங்கேற்றனர்.
அதில் கலந்துகொண்ட இளைஞர் ஒருவர் தெரிவித்ததாவது:
தமிழராகிய எங்களின் பண்டையகால கலாசார விழுமியங்களை அழிக்கும் நடவடிக்கையின் ஒரு அங்கமாகவே ஜல்லிக்கட்டுக்கு தமிழ்நாட்டில் தடை விதிக்கப்பட்டுள்ளது. முன்னைய காலத்தில் எங்களிடம் இருந்த நாட்டுக் கோழிகளை அழித்துவிட்டனர். அதே போல நாட்டு நாய்களை அழித்து வருகின்றனர். பொமேரியன் போன்ற நாய்கள் அறிமுகப்படுத் தப்பட்டு வருகின்றன. அவற்றுக்கான உணவுகளை நாம் அதிக விலை கொடுத்தே வாங்க வேண்டியுள்ளது. இவையல்லாம் வெளிநாடுகளின் வியாபார நுணுக்கம்.
ராஜஸ்தானில ஒட்டகப் பந்தயம், இந்திய இராணுவத்தில் குதிரைப் படைகள் உள்ளன. இவற்றைக் கண்டுகொள்ளாத அரசு தமிழரின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டுக்குத் தடை விதித்துள்ளது. இதன் மூலம் தமிழர்கள் பிரதேசங்களில் வளர்த்து வரும் மாடுகளை அழித்து வெளிநாட்டுக் காரர்கள் தங்களின் ஜெர்சி இன மாடுகளை இறக்குமதி செய்து வருகின் றனர்.
நாங்கள் வளர்க்கும் பசு மாடுகள் சாதாரணமாக நான்கு அல்லது ஐந்து லீற்றர் பாலையேதருகின்றன. ஆனால் ஜெர்சி இன மாடுகள் பதினைந்து லீற்றருக்கு மேல் பால் தருகின்றன. இதிலிருந்தே அதன் பக்க விளைவுககளை நாம் அறிந்து கொள்ளவேண்டும். இரத்தத்துக்கு பதிலாகச் சதைகளைத் தான் உருக்கி ஜெர்சி மாடுகள் பாலாகத் தருகின்றன.
எங்கள் நாட்டில் பொங்கல் பண்டிகைக்காக விடுமுறைகள் வழங்குகின்றனர். எமது நாட்டில் தேசிய பொங்கல் கொண்டாடுகின்றனர். ஆனால் ஜனநாயகம் என்று குரல் கொடுக்கும் இந்திய நாட்டு தலைவர்கள் பொங்கல் விழாக்களுக்கு விடுமுறை கொடுப்பதில்லை.
இப்படிக் காலத்துக்கு ஏற்ற மாதிரி மேற்குலக நாடுகள் பழமை வாய்ந்த தமிழரான எங்களின் பாரம்பரியங்களையும் கலாசாரங்களையும் அழித்து வருகின்றன. எனவே தமிழ் நாட்டு மக்களுக்காக ஈழத் தமிழர்களாகிய நாமும் இருக்கின்றோம் என்பதை உலகம் புரிந்து கொள்ளவேண்டும் - என்றார். (த-8)

# மருத்துவ மாணவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு

யாழ்ப்பாணம் ஜன 19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ மாணவர்களின் வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டத்துக்கு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் கட்சியின் செயலர் கா.செந்திவேல் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

இலவச மருத்துவக் கல்லூரியையும் மக்களுக்கான இலவச மருத்துவத்தையும் பாதுகாக்கக் கோரியும், தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்குவதை தடை செய்யக் கோரியும் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் ஒருவாரகால வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். இந்தப் போராட்டத்துக்கு எமது கட்சி முழு ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றது.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் 2008 ஆம் ஆண்டு சைற்றம் என்ற தெற்காசிய தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ கல்வி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிறுவனத்தில் 2011 ஆம் ஆண்டு மருத்துவ பட்டப் படிப்புக்கான அலகு உரு வாக்கப்பட்டு பெருந்தொகை பணம் செலுத்தும் மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். இது தனியார் மருத்துவக் கல்லூரிகளை எமது நாட்டுக்குள் கொண்டுவருவதற்கான முதலாவது முயற்சியாகவே அமைந்தது.

இதனை ஆரம்பத்திலிருந்தே அனைத் துப் பல்கலைக்கழக மாணவர்களும் ஆசிரியர்களும் சமூக ஆர்வலர்களும் எதிர்த்தனர். ஆனால் மைத்திரி அரசிலும் இந்தச் செயற்பாடுகள் முன் னெடுக்கப்படுகின்றன.

இதை அரசு தடை செய்ய வேண்டும். தனியார் நிறுவனங்களிடம் மருத்துவத் துறையை ஒப்படைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு எமது கட்சியின் ஆதரவு எப்போதும் வழங்கப்படும் - என்றார். (ந-8)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் சாவு

ஹோமாகம, பிற்றிபன்னவில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தவர் மீகொடை, காமினிபுரத்தைச் சேர்ந்தவர். மோட்டார் சைக்கிளில் சென்ற நபரொருவரே துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

**வேலையாள் தேவை**

வியாபார நிலையம் ஒன்றுக்கு வேலையாள் தேவை. (கணினி அறிவு இருத்தல் வேண்டும்.)

071 702 4116

**உழவு இயந்திரம் விற்பனைக்கு**

25 ஸ்ரீ தொடர் இலக்கமுடைய, நல்ல நிலையில் உள்ள உழவு இயந்திரம் (பெட்டி இல்லாமல் உடன் விற்பனைக்குண்டு.

விவரங்களுக்கு: 077 183 2404

**பணிப்பெண் தேவை**

நெல்லியடியில் உள்ள வீடு ஒன்றுக்கு வீட்டுவேலைகள் செய்வதற்கு பணிப்பெண் தேவை. சாப்பாட்டுடன் இலவச தங்குமிடவசதி உண்டு.

விவரங்களுக்கு: 076 347 6733

**தேவை**

(CJ Promoters)தமது விளம்பர மற்றும் வர்த்தக சேவையினை மேம்படுத்தும் நிறுவனமானது புதியதாக சேவையாளர்களை எடுக்கவுள்ளோம். (Promoters, Models, Field Workers) பகுதி நேரம் மற்றும் முழு நேரம் (கல்வி பயில்பவர்களும்) பங்குபற்றலாம். நாள் ஒன்றுக்கு (1500-3500) சம்பளம்.

077 254 6511, Prasanna.
வடக்கு கிழக்கு மாகாணங்கள்

**ORIFLAME**
SWEDEN

**Oriflame (ஓரிப்ளேம்) நிறுவனம் நடத்தும் பயிற்சிப்பட்டறை**

50 வருட காலமாக 60 நாடுகளுக்கு மேல் அழகு சாதன பொருள்களுக்கு உலகலாவிய ரீதியில் பிரசித்தி பெற்ற Oriflame (ஓரிப்ளேம்) நிறுவனம் நடத்தும் Wellness (வெல்னெஸ்) பயிற்சிப்பட்டறை.

- ஆரோக்கியமான வாழ்க்கைக்கு
- அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான போஷாக்கு
- உடல் ஆரோக்கியமும் உடற்பயிற்சியும்
- உணவும் ஊட்டச்சத்தும்
- 'OMRON KARADA' முழு உடல் ஆய்வு (Full Body Analysis) அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் இலவசமாக செய்யப்படும்.
- Oriflame உற்பத்தி பொருள்கள் பற்றிய அறிவு

இவை அனைத்தையும் முற்றிலும் இலவசமாக பெற்றுக்கொள்ள

சொர்ணாம்பிகை மண்டபம் (TCT Hall)
527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

திகதி: 21.01.2017 (சனிக்கிழமை)
நேரம்: மு.ப 9.30-பி.ப 1.30

மேலதிக விவரங்களுக்கு: 076 877 2214

(J/7768) (22,17,18)

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஜன.19

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த வாரம் வெளியாகின. பாடசாலை ரீதியாகக் கிடைத்த பெறுபேறுகளின் விவரம் வருமாறு:

**யா/வயாவிளான் மத்திய கல்லூரி விஞ்ஞானப்பிரிவு**
ரி.நிசாண்டன்சன் ஏபிஎஸ்

**பொறி.தொ.நு**
எம்.விஷ்ணுஜான் பி2சி, ஏ.ஏனோஸ் 3சி

**உயிர்.மு.தொ.நு**
கே.கிருபன் பி2சி, அன்பரசி 2பிசி

**கலை**
கே.லக்ஜன் 3ஏ, எஸ். ஸ்ரீபவன் 3பி, இ.சுகன்யா 2ஏபி, பி.டிலுக்னி ஏ2பி, எஸ்.சயந்தன் ஏபிசி, எஸ்.சுயாதினி ஏபிஎஸ், பி.சரண்யா ஏபிஎஸ்

**வர்த்தகப்பிரிவு**
கே.கனிஸ்ரன் 3ஏ, ஏ.சஞ்சீவ்குமார் 2ஏபி, கே.மஜிதா 2ஏசி, ஆர்.நிரோஜா 2ஏசி, ஏ.அன்பினி 2ஏசி, இ.தனுயா ஏ2சி, ரி.நிதூசன் ஏசிஎஸ்.

# இடமாற்றத்துக்கான உத்தரவை மதிக்காதோர் மீது நடவடிக்கை

கொழும்பு, ஜன.19

இடமாற்ற உத்தரவு களுக்கு அமைய புதிய பதவிகளை ஏற்கத் தவறிய அதிகாரிகள் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு தெரிவித்தது.

அமைச்சின் செயலாளர் ஜே.ஏ.ரத்னசிறி விடுத்துள்ள அறிக்கை யிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக சேவையைச் சேர்ந்த அதிகாரிகள் பலருக்கு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டது.

ஒரு வாரத்துக்குள் அவர்கள் புதிய கடமைகளை பொறுப்பேற்க வேண்டும்.

எனினும் ஒருசில அதிகாரிகள் இடமாற்ற உத்தரவை பொருட்படுத்தாது ஏற்கனவே கடமையாற்றிய இடங்களிலேயே கடமையாற்றுகின்றனர் என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.- என்று அமைச்சின் செயலாளர் சுட்டிக் காட்டினார். (ற)

**ஸ்ரீ சாயி துர்க்கா தேவி ஆலயம் கொக்குவில்**

**கணக்காய்வு**

மேற்படி ஆலயத்தின் 2016 ஆம் நிதியாண்டின் (01.01.2016 - 31.12.2016) வரையிலான வரவு செலவு கணக்கினைப் பரிசோதிப்பதற்கு பதிவு செய்யப்பட்ட கணக்காய்வு நிறுவனங்களிடமிருந்து 25.01.2017 வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விவரங்களை ஆலய பணிமனையில் ஆலயம் திறந்திருக்கும் நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

கோணாவளை ஒழுங்கை, கொக்குவில்.

செயலாளர்
பரிபாலன சபை

**சட்டக் கல்லூரி பிரவேசப் பரீட்சை வகுப்புகள் - 2017**

கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியாவில் ஆரம்பமாக உள்ளன
நீங்களும் சட்டத்தரணி ஆகலாம்

தொடர்பு: **கே.ஜீ.ஜோன்**
சட்டத்தரணி
55/5, விவேகானந்த மேடு, கொழும்பு - 13.
தொ.பே. 077 670 5511, 011 311 9975

(வி.186) (13.17)

**ஸ்கந்தாவின் சாதனையாளர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்**



K.யதுர்ஷாயன்
தேசிய மட்டத்தில் முதலாம் இடம்
இயந்திரவியல் தொழில்நுட்பப் பிரிவு 3A



A. கோகுலன்
கணிதப் பிரிவு 3A

**கணித விஞ்ஞானப் பிரிவு**

A. கோகுலன், S. ஆரமுதன், P. கோவர்த்தனன், P. காண்டீபன், S. அனுஷ்ரன், இ. துஷ்யந்தன், V. கீர்த்தனா

**வர்த்தக – கலைப்பிரிவு**

அ. புவனதர்ஷன், S. கீர்த்தனா, க.நியிதா, S. பிரதீபன், S. டசிந்தா, அனற் லோஜிகா

**பொறியியல் , உயிரியல் தொழில்நுட்பம்**

க. யதுர்ஷாயன், க. கோகுலலக்ஷன், என். ராதிகா, ஜெ. ஜோயல் ஜெயப்பிரகாஷ், இ. சயந்தன், இ. சர்மினி, இ. ஜங்கரன், ந. அருள்பிரியன், ரி.சம்சிற்றா, அ. யூட், ஜெ. கௌசிகன், இ.திலக்ஷனா, நா. கனுஜன்

பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்களையும் இவர்களை வழிநடத்திய ஆசிரியர்களையும் கல்லூரியை வளர்ச்சிப் பாதையில் பயணிக்கச் செய்யும்
அதிபர் திரு்மிகு மு. செல்வஸ்தான்
அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர் தாய்ச்சங்கம்,
ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

# நவீன வசதிகளுடன் கள்ளுத் தவறணைகள்

## சாவகச்சேரி பனை தென்னைவள கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 19

கள்ளுத் தவறணைகள் மற்றும் அவற்றுடன் இணைந்த வளாகத்தைச் சுகாதார விதி முறைகளுக்கு அமைய வைத்திருப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சாவகச்சேரி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவித்தனர்.

பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு 45 வருடங்கள் நிறைவு பெறுகின்றன. இந்த நிலையில் சங்கம் தனது கிளைகளை நவீனப்படுத்தி வாடிக்கையாளர்களைக் கவரும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

அங்கத்தவர்கள் அதிகமாக உள்ள இடங்களில் கள்ளுத் தவறணைகளை ஆரம்பித்து நடத்தி வருகின்றது. இடப்பெயர்வின்போது சங்கக் கிளைகள் பல இல்லாமல் போய்விட்டன. அவற்றில் சிலவற்றை மீள அமைக்க முடியாததால் கிளைகளின் எண்ணிக்கையைக் குறைத்துச் செயற்படுத்தி வருகின்றது.

கள்ளுத் தவறணைகளுக்கு வரும் புலம்பெயர் மக்கள் மற்றும் தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

சங்கத்தின் கிளைகளை நவீனமயப்படுத்துவதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு கிளை வளாகங்களிலும் கிணறு, மலசலகூடம் அமைப்பதுடன் வளாகத்தைச் சுற்றி மதில் அமைத்துத் தூய்மையாக வைத்திருக்கச் சங்க நிர்வாகம் முடிவுசெய்துள்ளது. இதன்படி சங்கத்தின் இரண்டு கிளைகள் நவீன கள்ளுத் தவறணைகளாக மாற்றப்பட்டுள்ளன. கனகன்புளியடி இராமாவில், கைதடிச் சந்தி ஆகிய இரண்டு கிளைகளும் நவீன கள்ளுத் தவறணைகளாக மாற்றப்படவுள்ளன.

முன்னைய காலங்களில் கள்ளுத் தவறணைகளைச் சுற்றி பற்றைகள் காணப்பட்டன. அவை தற்போது அகற்றப்பட்டுச் சுகாதார விதி முறைகளுக்கு ஏற்ப சுற்று மதில்களும் கிணறு, மலசலகூட வசதிகளுடன் மாற்றப்படுகின்றன என்று சங்கத்தினர் தெரிவித்தனர். (த-4,9)



# கைதடிப் பிரதேசத்தின் மாணவர் கௌரவிப்பு

தென்மராட்சி ஜன. 19

கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற கைதடிப் பிரதேச மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கைதடி லயன்ஸ் கழகத்தினால் பொங்கல் தினத்தன்று கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தில் நடத்தப்பட்டது.

பன்னாட்டு லயன்ஸ் கழகங்களின் 306 பி1 மாவட்ட தலைவர் லயன் க.முத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பன்னாட்டு லயன்ஸ் கழகங்களின் 306 பி 1 மாவட்ட ஆளுநர் லயன் வைத்திய கலாநிதி வை.தியாகராசா கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌர வித்தார். (த-9)

# கட்டடத் தொழிலாளி தவறி விழுந்து சாவு

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ்ப்பாண நகரில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பாதுகாப்பு இன்றிக் கட்டட வேலையில் ஈடுபட்டிருந்த தொழிலாளி முதலாம் மாடியிலிருந்து தவறி விழுந்து சிகிச்சை பயனளிக்காது நேற்றுக் காலை உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 12ஆம் திகதி அவர் மாடியிலிருந்து தவறிவிழுந்துள்ளார். சம்பவத்தில் சுழிபுரம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சின்னராசா பெனடிக்ற் (வயது - 31) என்பவரே உயிரிழந்தார். அவர் ஒரு பிள்ளையின் தந்தை.

பாதுகாப்பு அங்கிகள் இன்றியே அவர் கட்டடப் பணியில் ஈடுபட்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. காயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மற்றும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-4)

# சிக்கனம் பேணுங்கள்

கொழும்பு, ஜன 19

நீரையும் மின்சாரத்தையும் வீண் விரயம் செய்யாது நாட்டு மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

எக்காரணம் கொண்டும் நீர், மின் கட்டணங்கள் அதிகரிக்கப்படமாட்டாது. மேலும் மின் துண்டிப்போ அல்லது நீர் விநியோகத்துக்குத் தடையோ ஏற்படாது. அதற்கு மாறாகச் சில பிரதேசங்களில் மாத்திரம் நீர் விநியோகம் மட்டுப்படுத்தப்படும் என அரசு திட்டவட்டமாகத் தெரிவித்தது.

வறட்சியான காலநிலை தொடர்பான சிறப்பு ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தலைவர் கே.ஏ அன்சார் மற்றும் மின்சார சபைத் தலைவர் அநுர விஜயபால ஆகியோர் மேற்கண்டவாறு தெரிவித்தனர். (த)

# ஜி.எஸ்.பி. வரிச் சலுகைக்கு 27 பன்னாட்டுச் சாசனங்கள்

*ஐரோப்பிய ஒன்றியம் விளக்கம்*

கொழும்பு, ஜன. 19

இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை வழங்கும் விடயத்தில், பன்னாட்டுத் தரத்திலான 27 சாசனங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றதா என்பது தொடர்பில் மாத்திரமே கவனம் செலுத்துவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

மக்களின் வாழ்க்கையில் தாக்கம் செலுத்திய நீண்ட கால பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதற்காக இலங்கை முன்னெடுத்த தலைமைத்துவத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில், ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வழங்கத் தீர்மானித்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்காக முன்வைத்த விண்ணப்பத்தின் பிரகாரம், இலங்கையின் மனித உரிமைகள், தொழிலாளர்கள் உரிமைகள், சூழல் பாதுகாப்பு மற்றும் நல்லாட்சி தொடர்பிலான 27 பன்னாட்டுச் சாசனங்களை நடைமுறைப்படுத்துவதில் கண்டுள்ள முன்னேற்றம் மாத்திரமே கவனத்துக் கொள்ளப்பட்டதாக ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசு, குறித்த விடயங்களை நடைமுறைப்படுத்தும்போது அதனைக் கண்காணிப்பதற்கும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவதற்கும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-4)



# பலசரக்குக் கடையில் தீ; பொருள்கள் எரிந்து நாசம்

யாழ்ப்பாணம், ஜன.19

கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள பல சரக்குக் கடையில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக சில பொருள்கள் எரிந்து சாம்பலாகியுள்ளன.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் குறித்த கடை உரிமையாளர் கடையைத் திறந்த பின்னர் சுவாமிப் படத் தட்டில் ஊதுபத்தி கொளுத்தி வைத்துள்ளார். பின்னர் வேலை ஒன்றுக்காக அவசரமாக வெளியே சென்றுள்ளார்.

கடையில் இருந்து புகை வெளியேறுவதை அருகில் உள்ள கடைக் காரர் அவதானித்துள்ளார். உடனடியாக அங்கிருந்தவர்களின் உதவியுடன் கடையை உடைத்துத் தீயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. கடை உரிமையாளருக்கும் தகவல் வழங்கப்பட்டது.

யாழ். மாநகர சபைத் தீயணைப்புப் பிரிவுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. தீயணைப்புப் பிரிவினர் வருவதற்கு முன்னரே அங்கு நின்றவர்களால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-8)

## மெய்வன்மைப் போட்டி

கைதடி குருசாமி வித்தியா லய இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக் கிழமை பி.ப.2.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில்நடைபெறும். வித்தியாலய அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் நடைபெறும் போட்டிக்குத் தலைமை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து கொள்வர். (த-9)

# தென்னையில் ஏறி உயிரை மாய்க்க முயன்றவர் கைது

யாழ்ப்பாணம் ஜன. 19

மனைவியுடன் ஏற்பட்ட குடும்பப் பிரச்சினை காரணமாகத் தென்னை மரத்தில் ஏறி தற்கொலை செய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் மூன்று பிள்ளைகளின் தந்தையொருவர்பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

கோண்டாவில் கிழக்குப் பகுதியில் வசிக்கும் மூன்று பிள்ளைகளின் தந்தையான குறித்த குடும்பஸ்தர் அடிக்கடி தனது மனைவியுடன் பிரச்சினைப்படுவதை வாடிக்கையாகக் கொண்டவர்.

கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட பிரச்சினை காரணமாகவே அவர் தென்னை மரத்தின் வட்டுக்குள் ஏறி இருந்து கொண்டு தற்கொலை செய்யப் போவதாக மிரட்டியுள்ளார். அவரது மிரட்டலால் பெருமளவு மக்கள் தென்னை மரத்தின் கீழ் ஒன்று கூடினர்.

இது குறித்துகோப்பாய்பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த கோப்பாய் பொலிஸார் சிரமத்தின் மத்தியில் அவரைத் தென்னை மரத்திலிருந்து மீட்டனர். அப்போது அவர் மதுபோதையில் இருந்தமை தெரிய வந்தது. அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுத் தற்கொலைக்கு முயற்சித்த குற்றச்சாட்டில் யாழ் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

அவரை 50 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் விடுவித்த பதில் நீதிவான் வி, ரி. சிவலிங்கம், அவரை யாழ். போதனா வைத்தியசாலையில் உளநல ஆலோசனைக்கு உட்படுத்துமாறு பணித்தார். (த-103)

# கிராமத்துக்கு ஒரு மில்லியன் திட்டம் சரி பாதியாக குறைப்பு

நல்லாட்சி அரசின் கிராமத்துக்கு ஒரு மில்லியன் திட்டம் இந்த ஆண்டு முதல் சரி பாதியாகக் குறைக்கப்பட் டுள்ளதோடு திட்ட முறைமையும் மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வந்த குறித்த திட்டத்தின் கீழ் கிராம சேவகர் பிரிவு ரீதியில் ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கப்படும். அது கிராம அமைப்புக்களால் பரிந்துரைக்கப்படும் திட்டத்துக்கே பயன்படுத்தப்பட்டு வந்தது. இவ்வாறு இரு ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த இந்தத் திட்டம் இந்த ஆண்டு முதல் 5 லட்சம் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒதுக்கப்படும் 5 லட்சம் ரூபாவில் 70 வீத நிதியானது வாழ்வாதாரத்துக்கே பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் குறித்த அமைச்சால் சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த-101)

## குடிதண்ணீர்க் கட்டணத்தை செலுத்த இலகுவான முறை

யாழ்ப்பாணம் ஜன 19
யாழ்.மாநகர சபை குடிதண்ணீர்ச் சேவையைப் பெற்றுக்கொள்ளும் பொதுமக்களின் சேவையிடங்களிலேயே கட்டணம் அறவிடும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் அறிவித்துள்ளார்.
யாழ். மாநகர சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் ஊடாக கட்டணம் அறவிடும் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனவே குறித்த அறவீட்டா ளர்களிடம் குடிதண்ணீருக்கான கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டைச் சரி பார்த்துப் பெற்றுக்கொள்ளுமாறு ஆணையாளர் கேட்டுள்ளார். (த-8)

## ஆசிரியர், மாணவர்களை சக்திப்படுத்த நடவடிக்கை

### நல்லிணக்க வாரத்தில் ஏற்பாடுகள்

கொழும்பு, ஜன. 19
சகல பாடசாலைகளிலும் ஆசிரியர்களையும் மாணவர்களையும் சமாதானத்துக்கான மாற்றத்தை ஏற்படுத்தும் முகவர்களாகவும் தூதுவர்களாகவும் சக்திப்படுத்தும் நோக்கிலேயே தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க வாரம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
இவ்வாறு தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு தெரிவித்தது.
தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க வாரம் நாடு முழுவதும் இடம்பெற்று வருகிறது. கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் இந்த நிகழ்வு இடம்பெற்றது. அதில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார்.
அது தொடர்பான அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
ஜனவரி 8ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரையிலான காலத்தை நல்லிணக்க வாரமாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பிரகடனப்படுத்தினார். இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் முதல் தடவையாக நல்லிணக்க வாரம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதோடு, பிரகடனத்தின் ஊடாக வேறுபட்ட இன, மத, கலாசார மற்றும் பிரதேச சமூகங்களுக்கிடையில் ஒருமைப்பாடு, நல்லிணக்கம், சகோதரத்துவம் மற்றும் நிலைபேறானதும் நிரந்தரமானதுமான சமாதானம் என்பவற்றை ஏற்படுத்துவதன் மூலம் இலங்கையை ஐக்கியமானதும் வளமானதும் செழிப்பானதுமான நாடாக மாற்றுவது நோக்கம் - என்றுள்ளது. (த-4)

# ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக இன்று கிளிநொச்சியிலும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 19
தமிழகத்தில் பெரும் எழுச்சி கொண்டுள்ள ஜல்லிக்கட்டுத் தடை நீக்கும் போராட்டத்துக்கு ஆதரவாகக் கிளிநொச்சியிலும் கவனவீர்ப்பு நிகழ்வு ஒன்று நடைபெறவுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட கல்வி கலாசார அமையம் தெரிவித்துள்ளது.
இன்று வியாழக்கிழமை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் இந்தக் கவனவீர்ப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.
ஏறுதழுவுதல் எம் உரிமை என்ற தொனிப் பொருளில் கலாசார உரிமைக்காகக் காளையாய் வெகுண்டெழுந்திருக்கும் தாய்த் தமிழகத்துக்காக ஈழத் தமிழர்கள் நாம் குரல் கொடுப்போம் என்று கல்வி கலாசார அமையம் கூறியுள்ளது. (த-37)




## அமைச்சர் முஸ்தபாவை சந்திப்பர் விவசாயிகள்

### தமது கோரிக்கைகளை முன்வைப்பதற்காக

யாழ்ப்பாணம், ஜன. 19
வயல் பகுதிகளில் சிறு பாய்ச்சல், வாய்க்கால்கள் சீரமைப்பு உள்ளிட்ட பல கோரிக்கைகளைத் தீர்க் குமாறு மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் கோரவுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.
கிளிநொச்சியில் இடம்பெறும் இபாட் திட்டப் பணிகளைப் பார்வையிட மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா செல்லவுள்ளார். இதன்போது தமது கோரிக்கைகளை முன்வைக்கக் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் தீர்மானித்துள்ளனர்.
கிளிநொச்சி மாவட்டத்தில் இபாட் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் திட்டங்களான இரணைமடுக் குளம் மற்றும் வாய்க்கால்கள், பாலங்கள் என்பனவற்றின் சீரமைப்புக்களைப் பார்வையிடும் நோக்கில் அமைச்சர் அங்கு செல்லவுள்ளார்.
அவர் இரணைமடுக் குளப்பகுதியை பார்வையிடும் சமயம் விவசாயப்பிரதிநிதிகள் அமைச்சரைச் சந்திக்கவுள்ளனர்.
வயல் பிரதேசங்களில் சிறு பாய்ச்சல் வாய்க்கால்கள் சீரமைப்பு மற்றும் வயல்களுக்குச் செல்லும் பாதைகள் சீரமைப்பு ஆகிய இரு பணிகளையும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விவசாயிகள் அமைச்சரிடம் கோரவுள்ளனர். (த-101)

## தாக்குதல் நடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்காத பொலிஸ்

### மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 19
யாழ்ப்பாணம் சுண்டுக்குழிப் பகுதியில் வீடு புகுந்து தாக்குதல் நடத்தியவர்கள் தொடர்பில் ஆதாரத்துடன் பொலிஸாரிடம் முறையிடப்பட்ட போதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு அவர்கள் மறுப்பதாக மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று முறையிடப்பட்டுள்ளது.
அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
சுண்டுக்குழிப் பகுதியில் உள்ள ஒருவரின் வீட்டுக்குள் கடந்த 15ஆம் திகதி அதிகாலை வேளை 6 பேர் கொண்ட கும்பல் ஒன்று வீட்டின் பாதுகாப்பு வேலியை உடைத்து உட்புகுந்தது. அவர்கள் வீட்டில் பல உடைமைகளையும் சேதப்படுத்திச் சென்றனர். இவ்வாறு சேதப்படுத்திய குழுவிலிருந்த ஆறு பேரில் இருவர் வீட்டாரால் இனம் காணப்பட்டனர்.
இவர்கள் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டபோதிலும் பொலிஸார் எந்தவித மான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது இணக்கமாகச் செல்லுங்கள் எனவும், இணக்க சபையில் சென்று முறையிடுங்கள் எனவும் கூறுகின்றனர்.
பொலிஸார் நடவடிக்கை மேற்கொள்ளாமை எமக்குச்சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. இது தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் பொலிஸாரை அறிவுறுத்துமாறு கோரவேண்டும் என வீட்டார் தமது முறைப்பாட்டில் கூறியுள்ளனர். (த-101)

## இன்று மின் தடை

யாழ்ப்பாணம், ஜன.19
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வியாழக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சிப் பிரதேசத்தில் இளமருதங்குளம், மூன்றுமுறிப்பு, புதுக்குடியிருப்பு, கோம்பாவில், இரணைப்பாலை, மூங்கிலாறு, உடையார்கட்டு, கைவேலி, ஹைட்ராமனி ஆடைத்தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் -
வவுனியாப் பிரதேசத்தில் கொக்காவிலிலிருந்து புளியங்குளம்வரை, தாண்டிக்குளத்திலிருந்து சின்னவலயங்கட்டுவரை, ஓமந்தை வீட்டுத்திட்டம் , யுனியன் அலையன்ஸ் லிமிற்ரெட், ஓமந்தை ஐ.சி.ரி கல்லூரி, ஓமந்தை மீன்பிடி வலைத்தொழிற்சாலை, பறயனாலங்குளத்திலிருந்து முகத்தாங்குளம் வரை, மெனிக்பாம் 2,3 மற்றும் 4 ஆகிய இடங்களிலும் -
மன்னார் பிரதேசத்தில் தரவன்கோட்டையிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடக்கு மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார். (த-10)

## கேப்பாப்புலவில் காணி துப்புரவு செய்ய அனுமதி

முல்லைத்தீவு, ஜன. 19
கேப்பாப்புலவில் உள்ள புலக்குடியிருப்புப் பகுதியில் உள்ள தங்கள் காணிகளை துப்புரவு செய்வதற்கு இராணுவத்தினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு, கேப்பாப்புலவில் இராணுவத்தின் பிடியில் உள்ள சில பகுதிகளை எதிர்வரும் 25ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால விடுவிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இதனையடுத்து கேப்பாபுலவு புலக்குடியிருப்புப் பகுதியில் உள்ள காணி உரிமையாளர்களை முள்ளியவளையில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்குச் சென்று உரிய அனுமதிக் கடிதத்தைப் பெற்று துப்புரவு செய்யும் பணிகளை ஆரம்பிக்குமாறு இராணுவத்தினர் தெரிவித்துள்ளதாக கிராமமக்கள் கூறினர். (த-7)

## சட்டவிரோதமாக மணல் ஏற்றியவர் செலுத்தினார் ரூ. 40000 தண்டம்

உழவு இயந்திரத்தில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்றவருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தது சாவகச்சேரி நீதிமன்று.
தென்மராட்சி பாலாவியில் வசிக்கும் ஒருவரே சட்டவிரோதமாக மணல் ஏற்றியுள்ளார்.
கொடிகாமம் பொலிஸார் அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர். நீதிமன்றில் குற்றத்தை அவர் ஒப்புக்கொண்டார். இதனையடுத்து அவருக்கு 40 ஆயிம் ரூபா தண்டம் விதித்து நீதிமன்று தீர்ப்பளித்தது. (த-4,9)

## வல்வையின் முதுசொம் நூல் வெளியீடு நாளை

யாழ்ப்பாணம், ஜன. 19
வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவையால் வல்வையின் முதுசொம் என்ற நூல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் த.ஜெயசீலன் தலைமையில் வடமராட்சி வடக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
இந்த நிகழ்வில் வாழ்த்துரையை கல்வி அமைச்சின் முன்னாள் செயலர் சுந்தரம் டிவகலாலா, யோ.இருதயராஜா ஆகியோரும், நூல் வெளியீட்டு உரையை ஓய்வுநிலை வங்கி முகாமையாளர் ந.சிவரத்தினமும் நிகழ்த்துவர். (த-8)

## உள்ளூராட்சி அமைச்சர் நாளை யாழ். வருகிறார்

### நெடுந்தாரகை சேவையை ஆரம்பித்து வைப்பதற்காக

யாழ்ப்பாணம், ஜன. 19
நெடுந்தாரகையின் முதல் பயண நிகழ்வில் பங்கேற்பதற்காக ஆஸ்திரேலியத் தூதுவர், உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் ஆகியோருடன் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா நாளை யாழ்ப்பாணம் வருகிறார்.
உலக வங்கி மற்றும் ஆஸ்ரேலியாவின் உதவியுடன் குறிகட்டுவான் - நெடுந்தீவு இடையிலான பயணிகள் போக்குவரத்துக்காக 150 மில்லியன் ரூபா செலவில் நெடுந்தாரகை படகு கட்டப்பட்டுள்ளது. இலங்கை படகுக் கட்டுமான நிறுவனமான டொக்யாட்டினால் 80 இருக்கைகள் வசதியுடன் இந்தப் படகு கட்டப்பட்டது.
இந்தப் படகின் மாலுமிகளாக நெடுந்தீவைச் சேர்ந்த 5 இளைஞர்கள் இலங்கைத் துறைமுக அதிகார சபையினால் பயிற்றுவிக்கப்படுள்ளனர். நெடுந்தாரகைக்கு முதல் ஒரு ஆண்டுக்கான முழுமையான காப்புறுதி செலுத்தப்பட்டுள்ளது. அதன் காப்புறுதிப் பணம் 36 லட்சம் ரூபாவாகும்.
நெடுந்தாரகையின் சேவையை வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண முதலமைச்சர், மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர், இலங்கைக்கான ஆஸ்ரேலியத் தூதுவர் மற்றும் உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் ஆகியோர் இணைந்து நாளை ஆரம்பித்து வைக்கவுள்ளனர். (த-101)



World Saiva Mission
Unity in diversity

# "WORLD SAIVA MISSION" - SRILANKA

*"Excellent Service Mission For Humanity"*

## உலக சைவத் திருச்சபை - இலங்கை

### மாபெரும் சிவ மகாமந்திர மகாயாகம்

இலங்கை மணித் திருநாட்டில் சாந்தி, சமாதானம் நிரந்தரமாக அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டி
உலக சைவத் திருச்சபை - இலங்கை மேற்கொள்ளும் மகாயாகம் பங்குபற்றுவோர்களுக்கு

1. சகல காரிய சித்தியும் கைகூடும்
2. வல்வினைகள் அகலும்
3. கொடிய நோய்களைத் நீக்கும்
4. வேண்டியவை கைகூடும்
5. ஆபத்துக்கள் அகலும்
6. ஊர் மக்களுக்கும் நாட்டுக்கும் நல்லது

**சர்வ மங்கலங்களையும் தரும் "சிவ" நாமத்தின் மகிமையை உணர்வோம்**
**சிவ மகாயாகம் செய்வோம் பெறுதற்கரிய பேறைப் பெறுவோம்.**

சகல அன்பர்களையும் அழைக்கின்றோம். அனைவரும் வருகை தந்து இந்த மகாயாகத்தில் கலந்துகொள்ளவும்.

காலை: 9.00 மணிமுதல் மாலை: 3.00 மணிவரை நடைபெறும்.
அன்னதானம் நடைபெறும்

| | | | |
|---|---|---|---|
| 21.01.2017 - சனிக்கிழமை<br>பெரிய கடை மன்னார்<br>அருள்மிகு சிவபூமி ஞானவைரவர்<br>திருக்கோயில் | 22.01.2017 - ஞாயிற்றுக்கிழமை<br>வவுனியா அருள்மிகு<br>திருநாகேஸ்வரம் சிவாலயம்<br>- யூனிற் 01, பாவற்குளம், வவுனியா. | 29.01.2017 - ஞயிற்றுக்கிழமை<br>பூநகரி முழங்காவில் - சின்னக்கதிர்காமம்<br>அருள்மிகு ஸ்ரீ முருகன்தேவஸ்தானம்<br>மன்னார் வீதி, | 30.01.2017 திங்கட்கிழமை<br>அருள்மிகு ஞானலிங்கேஸ்வரர்<br>திருக்கோயில், இணுவில்,<br>யாழ்ப்பாணம். |

**அனுசரணை: உலக சைவத்திருச்சபை - கனடா - பெரிய சிவன் ஆலயம்**

**திருச்சபை நாயகர் உலக சைவத் திருச்சபை இலங்கை. 077 583 5372**

(13.18)

PEARSON BTEC
*Recognised More than 100 Countries*

## GOLD PARTNER OF PEARSON

HND IN BUSINESS SPECIALISING IN



HND in Computing & Systems Development
HND in Business Management
HND in Accounting & Finance
HND in Human Resource Management
HND in Marketing

Duration: 18 months

Installments Plans available *Conditions Apply

Equivalent to the 1st & 2nd Year of a UK Honours Degree

FREE FOR ALL REGISTRATIONS

NEW INTAKE February

UGC APPROVED

Pearson Annual Awards 2015 GOLD PARTNER

ESOFT *Shaping Lives, Creating Futures.*

## ESOFT METRO CAMPUS

NO.137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Tel : 021 222 4142 www.esoft.lk

HOTLINE 077 309 9 308

*Sri Lanka's Largest Private Sector Higher Education Network*



# வீட்டுத் தோட்ட விழா

முல்லைத்தீவு, ஜன.19

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இரண்டாண்டு ஆட்சி நிறைவை முன்னிட்டு ஒட்டுசுட்டான் கமக்கார அமைப்பால் நேற்றுமுன்தினம் வீட்டுத் தோட்ட விழா நடத்தப்பட்டது.

ஜனாதிபதியின் விசேட வேலைத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மகளிர் கமக்கார அமைப்புக் குழுவில் - தட்டயமலைக் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளி ஒருவரின் வீட்டுத் தோட்டத்தில் இந்த விழா நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் கமநல சேவை உத்தியோகத்தர், ஒட்டுசுட்டான் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர், ஒட்டுசுட்டான் மகளிர் கமக்கார அமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விசேட திட்டத்தின் கீழ் இராசாயன உரங்களைத் தவிர்த்து இயற்கை வளங்களைக் கொண்டு வீட்டுத் தோட்டம் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. (ற-7)

# மக்களின் அதிருப்தியை மீறி பாரதிபுரத்தில் கள் தவறணை

யாழ்ப்பாணம், ஜன.19

கிளிநொச்சி-பாரதிபுரத்தில் உள்ள கள் தவறணையை அகற்ற வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிவரும் நிலையில், அந்தக் கள் தவறணை நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

பாரதிபுரம் கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதியில், சந்தைக்கு எதிரே அமைந்துள்ளது இந்தக் கள் தவறணை. கள் தவறணை பொதுமக்களுக்கு இடையூறாகக் காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கள் தவறணையை அங்கிருந்து அகற்றி, பொருத்தமான இடத்தில் அமைக்க வேண்டும் என்று கோரிக்கைவிடுக்கப்பட்டது. பொது அமைப்புக்கள் சில இணைந்து இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி மக்களிடம் கையொப்பம் பெற்று, சம்பந்தப்பட்டவர்களிடம் மனுவைக் கையளித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கள் தவறணை பொருத்தமான இடத்துக்கு மாற்றப்படும் என்று பிரதேச மக்கள் எதிர்பார்த்திருந்த நிலையில், நேற்று அந்தக் கள் தவறணை நவீனப்படுத்தப்பட்டுத் திறக்கப்பட்டது.

அனைத்து விடயங்களும் ஆராயப்பட்டு, இந்த ஆண்டுக்கான அனுமதி சில நிபந்தனைகளுடன் வழங்கப்பட்டுள்ளது - என்று கிளிநொச்சி மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்க பொது முகாமையாளர் துரைசிங்கம் தெரிவித்தார்.

எமது மாவட்டதில் ஒரு மதுபான சாலை உள்ளது. ஏனைய இடங்களில் கள் விற்பனை நிலையங்களே உள்ளன. பாரதிபுரத்தில் உள்ள கள் தவறணையும் நீண்ட காலமாக இயங்குகின்றது.

தற்போது சிலர் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். இந்த வீதியூடான கிராமங்களில் சுமார் ஆயிரத்து 500 பேர் வசிக்கின்றனர். கள் தவறணையை அகற்றுவது தொடர்பான கூட்டம் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டு நடத்தப்பட்டது. அந்தக் கூட்டத்தில் 67 பேர் கலந்து கொண்டனர். 60 பேர் எதிராகவும், 7 பேர் ஆதரவாகவும் கருத்துத் தெரிவித்தனர்.

அனைத்து விடயங்களையும் ஆராய்ந்து இந்த ஆண்டுக்கான அனுமதி சில நிபந்தனைகளுடன் வழங்கப்பட்டது. கள் தவறணைக்கான பிரதான பாதையை வீதியின் மறுதிசைக்கு மாற்ற வேண்டும், தவறணையின் நான்கு பக்கமும் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்த வேண்டும், வாடிக்கையாளர்கள் உள்ளிருந்து கள் அருந்தக் கூடிய வசதிகளை ஏற்படுத்த வேண்டும், கள் தவறணையைச் சுற்றி 9 அடி உயர மதில் அமைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அவற்றில் மதில் அமைப்பைத் தவிர ஏனைய அனைத்தும் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளன. மதிலும் உடனடியாக அமைக்கப்படும் - என்று அவர் குறிப்பிட்டார். (ற-101)

# 4 ஆண்டுகள் நிறைவடைந்தும் முழுமை பெறாத கிளி. மைதானம்

## மாவட்ட இளைஞர் கழகங்கள் விசனம்

கிளிநொச்சி, ஜன.19

கிளிநொச்சி நகரின் மத்தியில் உள்ள மைதானத்தை சர்வதேச தர மைதானமாக உருவாக்குதல் என்ற பெயரில் கடந்த 4 ஆண்டுகளாக அந்த மைதானத்துக்குள் எவரும் நுழைய முடியாது தடுத்துள்ளனர். இவ்வாறு மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் கழகங்கள் குற்றஞ்சாட்டின.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சுக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது - என்று கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சர்வதேச விளையாட்டு மைதானம் உருவாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டு ஏ-9 வீதியோரம் இருந்த மிகப் பெரிய மைதானத்தை அமைச்சுப் பொறுப்பெடுத்தது. மைதானக் கட்டுமானப் பணிகள் ஓராண்டு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

கட்டுமானப் பணிகள் ஆரம்பத்தில் துரிதமாகவே முன்னெடுக்கப்பட்டன. பின்னர் மெல்லமெல்ல மந்த நிலையை அடைந்தது. தற்போது முழுமையாக கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. ஒரு வருடத்தில் முடிவடையும் என்று தெரிவிக்கப்பட்ட மைதானக் கட்டுமானங்கள் 4 ஆண்டுகள் கழிந்தும் முழுமை பெறாதுள்ளன. மைதானக் கட்டுமானப் பணிகள் முழுமையடையாததால் மைானத்தைப் பயன்படுத்த முடியாதுள்ளது.

இந்த மைதானக் கட்டுமானத்துக்கு 250 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. அதில் 100 மில்லியன் ரூபா அநுராதபுரத்தில் மைதானம் ஒன்று அமைக்க செலவிடப்பட்டுள்ளது.

அதனாலேயே கிளிநொச்சி மைதானத்தின் கட்டுமானங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பாக அதிகாரிகள் உரியவர்களின் கவனத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் - என்று இளைஞர் கழகங்களைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

இந்த மைதானத்தின் கட்டுமானங்கள் 3 ஆண்டுகள் கடந்தும் முழுமையடையாதுள்ளமை உண்மையே.

மைதானத்தின் கட்டுமானப் பணிகளை விரைவாக நிறைவு செய்து, மாவட்டத்தின் பாவனைக்கு வழங்க ஆவன செய்ய வேண்டும் என்று அமைச்சுக்கு கடிதம் அனுப்பியுள்ளோம் - என்று கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார். (ற-101)

# நீரியல் வள திணைக்களத்துக்கு ஆளணி பற்றாக்குறை

யாழ்ப்பாணம், ஜன.19

யாழ். மாவட்ட நீரியல்வள திணைக்களத்தில் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

திணைக்களத்தில் தற்போது 5 கடற்றொழில் பரிசோதகர்கள் மட்டுமே கடமையாற்றி வருகின்றனர். 17 கடற்றொழில் பரிசோதகர்கள் தேவைப்படுகின்றனர்.

திணைக்கள நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

அண்மைக்காலமாக கடற்றொழில் சார்ந்த பல பிரச்சினைகளுக்கு தீர்வுகள் வழங்கப்படுகின்றன. இந்தத் துறையை விருத்தி செய்வதற்கு அதிகளவான ஆளணியினர் தேவைப்படுகின்றனர். எல்லை தாண்டும் மீனவர்களை கையாள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் திணைக்களத்துக்கு தேவைப்படுகின்ற ஆளணிகளை முழுமைப்படுத்துவது அவசியமாகவுள்ளது. உரிய தரப்பினர் இந்த ஆளணி பிரச்சினைக்கு தீர்வு வழங்க வேண்டும் - என்று திணைக்கள அதிகாரிகளிடம் தெரிவித்தனர். (ற-6)

# காணிப் பிரச்சினையை தீர்க்க விசேட கூட்டம்

## கிளி. மாவட்டச் செயலகத்தில்

யாழ்ப்பாணம், ஜன.19

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் காணி தொடர்பான பிரச்சினைகளை சட்ட ரீதியில் தீர்ப்பதற்காக இன்று சட்ட ஆலோசனைக் குழு அதிகாரிகள், மாவட்டச் செயலகத்தில் விசேட கலந்துரையாடலில் பங்குகொள்கின்றனர். இவ்வாறு கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டத்தின் 4 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சட்டரீதியான காணிப் பிணக்குகள் உள்ளன. அவற்றால் உரிமை மாற்றம், பங்கீடு, உண்மையான உரிமையாளரை இனங்காணல் என்பவற்றில் நெருக்கடிகள் காணப்படுகின்றன.

தாய், பிள்ளை உரிமை மாற்றம், போர் இடம்பெற்ற போது இடம் பெற்ற கைமாற்றங்கள் என்பவற்றால் பல குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டங்களை வழங்க முடி யாத நிலைமையும் காணப்படுகின்றது. இந்தப் பிரச்சினைகளை ஆராய்ந்து, தீர்வை எட்டுவதற்காகவே இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது.

சட்ட ஆலோசனைக் குழுவின் மூத்த அதிகாரிகள் கலந்துரையாடலுக்கு வருகின்றனர். இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக சுமுகமான தீர்வை எட்டமுடியும் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றார். (ற-101)

# சி.ஐ.டி. என அறிமுகப்படுத்தி வீட்டில் நகைகள் கொள்ளை!

## வவுனியா செட்டிகுளத்தில் சம்பவம்

வவுனியா, ஜன.19

வவுனியா, செட்டிகுளத்தில் உள்ள வீடொன்றில் சி.ஐ.டியினர் என்று அறிமுகப்படுத்திய இருவர் வீட்டைச் சோதனை செய்வதாகக் கூறி, 5 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையிட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. முகத்தான்குளம், பாம் -2 பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குச் சென்ற இருவர், தம்மை சி.ஐடியினர் என்று அறிமுகப்படுத்தி, வீட்டில் கசிப்பு இருக்கிறது என்று தகவல் கிடைத்தது என்று கூறி, சோதனை செய்ய வேண்டும் என்று கூறினர்.

வீட்டிலிருந்தோர் அவர்களைச் சோதனையிட அனுமதித்தனர். அவர்கள் வீட்டிலிருந்த சங்கிலி, காப்பு, மோதிரம் போன்ற நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். அவர்கள் இருவரும் கைத்துப்பாக்கி வைத்திருந்தனர் என்று வீட்டிலிருந்தோர் கூறுகின்றனர்.

இது தொடர்பாக செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். (ற)

# சிறுதானியப் பயிர்ச்செய்கைக்கு ஊக்குவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.19

வலி. மேற்கில் உளுந்து, பயறு, எள்ளு செய்கையில் ஈடுபடும் விவசாயிகளை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. பெரும்போக நெற்செய்கையின் பின்னர், உளுந்து, பயறு, எள்ளு போன்ற சிறு தார்னியங்ளை பயிரிட விரும்பும் விவசாயிகள் தொடர்புகொள் ளலாம். இவ்வாறு வலி. மேற்கு விவசாய போதனாசிரியர் தெரிவித்தார்.

இந்தவருடம் மழைபெய்வது குறைவடைந்துள்ளது. இதனால் மாற்றுப் பயிர் செய்கைக்கு ஊக்கமளிக்கப்படவுள்ளது. குறைந்தளவு நீரைப் பயன்படுத்தி அதிகளவு பயனை பெறக்கூடிய எள்ளு, பயறு, உளுந்து போன்ற பயிர்களை பயிரிட்டு நன்மைஅடையுங்கள். சிறுதானியங்கள் தேவைப்படுவோர் விவசாய சம்மேளனங்கள் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம் - என்று அவர் குறிப்பிட்டார். (ற-50)

# 7,000 ஏக்கர் நெற்செய்கை அழியும் நிலையில்

### முல்லை மாவட்டத்தின் ஒரு பகுதியில் மட்டும்

முல்லைத்தீவு, ஜன.19

முல்லைத்தீவு, வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டு காலபோகச் செய்கையில் 10 ஆயிரத்து 323 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. அவற்றில் 7 ஆயிரத்து 239 ஏக்கர் நெற் செய்கை வறட்சியால் அழிவடையும் நிலையில் உள்ளது.

வவுனிக்குளத்தில் 5 ஆயித்து 100 ஏக்கரிலும், தென்னியன்குளத்தில் 850 ஏக்கரிலும், ஐயங்குளத்தில் 952 ஏக்கரிலும், அம்பலப்பொருமாள் குளத்தில் 623 ஏக்கரிலும், கல்விளானில் 400 ஏக்கரிலும், மருதங்குளத்தில் 450 ஏக்கரிலும், பழைய முறிகண்டியில் 356 ஏக்கரிலும், கோட்டைகட்டியில் 405 ஏக்கரிலும், கொல்லவிளாங்குளத்தில் 262 ஏக்கரிலும், மல்லாவியில் 325 ஏக்கரிலும், தேராங்கண்டலில் 300 ஏக்கரிலும், பனங்காமத்தில் 300 ஏக்கரிலும் நெற் செய்கை செய்யப்பட்டது.

பருவ மழை பெய்யாததால் நெற்செய்கை முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது அம்பலப்பொருமாள் குளம், கல்விளான் குளம், கோட்டை கட்டிய குளம், மருதங்குளம், பழைய முறிகண்டிக்குளம், தென்னியன் குளம் என்பவற்றில் உள்ள நீரைப் பாவித்து 3 ஆயிரத்து 84 ஏக்கரில் நெல் அறுவடை செய்யக்கூடிய நிலையில் காணப்படுகின்றது.

ஏனைய குளங்களில் நீர் போதியளவு இல்லை. நெற்செய்கை முழுமையாக அழிவடையும் நிலையில் உள்ளது என்றுவவுனிக்குளநீர்ப்பாசனத்திணைக்களத்தகவல்கள் தெரிவித்தன. (ந-7)

# பலமாத மின் கட்டணங்கள் சேர்த்து வைத்து ஒரே சிட்டையில்

### முல்லை. மாவட்ட மக்கள் குற்றச்சாட்டு; பகுதியாக செலுத்தலாம் என்கிறது மின்சார சபை

முல்லைத்தீவு, ஜன.19

ஆறு மாத காலத்துக்கான மின்சாரக் கட்டணத்தை ஒரே தடவையில் செலுத்த வேண்டும் என்று மின்சார சபையினர் கோரியுள்ளனர். அதனால் பல அசௌகரியங்களை எதிர் கொள்கின்றோம் என்று முல்லைத்தீவு மாவட்ட மக்கள் தெரிவித்தனர்.

பல மாதங்களின் மின்சாரக் கட்டணம் ஒரே சிட்டையில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் கட்டணத்தை ஒரே தடவையில் செலுத்த வேண்டியதில்லை. அதைப் பகுதி பகுதியாகச் செலுத்தலாம்.- என்று மின்சார சபையினர் குறிப்பிட்டனர்.

கொக்கிளாய் முதல் விசுவமடு வரையும் மாங்குளம் வீதியில் கரிப்பட்டமுறிப்பு வரையும் நெடுங்கேணி முதல் ஒலுமடு வரையுமான பகுதிகள் முல்லைத்தீவு மாவட்ட மின்சார சபைக்குள் அடங்குகின்றன. மாவட்டத்தில் மின் இணைப்புகள் வழங்கப்பட்டு ஓர் ஆண்டு கடந்துள்ளது. இதுவரை பல வீடுகளுக்கு மின் கட்டணச் சிட்டைகள் வழங்கப்படவில்லை. தற்போது ஆறு மாதங்களுக்கான மின் கட்டணம் ஒரே சிட்டையில் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஒரே தடவையில் கட்டணத்தைச் செலுத்துவது இயலாத காரியம். பகுதி பகுதியாகச் செலுத்த மின்சார சபை இணங்க வேண்டும்.- என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பல இடங்களுக்கு ஒரே தடவையில் மின் இணைப்பு வழங்கப்பட்டது. தற்போதே ஒவ்வொரு இடமாக நாம் கட்டணச் சிட்டைகள் வழங்குகின்றோம். குறிப்பிட்ட காலத்துக்குரிய மின்சாரக் கட்டணப் பட்டியல் ஒரே சிட்டையில் வந்தாலும், அதைப் பகுதி பகுதியாகச் செலுத்தலாம் - என்று மின்சார சபையினர் தெரிவித்தனர். (ந-7,102)



# பொகஸ்வவேவா மக்கள் கவனவீர்ப்புப் போராட்டம்

### ஒரே பிரதேச செயலகத்தில் அனைவரும் சேவை பெறவேண்டும் என வலியுறுத்தி

வவுனியா, ஜன.19

வவுனியா மையப் பேருந்து நிலையம் முன்பாக சிங்கள மொழி பேசும் மக்கள் நேற்றுக்காலை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.

பொகஸ்வவேவா பிரதேச மக்கள் ஒரே பிரதேச செயலக பிரிவில் சேவைகளைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியே அவர்கள் போராட்டம் நடத்தினர்.

சுமார் ஒரு மணி நேரம் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. அதன் பின்னர் மாவட்ட செயலகத்துக்குச் சென்று மாவட்ட செயலரிடம் மனுக் கையளித்தனர்.

பொகஸ்வவேவா பிரதேசத்தில் உள்ளவர்களில் ஒரு தொகுதியினர் ஹெப்பிட்டிக்கொலாவ பிரதேச செயலகத்தின் கீழும், ஒரு தொகுதியினர் முல்லைத்தீவு பிரதேச செயலகத்தின் கீழும், ஒரு தொகுதியினர் வவுனியா தெற்கு பிரதேச செயலகத்தின் கீழும், ஒரு தொகுதியினர் வவுனியா பிரதேச செயலகத்தின் கீழும் சென்று சேவைகளைப் பெற வேண்டியுள்ளனர். அதனால் ஒவ்வொரு பிரதேச செயலகத்துக்கும் சென்று வர வேண்டியுள்ளது. அதிகாரிகள் இதைக் கவனத்தில் எடுத்து ஒரே பிரதேச செயலகத்தில் தமது சேவைகளை மேற்கொள்வதற்கு ஆவன செய்து தர வேண்டும் - என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

போராட்டத்தில் சல்லிகம, வெகறதன்ன, நாமவகம, நந்திமித்தகம பிரதேசங்களைச் சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டனர். (ந-5)

# சட்டவிரோத மின் பாவனை ஒருவர் கைது

வல்வெட்டித்துறை, ஜன.19

கரவெட்டியில் சட்டவிரோத மின்சாரம் உபயோகித்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மின்சார சபையினர், பொலிஸாருடன் இணைந்து நேற்றுமுன்தினம் சோதனை நடத்தினர். கைது செய்யப்பட்டவர் அளவு மானியில் குண்டூசி செருகி மின்சார பாவனை அளவை மாற்றியுள்ளார் என்று கண்டறியப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் பருத்தித்துறை நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டார். அவருக்கு 42 ஆயிரம் ரூபா தண்டமும், மின்சார சபையினருக்கு இழப்பீடாக 82 ஆயிரம் ரூபாவும் செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டது. (ந-5,26)

# தவறி விழுந்து மாணவன் காயம்

யாழ்ப்பாணம், ஜன.19

பாடசாலையில் படிக்கட்டில் தவறிவிழுந்து முழங்கை எலும்பு விலகிய நிலையில் 16 வயது மாணவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அராலியைச் சேர்ந்த மாணவர் ஒருவரே பாதிக்கப்பட்டுள்ளார்.

கோட்டைக்காடு கிராமிய வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார். (ந-ரி)

# தவணை முறையில் மின் கட்டண முறை

யாழ்ப்பாணம் ஜன 19

புதியமின்னிணைப்புக்கட்டணத்தை செலுத்துவதற்கு இயலாதவர்களுக்காக தவணை அடிப்படையிலான கட்டண முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் பணிப்பாளர் தமித்த குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது-

தற்போதைய அரசு நடப்பாண்டில் வறுமையை இல்லாது ஒழிக்க உறுதி எடுத்துள்ளது. அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தவணைக் கொடுப்பனவு முறைமைக்கான வழிகாட்டி ஊடாக எந்த ஒருநபரும் ஒரு மின்சார இணைப்பை இலகுவாக பெற்றுக் கொள்ள முடியும்.

இந்தத் தவணைக் கொடுப்பனவு முறைமைக்கான வழிகாட்டியில் அறிவிக்கப்பட்ட குடும்ப வருமானத்தின் 5 வீதத்தைவிட அதிகமாகாது. அதிகபட்ச பணக் கழிப்பானது ஆயிரத்து 500 ரூபாவை விட அதிகரிக்காது. இந்தத் தவணைக் கொடுப்பனவு மூலம் 24 மாதங்களில் கட்டணத்தை செலுத்தலாம் - என்றுள்ளது. (ந-8)




# வவு. புதிய பஸ் நிலையத்தில் வெளியூர் சேவைகள் ஆரம்பம்

வவுனியா, ஜன.19

கடந்த திங்கட்கிழமை வவுனியாவில் திறக்கப்பட்ட புதிய பேருந்துத் தரிப்பிடத்தில் இருந்து வெளிமாவட்ட பேருந்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. அரச, தனியார் பேருந்துகள் தமது சேவைகளை ஆரம்பித்துள்ளன.

புதிய பேருந்து நிலையம் தாண்டிக்குளத்தில் திறக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் தரிப்பிடம் தொடர்பாக வவுனியா மையப் பேருந்து நிலையத்தில் அரச, தனியார் சாரதிகள், நடத்துநர்களிடையே முறுகல் நிலை ஏற்பட்டது. மாவட்ட செயலருடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் அடிப்படையில் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து உடனடியாக சேவைகளை ஆரம்பிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

முன்னைய பேருந்துத் தரிப்பிடத்தில் உள்ளூர் பேருந்துச் சேவைகள் நடத்தப்பட்டன. (ந-5)



## சிகிரியாக் குன்றில் ஒரு வகை பங்கஸ்

*ஓவியங்கள் அழிவடையும் அபாயம்*

கொழும்பு, ஜன 19
சிகிரிய குன்றில் ஒரு வகை பங்கஸ் பரவி வருவதன் காரணமாக கல்வெட்டுகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.
கல்வெட்டுகளில் சில இடங்களில் பரவியுள்ள பங்கஸ் காரணமாக அவற்றில் எழுதப்பட்டுள்ள சிறுக்கல் பாக்கள் மறைத்து போகும் நிலைமை உருவாகியுள்ளது.
பங்கஸை அகற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசியர் பிரியாந்த குணவர்த்தன குறிப்பிட்டார்.
சிகிரியா ஓவியங்கள் காணப்படும் பகுதிகளிலும் ஒரு வகை பங்கஸ் படிந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (கு)

## ரத்ன தேரரின் தீர்மானம் பொய்யானது

*ஏமாற வேண்டாம் என்கிறார் நாலக்க தேரர்*

கொழும்பு, ஜன. 19
ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரரின் தீர்மானம் பொய்யானது எனவும், அரசைப் பாதுகாக்க அவர் போடும் ஒரு நாடகமே இதுவெனவும் தேசப்பற்று தேசிய அமைப்பின் ஏற்பாட்டாளர் பொங்கமுவே நாலக்க தேரர் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
அரசைப் பாதுகாப்பதற்குச் சிலர் தயாராகி வருகின்றனர். இதில் முக்கிய பிரதானிதான் அத்துரலிய ரத்ன தேரர். இவர் புதிய ஒரு பிரிவை தயார்ப்படுத்தி வருகின்றார். இதற்கு மக்கள் ஏமாறவேண்டாம்.
அரசுக்கு எதிராகப் பலமடைந்து வரும் எதிர்ப்பை திசை திருப்பவே இவர் முயற்சிக்கின்றார். இவர் அரசிலிருந்து வெளியேறுவதில்லை எனவும் அரசைச் சரிசெய்ய வேண்டும் எனவும் கூறுகின்றார். இவர் சுயாதீனம் எனக் கூறுவதை விட அரசைப் பாதுகாத்தல் எனக் கூறினால் அது சரியாக இருக்கும்.
ரத்ன தேரர், எந்தவித பிரயோசனமும் அற்ற சம்பிக்க ரணவக்கவை நாட்டின் தலைமைக்குக் கொண்டுவரவேண்டும் எனும் நோக்கில் செயற்பட்டு வருகின்றார்–என்றார். (கு)



# ஜி.எஸ்.பி. சலுகைக்காக கலாசாரத்தை விலை பேசாதீர்

*ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளிடம் கிழக்கு முதல்வர் நேற்று வலியுறுத்தல்*


மட்டக்களப்பு, ஜன.19
ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை வழங்குவதற்கு நாட்டின் கலாசாரம் மற்றும் தனித்துவப் பண்பாட்டுக்கு முரணான நிபந்தனைகளை முன்வைக்கவேண்டாம் என கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் வேண்டுகோள் விடுத்தார்.
ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவின் வெளிவிகாரங்கள் தொடர்பான துணை தலைமைப் பொறுப்பாளர் டீட்மர் கிறிஸ்லர் மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் அஹமட் ஆகியோருக்கு இடையில் நேற்று கொழும்பில் இடம்பெற்ற சந்திப்பின்போதே முதலமைச்சர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.
முதலமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டின் தனித்துவம், பண்பாடு, கலாசாரங்களுக்குப் புறம்பான நிபந்தனைகளை முன்வைப்பது நாட்டில் மேலும் பல புதிய பிரச்சினைகளை தோற்றுவிக்கவே வழிவகுக்கும்.
இலங்கை பல்லின மத கலாசாரங்களைப் பின்பற்றுபவர்களை கொண்ட நாடு. எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு நிபந்தனைகள் இன்றி ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் முன்வரவேண்டும்.
மாறாக நாட்டின் மத மற்றும் நல்லிணக்கத்துக்கு எதிரான நிபந்தனைகள் முன்வைக்கப்படுமாயின் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது.நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் உதவியளிக்க வேண்டும். இதன்மூலம் நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.
ஜி.எஸ்.பி. பிளஸ் வழங்கும்போது கிழக்கில் தற்போது தலை விரித்தாடி வரும் வேலையில்லாப் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் முகமான தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கும் ஐரோப்பிய ஒன்றியம் முன்வர வேண்டும் - என்றார். (த-ய-46)

## பொலிஸ் சீருடையில் மாணவனிடம் கொள்ளை

கொழும்பு, ஜன. 19
அநுராதபுரம் புதிய நகரத்தின் பஸ் நிலையத்தில் நின்றிருந்த மாணவன் ஒருவரை ஓட்டோவொன்றில் கடத்திச் சென்று அவரிடமிருந்த 1,200 ரூபாவைப் பறித்துச் சென்ற நபரை அநுராதபுரம் தலைமையகப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.
இந்த மாணவன் பலவந்தமாகக் கடத்தப்பட்ட சம்பவம் பற்றி பஸ் நிலையத்தில் நின்றவர்கள் பொலிஸ் அவசர அழைப்புக்கு விடுத்த தொலைபேசி அழைப்பின் பேரில் உடனடியாகச் செயற்பட்ட அநுராதபுரம் தலைமையகப் பொலிஸார் குறிப்பிட்ட ஓட்டோவைக் கைப்பற்றியதுடன் சந்தேக நபரையும் கைது செய்தனர்.

## கடல் கனிய வளங்களை கொள்ளையிட்டவர் கைது

கொழும்பு, ஜன. 19
பெருந்தொகையான கடல் கனிய வளங்களைக் கொள்ளையிட்டு சென்றநபரொருவர்பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் சட்டவிரோதமாக கொண்டு செல்லப்படும் பொருள்களின் மீதானபரிசோதனையின் போது குறித்த பொருள்கள் கைப்பற்றப்பட்டன.
இவ்வாறு கைப்பற்றப்பட்ட பொருள்களில் மாடுகளின் கொம்புகள், சங்குகள் போன்றவை அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.
குறித்த பொருள்கள் அலங்காரங்களுக்கு மட்டும் பயன்படுமே தவிர அதில் எவ்வித மதிப்பும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (கு)





## கிழக்குப் பல்கலை மாணவர் இரவு பகலாகப் போராட்டம்

*விடுதி வசதியை உடன் வழங்கக் கோரி*

செங்கலடி, ஜன.19
கிழக்குப் பல்கலைக்கழகத்தில் விடுதி வசதி கோரிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் வந்தாறுமூலையிலுள்ள பேரவை கட்டடத்தில் இரவு பகலாக நிலைகொண்டுள்ளனர்.
கடந்த திங்கட்கிழமை தங்களுக்கு விடுதி வசதி வழங்கக் கோரி வந்தாறுமூலை வளாக முன்றிலில் இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களது கோரிக்கைக்குப் பல்கலைக்கழக நிர்வாகம் உரியதீர்வு வழங்காததை அடுத்து மாணவர்களும் மாணவியரும் பல்கலைக்கழகப் பேரவைக் கட்டடத்தில் தங்கியிருந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.
இது தொடர்பாக பல்கலைக்கழகப் பதில் பதிவாளர் த.பாஸ்கரனிடம் கேட்டபோது,
நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கு விடுதி வசதி வழங்கப்படுவதில்லை. கடந்த கால அசாதாரண சூழ்நிலையின்போது குறைந்த அளவான மாணவர்கள் விடுதி வசதி பெற்றதன் காரணமாக மிகுதியாயிருந்த விடுதிகள் ஏனைய மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. இம்முறை முதலாம் வருடத்துக்கு 600 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.
அவர்களுக்குக் கட்டாயமாக விடுதி வசதி ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அதன் காரணமாகப் பரீட்சை நடைபெறும் மாணவர்கள் தவிர்ந்த ஏனைய மாணவர்களை செவ்வாய்க்கிழமையுடன் விடுதிகளிலிருந்து வெளியேறுமாறு நிர்வாகம் அறிவித்துள்ளது.
இதையடுத்து மாணவர்கள் பேரவைக் கட்டடத்தை முற்றுகையிட்டு நிர்வாக நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவ்விடயம் தொடர்பாக பேரவை மற்றும் நிர்வாகக் கூட்டத்தில் அடுத்த கட்ட முடிவு எடுக்கப்படும் - என்றார். (த-ய-47)

## பதில் பொலிஸ்மா அதிபராக விக்ரமரத்ன நியமனம்

கொழும்பு, ஜன. 19
ஆசிய வலயத்திற்கான பொலிஸ் பிரதானிகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெசுந்தர நேபாளத்திற்கு சென்றுள்ளார்.
நேற்று முன்தினம் இவர் நேபாளம் நோக்கித் தனது பயணத்தை ஆரம்பித்தார் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.
அவர் நாடு திரும்பும் வரை, பதில் பொலிஸ்மா அதிபராக மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் சீ.டி.விக்ரமரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். (கு)

## காணாமற்போனோருக்கு நியாயம் கிட்டவேண்டும்

*அக்கரைப்பற்றில் உறவினர்கள் வலியுறுத்தல்*

அம்பாறை, ஜன. 19
கடந்த காலப்போர் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நியாயம் இந்த நல்லாட்சியில் கிடைக்கவேண்டும் எனக் காணாமற்போனவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.
மனித எழுச்சி நிறுவனத்தின் விழிப்புணர்வுக் கூட்டம், அக்கரைப்பற்றில் நேற்று நடைபெற்றபோதே, அவர்கள் இவ்வாறு கூறினர்.
இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட காணாமல் போனவர்களின் உறவினர்கள் தெரிவிக்கையில், 'கடந்த போர்காலத்தின்போது தொழில் நிமித்தம் சென்ற எமது கணவன்மார், பிள்ளைகள், உறவினர்கள் காணாமல்போயுள்ளனர்.
இவ்வாறு காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை நாங்கள் அறிய வேண்டும்.
எங்களின் உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை இந்த நல்லாட்சியில் கண்டறிந்து, அதற்கான நீதி கிடைக்கும்வரை எங்கள் உரிமைக்காகச் சர்வதேசம் வரை குரல் கொடுப்போம்.
பாதிக்கப்பட்ட எமக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்–என்றனர். (கு)

## அரசியலில் பெண்களின் பங்களிப்பை உயர்த்தும் செயற்திட்டம் ஆரம்பம்

கொழும்பு, ஜன 19

இலங்கை அரசியலில், பெண் பிரதிநிதிகளின் வீதாசாரத்தை அதிகரிக்கும் வகையில், நாடளாவிய ரீதியில் விழிப்புணர்வுச் செயற்றிட்டத்தை, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் முன்னெடுக்கவுள்ளது.

இந்தச் செயற்றிட்டம், நேற்று ஆரம்பமாகி, பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளதாக, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பிரதான நிர்வாகி, கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்தார்.

இந்தச் செயற்றிட்டம் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு, பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எல்லா ஜனநாயக நாடுகளிலும் அரசியலில் பிரவேசிக்கும் பெண்களின் எண்ணிக்கை, ஆண்களின் எண்ணிக்கையை விடக் குறைவானதாகும். அதனால், அநேகமான நாடுகளில் அரசியலில் பெண்களின் சதவீதத்தை அதிகரிப்பதற்காக ஒதுக்கீட்டு முறையைப் பயன் படுத்துகின்றனர். அதனடிப்படையில் இலங்கையில் நடை பெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெண்களின் பிரதி நிதித்துவத்தை அதிகரிப்பது தொடர்பாக சிறப்பு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அதற்கு, 1946ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் சட்டத்துக்கு இணைக்கப்பட்ட கலப்பு உறுப்பினர் பிரதிநிதித்துவ முறை திருத்தச் சட்டம் மற்றும் 25 சத வீத பெண் பிரதிநிதித்துவத் திருத்தச் சட்டம் என்பன மிகவும் முக்கியமானவையாகும். இதனூடாக எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் செயற்பாடுகளில் விசேட மாற்றத்தை ஏற்படுத்தமுடியும். ஆனால், இது குறித்த விழிப்புணர்வு பொது மக்களிடையே குறிப்பிட்டுக் கூறக்கூடியளவில் காணப்படவில்லை.


குறிப்பிட்ட தேர்தல் முறைமை தொடர்பாக பெண்களின் விழிப்புணர்வை அதிகரித்தல், அரசியல் குடும்பப் பின்னணி யின்றி கிராமிய மட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களினூடாகப் பெண்களை அரசியல் செயற்பாடுகளுக்குக் கொண்டு வருதல், பெண் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் நீதியான முறையிலும் சமத்துவத்தின் அடிப்படையிலும் தெரிவு செய்யும் தெரிவு முறையை நோக்கிக் கொண்டு செல்லல் என்பவற்றை இதனூடாக எதிர்பார்க்கின்றோம்- என்றார். (தி)



திருகோணமலை கோட்டக்கல்வி அலுவலகத்தின் பொங்கல் விழா திருமலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்றது. கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் முதன்மை அதிதியாக எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், திருகோணமலை மறை மாவட்ட ஆயர் கலாநிதி நோயல் இம்மானுவேல் உட்பட பலர் பலர் கலந்துகொண்டனர். (க-ய-40)

# அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு கேடு விளையாது

### அமைச்சர் அர்ஜுன உறுதி



கொழும்பு, ஜன. 19

ஊழியர்களின் சக்தியால் கட்டியெழுப்பப்பட்ட அம்பாந்தோட்டைத் துறைமுகத்திற்கு களங்கம் ஏற்படுவதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டேன் என துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும்போது, தம்முடைய நிறுவனத்திற்கு அதிகளவு நன்மை கிட்டும் வகையில்செயற்படுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அர்ஜுன ரணதுங்க உறுதியளித்துள்ளார்.

மாபொல பயிற்சி நிறுவனத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

இன்று துறைமுகத்தைப் பற்றிப் பேசுவதற்குப் பலர் இருக்கின்றார்கள். எதிர்க்கட்சியினர் பேசுகின்றார்கள். அரச தரப்பினரும் பேசுகின்றார்கள். அமைச்சர் என்ற வகையில் நான் துறைமுகத்திற்கு நன்மை பயக்கும் வகையில் ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுவதற்குத் தேவையான உரிய நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டுக் கடுமையாக உழைக்கின்றேன்.

என் பிரதி அமைச்சரும் நானும் துறைமுகத்திற்கு கேடு விளைவிக்க ஒரு போதும் இடமளிக்கமாட்டோம். பாரிய கடன் சுமை காரணமாக பல் வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. அம்பாந்தோட்டைத் துறைமுகமானது மிகச் சிறந்த இடத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதை இன்றும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கொழும்புத் துறைமுகம் ஈட்டிக்கொள்ளும் இலாபமே அம்பாந்தோட்டைக் கடனைச்செலுத்தப் பயன்படுகிறது. நாம் செலுத்த வேண்டிய பணம் நிறுத்தப்படுமாயின் குறைந்த வட்டி வீதத்திற்கு எம்மால் கடன்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அவ்வாறு செய்தால் இம்முனையத்தின் பெரும் பங்கைத் துறைமுக அதிகார சபை வைத்துக் கொண்டு பிறிதொரு முறையில் முன்னேற்றலாம்- என்றார். (தி)

## முஸ்லிம்களின் பிரச்சினைகளை பேசத் தயங்கும் தமிழ்த் தலைமை

### பிரதியமைச்சர் அமீர் அலி குற்றச்சாட்டு



களுவாஞ்சிகுடி, ஜன.19

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் பற்றிப் பேசுவதற்குத் தமிழ் அரசியல் தலைவர்கள் இனிமேலும் தயக்கம் காட்டுவார்களாயின் தமிழர்களுக்கோ முஸ்லிம்களுக்கோ எந்தத் தீர்வையும் பெற்றுக் கொள்ள முடியாது என்கிராமியப் பொருளாதாரப் பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்துள்ளார்.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் எம்.கோபாலரட்ணம் தலைமையில் மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு களுதாவளையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ், முஸ்லிம் சமூகங்கள் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டுமாயின், இரண்டு சமூகங்களுக்குள்ளும் உள்ள பிரச்சினைகள் உடனடியாகப் பேசித் தீர்க்கப்படவேண்டும்.

முஸ்லிம்களுக்கு உள்ள சந்தேகத்தைத் தமிழ் அரசியல் தலைவர்களும், தமிழ் மக்களுக்கு உள்ள சந்தேகத்தை முஸ்லிம் அரசியல் தலைவர்களும் தெளிவுபடுத்தவேண்டும்.

தமிழ், முஸ்லிம்களை இரண்டாகப் பிரிப்பதற்கான காய் நகர்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே, தமிழ், முஸ்லிம் அரசியல் தலைமைகள் இனிமேலும் காலத்தை வீணடிக்காமல் அவசரமாகப் பேச்சுக்களில் ஈடுபடவேண்டும். தமிழ் அரசியல் தலைமைகளானது முஸ்லிம் அரசியல் தலைமைகளுக்குப் பச்சைக்கொடியைக் காட்ட வேண்டும்.

இவ்வாறு நாம் செயற்படாதுவிடின், மீண்டும் இரண்டு சமூகங்களும் இரு துருவங்களாக இருக்க நேரிடும் - என்றார். (த-ய)

# சில தினங்களில் அரிசி விலை மேலும் வீழ்ச்சி

### அமைச்சர் ஹரிசன் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 19

அரிசிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வெளிநாடுகளிலிருந்து அரிசியை இறக்குமதி செய்வதற்காக அரசு தனியாருக்கு அனுமதி வழங்கியதை அடுத்து புறக்கோட்டையில் அரிசி 10 ரூபாவினால் விலை குறைவடைந்துள்ளது.

எதிர்வரும் சில தினங்களில் மேலும் விலை வீழ்ச்சி ஏற்படும் என்று கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மகிந்த ராஜபக்ச நாட்டில் வறட்சி நிலை ஏற்படுவதற்கு காரணம் அரசாங்கத்தின் தவறு என்று தெரிவித்திருந்தார். இந்த வறட்சி நிலை அரசின் தவறினால் ஏற்படவில்லை. இது இயற்கையின் காரணமாக காலநிலை மாற்றத்தினால் ஏற்பட்ட ஒன்றாகும்.

வறட்சிக்காலநிலை எமது நாட்டில் மாத்திரமன்றி ஆசியாவில் பெரும்பாலான நாடுகளில் நிலவி வருகின்றது.

இதனால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரினால் இந்த பிரச்சினை ஏற்படவில்லை. மகிந்தவினால் மந்திரத்தால் மழை பெய்விக்கமுடியும் என்றால் இந்தப் பிரச்சினையை எம்மால் தீர்க்க முடியும் .

நெல் சந்தைப்படுத்தும் சபையிடம் 2 இலட்சம் மெற்றிக்தொன் நெல் கையிருப்பில் உண்டு. இதற்கு மேலதிகமாக நெல் ஆலை உரிமையாளர்களிடம் இந்த வருடத்தில் ஏப்ரல்,மே வரையான காலப்பகுதிக்குத் தேவையான நெல் உண்டு. நெல் கையிருப்பில் இல்லை என்று சில நெல் ஆலை உரிமையாளர்கள் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முயற்சிக்கின்றனர்.

இந்த நெல் கையிருப்பை இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்காக விநி யோகிக்கமுடியும்.

தொடர்ச்சியாக சந்தையில் விலை வீழ்ச்சியையும் போது வர்த்தகர்கள் கையிருப்பிலுள்ள அரிசியை மறைத்து வைத்திருப்பதால் எந்தவித பயனும் இல்லை- என்றார். (தி)

## ஜூனுக்கு முன் பன்னாட்டு ஒப்பந்தங்கள்

கொழும்பு, ஜன 19

சில நாடுகளுடன் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள வர்த்தக ஒப்பந்தங்களை இந்த வருடம் ஜூன் மாதத்திற்கு முன் கைச்சாத்திட இலங்கை எதிர்பார்த்துள்ளதாக, அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவித்தார்.

இதன்படி சீனா, சிங்கப்பூர் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுடனான ஒப்பந்தங்கள் இதன்போது கைச்சாத்திடப்படும் என்று அவர் கூறினார். (தி)

# பனம் வெல்லம் உற்பத்திக்கு மானிய உதவி வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.19
இந்த ஆண்டு பனம் வெல்லம் உற்பத்தியை அதிகரிக்க அரசு மானியம் வழங்குவதற்கு முன்வரவேண்டும். இவ்வாறு வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் என். கணேசன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
தெற்கில் கித்துள் வெல்லத்தை உற்பத்தி செய்வதற்கு அரசு மானியம் வழங்குகின்றது. வடக்கில் பனம் வெல்லத்தை உற்பத்தி செய்வதற்கு அரசிடம் இருந்து மானியத்தைப் பெற்றுத் தருவதற்கு உரிய தரப்பினர் ஏற்பாடுகளை மேற்கொண்டு தரவேண்டும்.
பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த ஆண்டு கூடுதலாக பனம் வெல்லத்தை உற்பத்தி செய்வதற்கு தீர்மானித்துள்ளன. பனம்வெல்லத்துக்கு வெளிநாடுகளில் நல்ல வரவேற்பும் கிராக்கியும் ஏற்பட்டுள்ளன - என்றார். (ற-17)

# ஆய்வுகூடம் கையளிப்பு

வவுனியா, ஜன.19
வவுனியா, கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தின் தொழில்நுட்ப ஆய்வுகூடம் கையளிக்கும் நிகழ்வு இன்று மு.ப. 10 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி ரேவதி கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.
அறிவை மையமாகக் கொண்டு பாடசாலை கல்வியைச் சீரமைத்தல் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் ஊடாக உலக வங்கி மற்றும் ஆஸ்திரேலியா அரசின் நிதி உதவியுடன் இந்தத் தொழில் நுட்ப ஆய்வு கூடம் அமைக்கப்பட்டது.
வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவலக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா அழைப்பின் பேரில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பங்கு பற்றலுடன் மாகாண சபை உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா ஆய்வுகூடத்தை மாணவர்களுக்கு கையளிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-422)

# நல்லிணக்க வாரத்தை முன்னிட்டு தொண்டு

யாழ்ப்பாணம்,ஜன.19
தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க வாரத்தை முன்னிட்டு, வடமராட்சி கிழக்கில் கடந்த திங்கட்கிழமை சிரமதானப்பணிகள் இடம்பெற்றன.
வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், மருதங்கேணி தாளையடி பிரதான வீதி சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.
வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகப் பணியாளர்கள், பொது அமைப்புப் பிரதிநிதிகள், இராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து இந்தச் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (ற-17)

# தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளுக்கு எதிராக நடவடிக்கை

## மன்னார் கடற்றொழில் திணைக்களம் தெரிவிப்பு

மன்னார், ஜன.19
மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு முறையற்ற மீன்பிடி நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் முடிவடைந்துள்ளது. நேற்று முதல் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளுக்கு எதிராக இறுக்கமான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
மன்னார் மாவட்டத்தில் கலங்கட்டிவலை, சுருக்குவலை போன்ற தடை செய்யப்பட்ட பல்வேறு மீன்பிடி முறைகளை மீனவர்கள் தொடர்ச்சியாக பயன்படுத்தினர். மீன்பிடி முறைகளை மாற்றிக் கொள்வதற்கு கடந்த 15 ஆம் திகதிவரை கடற்றொழில் திணைக்களம் கால அவகாசம் வழங்கியது. 15 ஆம் திகதிக்குப் பின்னர் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகள் பயன்படுத்தப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தது.
அதேவேளை, தமக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் போதாது என்று மீனவர்கள் தெரிவித்தனர்.
இலங்கை மீன்பிடிச் சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட மீன்பிடி முறைகளுக்கு தடை கிடையாது. ஆனால் வரை முறைகள் உள்ளன. கரையில் இருந்து கூடிய பட்சம் 5 கடல் மைல் தூரத்துக்குட்பட்ட பகுதியிலேயே இந்த முறைகளை உபயோகிக்கலாம். ஆனால் மீனவர்கள் 10 கடல் மைல் தூரம் வரை உபயோகிக்கின்றனர். அதனால் ஏனைய மீன்பிடி முறைகளைப் பயன்படுத்துவோர் பாதிக்கப்படுகின்றனர்.
அனைத்து மீனவர்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு, 5 கடல் மைல் தூரத்துக்கு மட்டுமே இந்த முறைகளைப் பயன்படுத்த அனுமதிக்கப்படும். மீறிச் செயற்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் - என்று மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (ற-101)

# நூறு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

## தாண்டிக்குளத்தில் நிகழ்வு



வவுனியா, ஜன.19
பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களின் கற்றல் திறனை ஊக்குவிக்கும் வகையில் தாண்டிக்குளத்தில் 100 மாணவர்களுக்கு நேற்று கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.
லண்டன், நெடுந்தீவு விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையில் தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் ஒழுங்கமைப்பில் தாண்டிக்குளம் ஐயனார் விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.
நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் தலைவர் சு.காண்டீபன் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ.கேசவன் மற்றும் ஐயனார் ஆலயத்தின் தலைவர் உமாபதி, செயலாளர் சிவலிங்கம் பொருளாளர் ரங்கநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
கௌரவ அதிதிகளாக ஐயனார் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் அனோஜன், பொருளாளர் நிஷாந்தன், வவுனியா இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிஸ்கோ திட்ட இயக்குநர் ரி.அமுதராஜ், தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் பொருளாளர் த.நிகேதன் மற்றும் தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் உப தலைவர் பி.கெர்சோன், அமைப்பாளர் பிரகாஷ்கர் உறுப்பினர் கணேசலிங்கம் மாறன் ஆகியோருடன் கிராம சமூகமட்ட அமைப்புக்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.
பிரித்தானியா விளையாட்டு கழகத்தின் ஆதரவில் 'கல்வியால் எழுவோம்' என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொடர்ச்சியாக பாடசாலை மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன. (ற)

# வடக்கு – கிழக்கு கட்டமைப்பு குறித்து கனடாவில் மாநாடு



யாழ்ப்பாணம், ஜன.19
வடக்கு - கிழக்கு மாகாணங்களின் மீள்கட்டமைப்பு தொடர்பான சர்வதேச உயர் நிலை மாநாடு கனடா நாட்டின் ஒன்ராரியோ மாநிலத்தில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. முதல் நாள் கல்வி அபிவிருத்தி தொடர்பான உயர்நிலை கலந்துரையாடல் நடைபெற்றுள்ள நிலையில் சுகாதாரதுறை அபிவிருத்தி தொடர் பான கலந்துரையாடல் ஆரம்பமானது.
இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.
அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது:
கடந்த வருடம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் கனடாவுக்கு சென்றிருந்தவேளை இலங்கை வாழ் புலம்பெயர் துறைசார் நிபுணர்களையும் தன்னார்வத்தொண்டு நிறுவனங்களையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். அதன் பயனாக கனேடிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் புலம்பெயர் உறவுகளின் நிதியுதவியுடன் வடக்கில் போரால் பாதிக்கப்பட்டு காயமடைந்து சுயமாக இயங்கமுடியாது படுக்கையிலிருக்கும் நோயாளிகளை அவர்களின் வீடுகளுக்குச் சென்று சிகிச்சை வழங்கும் நடமாடும் சுகாதார சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
அதன் தொடர்ச்சியாக கனேடிய தமிழர் பேரவையின் ஒழுங்குபடுத்தலில் இந்த வருடம் தை மாதம் 16ஆம், 17ஆம்,18ஆம் திகதிகளில் கனடாவின் ஒன்ராரியோ மாநிலத்தில் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் சுகாதாரம் மற்றும் கல்வி அபிவிருத்தி தொடர்பான உயர்நிலைமட்ட கலந்துரையாடல் ஒன்று ஒழுங்கு படுத்தப்பட்டது.
முதல்நாள் கல்வி தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றுள்ள நிலையில் 2ஆம், 3ஆம் நாள்கள் சுகாதார துறைசார் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நடைபெறுகின்றது.
முதல்நாள் அமர்வின் போது வடக்கில் வாழுகின்ற மாற்றுத்திறனாளிகள் தொடர்பில் முக்கியமான கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சருடன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராஜாவும் கலந்து கொண்டார். (ற)

# வடக்கு அபிவிருத்தி திட்டங்கள் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 19
வடக்கு மாகாண அபிவிருத்தித் திட்டப் பணிகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா தலைமையில் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.
நிலையான யுகத்தில் மூன்றாவது வருடத்தை ஆரம்பிப்போம் என்ற தொனிப் பொருளிலான அபிவிருத்தித் திட்டங்கள், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் எண்ணக் கருவுக்கு அமைய இந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இன்று வவுனியாவிலும், நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திலும் பல்வேறு அபிவிருத்தித் திட்டப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.
இந்த அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் 'நிலையான யுகத்தின் நாட்டின் பிராந்தியம்', 'நிலையான இலக்கு' போன்ற பெரிய அபிவிருத்தித் திட்டப் பணிகளும், வறுமையை நீக்குவதற்கான புதிய திட்டங்களும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.
இதன்மூலம் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களின் வாழ்வாதாரத்தைப் பலப்படுத்தும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்று 2 வருடங்கள் முழுமையாகியுள்ள நிலையில், 2017 ஜனவரி 8 ஆம் திகதி முதல் பெப்ரவரி முதலாம் திகதி வரை இந்த அபிவிருத்தித் திட்டங்கள் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.
ஜனாதிபதி மைத்திரியின் பணிப்பின் பேரில் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா இந்தப் பணிகளை இன்று வவுனியாவிலும், நாளை யாழ்ப்பாணத்திலும் ஆரம்பித்து வைக்கவுள்ளார் என்று அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ற-5)

## சிறையில் புத்தகம் எழுதுகிறார் விமல்



கொழும்பு, ஜன. 19
சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச புத்தகம் ஒன்றை எழுதி வருகின்றார் எனக் கூறப்படுகின்றது.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் வாகன முறைகேட்டில் ஈடுபட்டதாக விமல் வீரவன்ச மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அண்மையில் கைது செய்யப்பட்ட விமல் வீரவன்ச தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நாள்தோறும் நள்ளிரவு 12.00 மணி வரை கண்விழித்து நூல் எழுதும் பணிகளில் விமல் வீரவன்ச ஈடுபட்டு வருகின்றார்.

நேற்று முன்தினம், பிரதி அமைச்சர் சுமேதா ஜயசேன, விமல் வீரவன்சவைப் பார்வையிடச் சிறைக்குச் சென்றிருந்தார்.

இதன்போது கிடைத்துள்ள ஓய்வில் தாம் நூல் எழுதி வருவதாகவும் இதுவரை 24 பக்கங்கள் எழுதி முடித்துள்ளதாகவும் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

சிறையிலிருந்து விடுதலையானதும் தாம் இந்த நூலை அச்சிட்டு வெளியிடத் தீர்மானித்துள்ளதாக அவர் கூறியுள்ளார். (கு)

# உள்ளூராட்சி தேர்தலுக்கு அஞ்சுகிறது சுதந்திரக் கட்சி

### கூறுகிறது கூட்டு எதிரணி

கொழும்பு, ஜன. 19
சிறிலங்கா சுதந்திரக் கட்சி உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு அஞ்சுகின்றது என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்தி வைக்கும் தேவை ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடையாது.

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சித் தரப்பே உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்தி வைக்க வேண்டுமென விரும்புகின்றது. ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் நடத்தப்பட வேண்டுமென விரும்புகின்றது.

எனினும் சுதந்திரக் கட்சி தோல்வியடையும் என்பதனை நன்கு உணர்ந்து கொண்டுள்ளது. எந்தத் தரப்பு வெற்றியீட்டினாலும் தேர்தல் நடத்தப்பட வேண்டியது அவசியமானதாகும்.



உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு கோரி தொடர்ச்சியாக போராட்டம் நடத்துவோம். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்தி வைப்பது இந்த நாட்டு மக்களுக்கு இழைக்கும் அநீதியாகும்.

இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக சில உள்ளூராட்சி மன்றங்களை ஆணையாளர் அல்லது செயலாளர் நிர்வாகம் செய்து வருகின்றார். அரசியல் நிர்வாகத்திற்கு உட்பட்ட நிறுவனங்கள் இவ்வாறு நிர்வாகம் செய்யப்படுவது நியாயமற்றது இது தொடர்பில் நாடு முழுவதிலும் கூட்டங்கள் நடத்தி மக்களை தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (கு)



# சகல இனங்களுக்கும் சுதந்திரம் மிக அவசியம்

### அரச தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 19
தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளில் நாட்டில் அனைத்து இனங் களுக்கும் தத்தமது தேசிய அடையாளங்களையும் தத்தமது மத, கலாசார அடையாளங்களையும் வெளிப்படுத்தக்கூடிய உரிமை மற்றும் சுதந்திரம் அவசியமானதாகும். அது உறுதிப்படுத்தப்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பு டி. பி. ஜாயா மாவத்தையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட முஸ்லிம் திணைக்களக் கலாசார கட்டடத் தொகுதியை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கள, தமிழ், முஸ்லிம் தலைவர்கள் ஒன்றிணைந்து போராடியதாலேயே நாட்டுக்குச் சுதந்திரத்தைப்பெற்றுக்கொள்ள முடிந்தது. அவ்வாறே நாட்டையும் மக்களுக்கிடையிலான நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தருணம் வந்துள்ளது.

அனைத்து இனத்தினருக்கும் தத்தமது இனம் மதம் கலாசாரத் தனித்துவத்தைப் பேணும் சுதந்திரமுள்ளது. இலங்கையர் என்ற உணர்வோடு நாட்டின் முன்னேற்றத்திற்காக ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

எமது நாடு பன்னாட்டினால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தபோது சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து படையினரைப் போல் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகச் செயற்பட்டுள்ளதை வரலாற்றில் காணமுடியும்.

1948களில் பிரிட்டன் ஆட்சியின்போது தாய் நாட்டுக்குச் சுதந்திரம் பெற்றுக்கொள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் தலைவர்கள் ஒன்றிணைந்து போராடினர். அவ்வாறு ஒன்றிணைந்தே சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காகச் சிங்கள, தமிழ், முஸ்லிம் தலைவர்கள் சகோதரத்துவத்துடன் ஒன்றிணைந்து செயற்பட்டு தேசிய சுதந்திரப் போராட்டத்தின் வீரர்களாகத் திகழ்கின்றனர். அந்த யுகத்தில் அவர்கள் இணைந்து போராடியதை இன்று சிலர் மறந்து செயற்படுகின்றனர்– என்றார். (கு)

## மட்டக்களப்பில் எம்.ஜி.ஆர். நூற்றாண்டுவிழா

மட்டக்களப்பு, ஜன.19
மட்டக்களப்பு - கரவெட்டியில் எம்.ஜி.ஆர். பிறந்தநாள் நூற்றாண்டு விழா நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றதாக எம்.ஜி.ஆர் நற்பணி மன்றத் தலைவர் வேலாப்போடி கெங்காதரம் தெரிவித்தார்.

கரவெட்டி பலநோக்கு மண்டப வளாகத்தில் இடம்பெற்ற இந்த விழாவில் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ராமச்சந்திரனின் உருவப் படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு, கேக் வெட்டப்பட்டதுடன் நலன்புரி உதவிகளும் வழங்கப்பட்டன.

(த-ய-46)

# வரலாற்றில் முதன்முறையாக நாட்டு நெல் ஒரு கிலோ 51 ரூபா

கொழும்பு, ஜன. 19
இலங்கை வரலாற்றில் முதன்முறையாக நாட்டு நெல்லின் விலை கிலோவொன்றுக்கு 51 ரூபாவாக உயர்ந்திருப்பதாக பொலன்னறுவை விவசாயிகள் தெரிவித்தனர்.

பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள அரிசி ஆலை உரிமையாளர்கள் நாட்டு நெல்லை 51 ரூபாவுக்கும், சாதாரண சம்பா நெல்லை 50 ரூபாவுக்கும், கீரிச் சம்பா நெல்லை 56 ரூபாவுக்கும் கொள்வனவு செய்துவருகின்றனர் எனவும், சம்பாவை விட நாடு விலை உயர்ந்துள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவே எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த பெரும்போகத்தின் பின்னர் நாடு நெல் 35 ரூபாவாகவும், சம்பா நெல் 35 ரூபாவாகவும், கீரிச் சம்பா நெல் 45 ரூபா வாக வும் இருந்தன. அதன்பின் அவற்றின் விலை கிலோ வொன்றுக்கு 3 தொடக்கம் 4 ரூபா வரை அதிகரித்தபோது விவசாயிகள் தங்க ள் இருப்பில் இருந்தவற்றை ஒரேயடியாக விற்று விட்டதால் இன்று இந்த விலைகள் உச்சக்கட்டத்துக்குப் போயிருப்பதாக அவர்கள் கூறினர். (த)

# மலையகத் தொழிலாளரும் வறட்சியினால் பாதிப்பு

### நிவாரணம் வழங்கக் கோரிக்கை

கொழும்பு, ஜன. 19
வறட்சியால் மலையகத் தோட்டத் தொழிலாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொளுத்தும் வெயிலுக்கு மத்தியிலும் நிர்ணயிக்கப்பட்ட அளவு கொழுந்தைப் பறித்தாக வேண்டும் என்று சில தோட்டக் கம்பனிகள் வலியுறுத்தி வருகின்றன என்று தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வெயிலில் மலையேறுவதே கடினம். நிலமை அப்படியிருக்கையில் கூடையையும் சுமந்துகொண்டு எப்படி நிறைய கொழுந்து பறிப்பது? என்று பெண் தொழிலாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

கூட்டு ஒப்பந்தத்தின் ஊடாகவும் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமானதொரு சம்பள உயர்வு கிடைக்கவில்லை. இதனால் பொருளாதார ரீதியிலும் அவர்களுக்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கூட்டு ஒப்பந்தத்திலுள்ள சரத்துகளுக்கப்பால், வறட்சி போன்ற சந்தர்ப்பங்களில் தொழிலாளர்களுக்குரிய உதவிகளைத் தோட்டக் கம்பனிகள் வழங்கவேண்டும். ஆனால், அந்த நடைமுறை இன்னும் பின்பற்றப்படவில்லை.

இந்நிலையில், தோட்டத் தொழிலாளர்களுக்கு வறட்சி நிவாரணத்தை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரான அ.லோரன்ஸ் கோரிக்கை விடுத்துள்ளார். ஜனாதிபதி செயலணியும் இது குறித்து கவனம் செலுத்தவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (கு)


# வறட்சி பாதித்தோருக்கு அரசின் நிவாரணப் பணி

கொழும்பு, ஜன. 19
நாட்டில் நிலவும் வறட்சியான கால நிலையினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான வசதிகளை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

விவசாயம் மற்றும் மக்களின் பாவனைக்குத் தேவையான நீரைச் சிறந்த முறையில் முகாமை செய்து பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாவட்டச் செயலாளர்கள் ஊடாக இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அம்பாந்தோட்டை, பொலன்னறுவை, அனுராதபுரம், மொனராகலை, புத்தளம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கத் தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (கு)

"உலகின் 58 சதவீதமான சொத்துக்களின் தொகை மதிப்பீடுகள் 8 கோடீஸ்வரர்களின் கைகளில் திரண்டுள்ளது. இதன் விகிதாசாரம் என்பது உலகளவில் 50 சதவீதமாக காணப்படுவதாக பொருளாதார அமைப்புகள் தெரிவித்துள்ளன."




வணிகம்

### ஆய்வறிக்கை 2016
(2010 ஆம் ஆண்டுடனான ஒப்பீட்டு ரீதியான வெளியீடு)

- பன்னாட்டு அளவில் 62 பில்லியன் மக்களின் சொத்து மதிப்பு 44 சதவீகிதம் அதிகரித்துள்ளது.
- ஏழைகளின் சொத்துமதிப்பு 41 சதவீகிதம் சரிவடைந்துள்ளது.

## நவீனத்துவமான இலத்திரனியல் ஸ்கூட்டர் அறிமுகம்

யு.ஆர்.பி இ ஸ்போட் என்ற பெயருடையதான நவீனத்துவங்களுடன் கூடிய இலத்திரனியல் ஸ்கூட்டர் ஒன்றினை அமெரிக்க நிறுவனமொன்று வடிவமைத்து சந்தையில் அறிமுகம் செய்துள்ளது.

இவை பயணத் தேவைகளுக்காக பயன்படுவது மட்டுமன்றி எத்தகைய இடங்களுக்கும் எளிதில் கொண்டு செல்லக்கூடிய வகையில் குறிப்பாக மடித்து வைத்துக் கொள்ளும் வகையிலான தோற்றப்பாட்டைக் கொண்டமைந்துள்ளது. மேலும் ஒரே சமயத்தில் 5 சாதனங்களை மின்னேற்றம் செய்யும் வசதியையும் கொண்டுள்ளது. மின்சாரம் மூலமாக இயங்கும் இந்த ஸ்கூட்டரை ஒருமுறை மின்னேற்றம் செய்வதன் மூலம் 25.7 கிலோ மீற்றர் தூரம் செல்லவும் 22.5 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கவும் முடிவதாக கூறப்படுகிறது.

நுட்பம்



# உலக பொருளாதாரத்தின் சமநிலை தளம்பல் நிலையை அடைந்துள்ளது

## பொருளாதார அமைப்புகள் கருத்துரைப்பு

உலகளாவிய ரீதியிலே பொதுமைப்படுத்தப்பட வேண்டிய திரவத் தன்மை வாய்ந்த சொத்துக்களின் அதிக தொகை மதிப்பீடுகள் கோடீஸ்வரர்களின் கைகளில் மொத்தமாகத் திரட்சியடைந்துள்ள செயல்நிலைகள் உலக பொருளாதாரத்தின் சமநிலையில் தளம்பல் நிலமைகளை ஏற்படுத்தியுள்ளதான தகவல்களை உலக பொருளாதார அமைப்புகள் வெளிப்படுத்தியுள்ளதுடன் அது குறித்து தங்களது அச்சத்தையும் தெரிவித்துள்ளது.

பன்னாட்டு அளவில் முன்னணியில் உள்ள கோடீஸ்வரர்கள் மற்றும் அவர்களின் சொத்து மதிப்பீடு தொடர்பில் 'ஆக்ஸ்போம்' நிறுவனம் மேற்கொண்ட ஆய்விலேயே மேற்படி விடயம் தெரியவந்துள்ளது.

குறிப்பாக சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் இடம்பெற்றிருந்த பன்னாட்டு பொருளாதார அமைப்பின் வருடாந்த கூட்டத் தொடரில் ஆக்ஸ்போம் நிறுவனம் 'பொருளாதாரம் 99 சதவீதம்' எனும் தலைப்பின் கீழாக வெளிப்படுத்தியுள்ள புள்ளி விவரத் திரட்டிலேயே இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்படி உலகளவிலான சொத்து மதிப்பீட்டின் பாதியளவைக் கொண்டுள்ள எட்டு நபர்களில் 6 பேர் அமெரிக்க வர்த்தகர்கள் என்பதும் ஏனைய இருவரில் ஒருவர் ஸ்பெயின் மற்றும் மெக்சிகோ நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதும் நோக்கத்தக்கது.

முதலிடத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த மைக்ரோசொப்ட் நிறுவுநர் பில்கேட்ஸ் தனது சொத்து மதிப்பீட்டினை 743 கோடி டொலர்களாக கொண்டுள்ளதுடன் அவரைத் தொடர்ந்து இரண்டாவது இடத்தினை தக்க வைத்துக் கொண்டுள்ள ஸ்பெயினைச் சேர்ந்த அமான்சியோ ஆர்டேகா சொத்து மதிப்பீடாக 663 கோடி டொலர்களையும் மூன்றாவது இடத்தினை தனதாக்கிக் கொண்டுள்ள அமெரிக்காவின் வாசன் பப்பெட் 602 கோடி டொலர்களை சொத்து மதிப்பீடாக் கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனையவர்களில் நான்காவது இடத்தினை பிடித்துள்ள மெக்சிகோவின் கார்லஸ் ஸ்லிம் ஹீலு 494 கோடி டொலர்களையும் முறையே 5 ஆம், 6ஆம்,7 ஆம் மற்றும் 8 ஆம் இடங்களை தக்கவைத்துக் கொண்டுள்ள அமெரிக்காவைச் சேர்ந்த அமேசான் டாட் காம் தலைவர் ஜெய் பெரோஸ் 448 கோடி, பேஸ்புக் தலைமை அதிகாரி மார்க் கர்பெர்க் 441 கோடி, ஒரகில் தலைமை அதிகாரி லார்ரி எல்லிசன் 412 கோடி, நியூயோர்க்கின் முன்னாள் மேயர் மைக்கேல் புளூம்பெர்க் 396 கோடி டொலர்களை சொத்து மதிப்பீடாக கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவைதவிர கடந்த 30 ஆண்டுகளில் உலகின் செல்வந்தர்களும் பெருநிறுவனங்களும் கூட்டிணைந்து உலக பொருளாதாரத்தை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக குறிப்பிடும் மேற்படி புள்ளிவிவரத் திரட்டானது அரசியல் செல்வாக்கினை இந்த நபர்கள் பரிபூரணமாக பெற்றுக்கொள்வதாகவும் உலகின் பொருளாதார வளர்ச்சியின் பயன் என்பது சமூகத்தில் இருக்கின்ற குறித்த ஒரு பகுதியினருக்கு மட்டுமே சென்றடைவதாகவும் ஏழைகளின் வளர்ச்சியில் இந்த மாற்றங்கள் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதனையும் ஏற்படுத்தவில்லையெனவும் தகவலளித்துள்ளது.

### அறிக்கையின் முக்கிய அம்சங்கள்

- ஒரு சிலர் மட்டுமே பயனடையும் பொருளாதாரத்தால் பயனில்லை. அனைத்து மக்களுக்கும் சென்றடையக்கூடியதான மனித பொருளாதாரத்தை உருவாக்குங்கள்.
- ஏழைகளின் வருமானம் கடந்த 20 ஆண்டுகளில் 15 சதவீதம் வீழ்ச்சி கண்டுள்ளது.
- பணியிடங்களில் ஊதியம் வழங்கலில் பாரபட்சம் காணப்படுகிறது. பெண்களை விட ஆண்களுக்கு 70 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை வித்தியாசம் உள்ளது.
- உலகின் பெரும்பாலான நிறுவனங்கள் இலாப நோக்கத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டுள்ளன. தங்களது முதலீட்டாளர்களுக்கு அதிக இலாபம் கிடைக்க வேண்டும் என்பதான நோக்கோடு செயற்படுகின்றன.

## வெளிநாட்டு முதலீடுகள் வீழ்ச்சி

இலங்கையின் பன்னாட்டுக்கான நேரடித் தன்மை வாய்ந்த முதலீடுகள் கடந்த 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 45.6 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் தொகை மதிப்பீடு என்பது அண்ணளவாக 300 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளது.

இதேவேளை கடந்த 2016 ஆம் ஆண்டில் இந்தத் தொகையானது 658 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தநிலையிலே 2015 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களும் கொள்கை மாற்றங்களும் இந்த வீழ்ச்சியில் பிரதான பங்களிப்பை வழங்கியிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசு 5 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடாகஈட்டிக்கொள்வதற்கான நிர்ணயங்களைக் கொண்டிருந்த போதும் அந்த இலக்கை அடைவதற்கு போதியளவு வழிகாட்டல்களை அரசு வழங்கவில்லை என முதலீட்டு செயற்பாடுகளுடன் தொடர்புடைய அதிகாரிகள் கருத்துரைத்துள்ளனர்.






# 'சின்னம்மா சின்னம்மா ஓ.பி.எஸ். எங்கம்மா?'

# இரவுபகல் பாராமல் மெரீனாவில் தீவிர போராட்டம்

## கொட்டும் பனி, வெயில் மத்தியிலும் தமிழ்நாடெங்கும் இளைஞர் எழுச்சி

சென்னை, ஜன. 19

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டை மீண்டும் நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி தமிழ்நாடெங்கும் இரவு பகல் பாராமல் இளைஞர்கள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

மிருகவதை என்று தெரிவித்து இந்தியாவில் ஜல்லிக்கட்டு தடைசெய்யப்பட்டுள்ளது. ஆனால், தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டாதலால் அதை தடைப்பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என்று பல அரசியல் கட்சிகள் வலியுறுத்தின. ஆனால் பொங்கல் முடிந்த பிற்பாடும் ஜல்லிக்கட்டு விவகாரத்தில் உறுதியான எந்த முடிவும் வழங்கப்படவில்லை. டெல்லி அரசின் இந்த நிலைப்பாட்டைக் கண்டித்து, தமிழ்நாட்டில் பரவலான கண்டனங்களும், ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் இடம்பெற்று வருகின்றன.

**வித்திட்டது அலங்காநல்லூர்**

இந்த வருடத்தின் ஆரம்பத்தில் இருந்து பல ஆர்ப்பாட்டங்களும் கவனவீர்ப்புக்களும் இடம்பெறுகின்றபோதிலும், அலங்காநல்லூரே மிகப்பெரும் புரட்சியை தோற்றுவித்தது. அங்கு கடந்த திங்கட்கிழமை மிகப்பெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 200 இற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களை விடுவிக்க வலியுறுத்தி நேற்றுமுன்தினம் சாலை மறியல்கள் இடம்பெற்றன.

**இரவிரவாக முடங்கியது மெரீனா**

சென்னையின் முக்கிய இடங்களில் ஒன்றான மெரீனா கடற்கரையில் கிட்டத்தட்ட 5 ஆயிரம் இளைஞர்கள் ஒன்றுதிரண்டு நேற்றுமுன்தினம் இரவு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இளைஞர்களுடன் பொலிஸார் மூன்று முறை பேச்சுவார்ததை நடத்தியும் எவ்விதப் பயனும் ஏற்பட வில்லை. ஆர்ப்பாட்டத்தை அடக்குவதற்காக குறித்த பகுதிக்கான மின்விநியோகம் துண்டிக்கப்பட்டது. இருப்பினும் குழுமியிருந்த நூற்றுக்கணக்கான இளைஞர்கள் தமது அலைபேசி ஒளியைப் பயன்படுத்தி தொடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தி.மு. கழகத்தின் செயல் தலைவர் ஸ்ராலின் ஆர்ப்பாட்டக்காரர்களைச் சந்திக்கச் சென்றார் என்றும், அரசியல் வாதிகளுக்கு இடமில்லை என்று அவர் இளைஞர்களால் திருப்பி அனுப்பப்பட்டார் என்றும்-சிலஊடகங்கள்செய்திவெளியிட்டன. கொட்டும் பனியையும் பாராமல் இரவிரவாக இளைஞர்கள் மெரீனாவில் திரண்டிருந்தனர்.

**மாணவர்களும் இணைந்தனர்**

போராட்டம் மூன்றாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் இடங்களிலெல்லாம் பாடசாலை மாணவர்கள் ஒன்று சேர்ந்து வலுவூட்டுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. சில மாணவர்கள் மெரீனாவிலும், அலங்கா நல்லூரிலும் இணைந்த னர். இதனால் மேலும் பரபரப்பானது தமிழ்நாடு.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று மாலைவரை சந்திக்கவில்லை. இதனால் அவருக்கு எதிராக, 'சின்னம்மா சின்னம்மா ஓ.பி.எஸ். எங்கம்மா? என்று இளைஞர்கள் முழக்கமிட்டனர். என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன.

(ம)



## மத்தியதரைக் கடலில் சோகம்

# மற்றுமொரு படகு கவிழ்ந்தது 180 பேர் மூழ்கி பரிதாபச்சாவு

மத்திய தரைக்கடலில் கடந்த திங்கட்கிழமை படகொன்று கவிழ்ந்ததில் 180 பேர் உயிரிழந்தனர்.

உள்நாட்டுப் போர் காரணமாக சிரியா, ஈராக், லிபியா, ஆப்கானிஸ்தான், எத்தியோப்பியா, எரித்திரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மக்கள் லிபியாவுக்குச் சென்ற பின்னர், அங்கிருந்து இத்தாலிக்கு அகதிகளாகச் செல்கின்றனர். அவ்வாறு 180 இற்கும் மேற்பட்ட அகதிகளை ஏற்றிச் சென்ற படகு கடந்த திங்கட்கிழமை மூழ்கியதில் 180 பேர் உயிரிழந்தனர். நோர்வே நாட்டுக்குச் சொந்தமான படகொன்றால் நால்வர் மீட்கப்பட்டனர். அவர்களிடம் நடத்திய விசாரணையிலேயே 180 பேர் உயிரிழந்தமை தெரியவந்தது. (ம-எ)

# இலக்குத் தவறிய தாக்குதல்: நைஜீரியாவில் 100 பேர் சாவு

அபுஜா, ஜன. 19

நைஜீரிய இராணுவம் மேற்கொண்ட இலக்குத் தவறிய வான் தாக்குதலால் 100 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நைஜீரியாவில் போகோஹறாம் ஆயுததாரிகள் பெரும் அச்சுறுத்தலாக இருந்து வருகின்றனர். இதனால் போகோஹறாம் ஆயுததாரிகளுக்கு எதிராக நைஜீரிய இராணுவம் பெரும் தாக்குதலை நடத்தி வருகின்றது. நைஜீரியாவின் வடக்குப் பகுதியில் உள்ள ரான் பகுதியில் அகதிகள் முகாம் மீது இராணுவ விமானப் படையைச் சேர்ந்த ஜெட் விமானம் குண்டு வீச்சை நடத்தியது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட அகதிகள் உயிரிழந்தனர். பலர் காயம் அடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. இந்தத் தாக்குதல் இலக்குத் தவறிய தாக்குதல் என்று பின்னர் தெரிவிக்கப்பட்டது. உயிரிழந்த 100 பேரில் 20 பேர் அகதிகளிடையே பணியாற்றி வந்த செஞ்சிலுவைச் சங்கத்தினர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)

# தேடும்பணி நிறுத்தம்

ஹொங்கொங், ஜன. 19

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இருந்து சீன தலைநகர் பீஜிங் நோக்கி, 239 பயணிகளுடன் காணாமற்போன மலேசிய விமானத்தை தேடும்பணி நிறுத்தப்பட்டது. 227 பயணிகள், 12 சிப்பந்திகளுடன் மலேசிய எயர்லைன்ஸ் விமானம் எம்.எச். 370, கடந்த 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதி புறப்பட்டுச் சென்றது. ஆனால் 2 மணி நேரத்தில் அந்த விமானம், ராடரில் இருந்து மாயமானது. விமா னம் இந்தியப் பெருங்கடலில் விழுந்து விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது. விமானத்தில் இருந்தவர்கள் அனைவரும் உயிரிழந்துவிட்டனர் என்றும் கூறப்பட்டது. அந்த விமானத்தை தேடிக் கண்டுபிடிக்க பல்வேறு நாடுகள் கூட்டாக முயற்சிகள் மேற்கொண்டன. நவீன தொழில்நுட்பங்கள் பின்பற்றப்பட்டன. ஆனால், எந்தப் பயனும் இல்லை. இந்த நிலையில், விமானத்தை தேடும் பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டது. (ம-எ)

# விடுவிப்பு!

வொஷிங்டன், ஜன. 19

அமெரிக்காவின் ஜனாதிபதியாக உள்ள ஒபாமாவின் ஆட்சிக்காலம் இன்றுடன் முடிவடையவுள்ள நிலையில், அவர் 64 கைதிகளுக்கு நேற்று பொதுமன்னிப்பு வழங்கினார். விடுவிக்கப்பட்ட 64 பேரும் சிறு குற்றங்களில் ஈடுபட்டவர்கள் என்று அமெரிக்க ஊடகங்கள் குறிப்பிட்டன. இதை விட 209 கைதிகளின் தண்டனைக் காலத்தை குறைத்தும் அவர் தீர்ப்பிட்டார். (ம-எ)

# நெடுந்தாரகையின் முதல்பயணம்

## நாளை (20.01.2017) வெள்ளிக்கிழமை

**ஆஸ்திரேலிய நாட்டின் ( DFAT ) வெளிவிவகார மற்றும் வர்த்தகத் திணைக்களத்தின்**
**100 மில்லியன் ரூபா நிதிப்பங்களிப்பிலும் நெல்சிப் திட்ட 50 மில்லியன் ரூபாவுடன் 150 மில்லியன் ரூபாவில்**
**சர்வதேச தரத்துடனான இலங்கையில் கட்டப்பட்ட முதலாவது பயணிகள் படகு**
**நெடுந்தீவு வாழ்மக்களின் நன்மை கருதி சேவையில் இணைக்கப்படுகின்றது.**

2011 ஆம் ஆண்டு நெல்சிப் திட்டத்தின் கீழ் பிரதேச சபை ரீதியிலான மக்கள் பங்களிப்பு கருத்திட்டம் 50 மில்லியனில் தயாரிக்கப்பட்ட வேளையில் நெடுந்தீவு பிரதேச சபையினால் முதன்மையாக பரிந்துரைத்த பயணிகள் படகு தேவை அடிப்படையில் இனம் காணப்பட்டது. இருப்பினும் குறித்த படகு கட்டுமானத்திற்கான கேள்வி கோரப்பட்டபோது 150 மில்லியன் ரூபா தேவை என கண்டறியப்பட்டது. இதனால் மேலதிக 100 மில்லியன் ரூபா பெறுவதில் தாமதம் ஏற்பட்டது. வடமாகாண பிரதம செயலாளரின் முயற்சினால் மேலதிக 100 மில்லின் ரூபா ஆஸ்திரேலிய நாட்டினால் உலக வங்கிக்கு வழங்க இணக்கம் காணப்பட்டது.


இதனை அடுத்து இலங்கை கப்பல்கட்டுமான நிறுவனமான டொக்கியாட் நிறுவனத்துக்கும் வட மாகாண பிரதம செயலாளரிற்குமிடையில் படகு கட்டுமானத்துக்குரிய ஒப்பந்தம் எழுதப்பட்டது. இவ்வாறு கட்டப்பட்ட படகிற்கான பெறுமதிசேர் வரியான 18 மில்லியன் ரூபாவினை டொக்கியாட் நிறுவனம் தளர்த்தி உதவியது.

இப்படகிற்காக ஓர் ஆண்டுக்கான 36 லட்சம் ரூபா முழுக் காப்புறுதியும் செய்யப்பட்டுள்ளது. ஒரேதடவையில் 80 பயணிகள் 40 கிலோ பொதியுடன் பயணிக்க முடியும். பயணிக்கும் பயணிகள் அனைவருக்கும் அவசர காலமிதப்பை வசதிகள் படகிற்கான அவசரமிதப்பை வசதி ஆகியவற்றுடன் கூடிய பயணவாய்ப்பு.


THE WORLD BANK

Australian Government
Department of Foreign Affairs and Trade





**றெயினோல்ட் குரே**
ஆளுநர்
வட மாகாணம்



**சீ.வி. விக்னேஸ்வரன்**
முதலமைச்சர்
வட மாகாணம்



**Bryce Hudsession**
Australian
High Commissioner



**Idah Z. Pswarayi-Riddihough**
(Country Director for
Sri Lanka and Maldives)



**பைசர் முஸ்தபா**
மாகாண சபைகள்
உள்ளூராட்சி அமைச்சர்

2017.01.20 காலை 9 மணிக்கு இடம்பெறும் இப்படகு பயணத்தினை
**ஆஸ்திரேலியத் தூதுவர் Brice Hutchesson, முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரன், உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா மற்றும் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, உலகவங்கியின் பிரதிநிதி Idahz pswarayi - Riddihough (Country Director for Sri Lanka and Maldives) ஆகியோர் இணைந்து ஆரம்பித்துவைப்பர்.**

**வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத்திட்டம்**
**வடமாகாணம்**
**நெல்சிப் அலுவலகம்**
**வட மாகாண சபை.**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தமிழ் அடையாள மீட்புக்கான போராட்டம்

தமிழ் நாட்டில் ஜல்லிக்கட்டு எனப்படும் ஏறுதழுவுதல் விளையாட்டுக்கான தடையை எதிர்த்து மாணவர்கள் ஆரம்பித்த போராட்டம் வீரியம் பெற்றுள்ளது. அரசியல்வாதிகள் மற்றும் அனைத்துத் தரப்பினரும் அதற்கு ஆதரவளிக்கும் நிலமையையும் இந்த வீரியம் ஏற்படுத்தியிருக்கிறது.

மிருக வதை என்கிற கருத்தின் கீழ் ஏறுதழுவுதலுக்கு இந்திய உச்ச நீதிமன்றம் தடை விதித்து நான்கு ஆண்டுகள் ஆகிய நிலையில், அதனை எதிர்த்துப் போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன. நீதிமன்ற உத்தரவை எதிர்த்து ஆங்காங்கே அடையாள ஜல்லிக்கட்டுப் போட்டிகளும் இடம்பெற்றுள்ளன. அதனை அடக்கக் காவல் துறையினர் மேற்கொண்ட கைதுகள், பொங்கல் நாள் கடந்தும் போராட்டங்கள் தொடரவும், அது மேலும் வீரியமடையவும் காரண மாகியிருக்கிறது.

'பீற்றா' எனப்படும் மிருக வதைக்கு எதிரான அமைப்பு, ஏறுதழுவுதலைத் தடைசெய்யுமாறு தாக்கல் செய்த மனுவை ஏற்றுக்கொண்ட உச்ச நீதிமன்றம் இந்தத் தடையை விதித்திருந்தது. இதற்கு முன்னதாகவே ஏறுதழுவுதல் போட்டியில் கலந்துகொள்ளும் காளைகளைச் சித்திரவதை செய்யாமல் இருப்பதற்கும், போட்டியில் உயிர்ச் சேதங்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்குமாகப் பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டு வந்தன. போட்டிக்கு முன்பாக மாடுகளையும் மாடு பிடிப்போரையும் சோதனையிடுவது உள்ளிட்ட பல ஒழுங்குமுறைப்படுத்தல்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தன.

ஆனால், போட்டிகளின்போது நிபந்தனைகள் பின்பற்றப்படாமல் மாடுகள் துன்புறுத்தப்படுகின்றன என்று 'பீற்றா' போர்க்கொடி தூக்கியதன் விளைவாகவே ஏழுதழுவுதலுக்கான தடை விதிக்கப்பட்டது. மாடுகளை வளர்ப்பவர்களோ, சொந்தப் பிள்ளைக்கு ஒப்பாக நாம் வளர்க்கும் காளைகளை நாமே சித்திரவதை செய்வோமா, வதைப்போமா என்று பதில் கேள்வி கேட்கிறார்கள். ஒரு நாளைக்கு உழைக்கும் கூலியில் அரைவாசியை அல்லது முழுவதையுமே மாடுகளுக்கு உணவாகப் போட்டுத்தான் வளர்க்கிறோம், அப்படிப்பட்ட நாங்கள் எப்படி அவற்றைத் துன்புறுத்துவோம் என்கிறார்கள். அத்தோடு இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படுவதையும் கோழி, ஆடு, பன்றிகள் அறுக்கப்படுவதையும் தடுக்காத பீற்றாவும் சட்டங்களும் ஏன் ஏறுதழுவுதலை மட்டும் தடுக்கவேண்டும் என்பதும் அவர்கள் எழுப்பும் கேள்வி.

நாட்டு மாடுகளைத் தடைசெய்து (இந்த இனங்கள்தான் ஏறுதழுவுதல் போட்டிக்காக வளர்க்கப்படுகின்றன) அவற்றை இறைச்சிக்காகப் பெற்றுக்கொள்வதும், அதிக சத்துக்கொண்ட ஏ-1 எனப்படும் பாலைத் தரும் மாடுகளை அழித்துவிட்டு வெளிநாடுகளில் இருந்து - குறிப்பாக மேற்கு நாடுகளில் இருந்து - இறக்குமதி செய்யப்படும் ஜேர்சி இன மாடுகளை இந்தியா போன்ற நாடுகளில் விருத்தி செய்வதற்கும், அதற்கான விந்துக்களை விற்பனை செய்வதற்கும், மேற்கு நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் ஏ-2 என்ற சத்தற்ற மற்றும் புற்றுநோய் உண்டாவதை ஊக்குவிக்கும் பாலை விற்பதற்குமாகவே ஏறுதழுவுதலுக்குத் தடை விதிக்கப்படுகிறது என்று எதிர்வாதத்தை முன்வைக்கிறார்கள் ஜல்லிக்கட்டு ஆதரவாளர்கள். இந்தியாவில் உள்ள பீற்றா நிர்வாகிகள் மேற்கு நாடுகளின் கைக்கூலிகள் என்கிற பரப்புரையையும் அவர்கள் தீவிரமாக முன்வைக்கிறார்கள்.


எல்லாவற்றுக்கும் மேலாக மூவாயிரம் வருடப் பாரம்பரியம் கொண்ட தமிழர்களின் பண்பாட்டு நிகழ்வைத் தடைசெய்கிறார்கள் என்கிற பரப்புரை நன்கு எடுபட்டுள்ளது. இவற்றின் அடிப்படையில் இப்போது தமிழகத்தில் நடப்பது வெறும் ஏறுதழுவுதல் ஆதரவுப் போராட்டம் மட்டும் அல்ல. அது தமிழ்ப் பாரம்பரியத்தை, அடையாளத்தை மீட்பதற்கான போராட்டமும்கூட.

உலகமயமாதல் சூழலில் தமிழர்களிடம் எஞ்சியுள்ள பாரம்பரியம் மற்றும் அடையாளத்தின் மீதான ஒடுக்குமுறையாக இந்த விடயம் மாற்றமடைந்திருப்பதன் காரணமாகவே, இதுவொரு எழுச்சியாகப் பரவி வருகிறது. தமிழர்களின் அடிமன ஆழம் கிளறப்பட்டுள்ளதன் வெளிப்பாடு அது. ஏறுதழுவுதல் ஒரு மிருக வதையா இல்லையா என்பதைத் தாண்டி அது தமிழர் அடையாள அழிப்பு என்கிற பார்வையே தமிழர்களை ஒன்றிணைய வைத்துள்ளது.

இந்தப் போராட்டம் மட்டுமே தமிழ் அடையாளத்தை முற்றிலுமாக மீட்டுவிடும் என்று சொல்லிவிட முடியாது என்றாலும் தமிழர்கள் தமது அடையாளம், பாரம்பரியம் குறித்த கிஞ்சித்துக் கரிசனையோடாவது இன்னமும் இருக்கிறார்கள் என்பது நம்பிக்கையளிக்கும் விடயம்தான்.

# அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்திய ஜனவரி மாதங்கள்

மு.ஈழத்தமிழ்மணி




இலங்கை அரசியல் வரலாற்றில் ஜனவரி மாதங்களில் தமிழினத்துக்கெதிரான பல சம்பவங்கள் நடந்தேறியிருக்கின்றன. நாடு சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இன்றுவரை தமிழ் மக்களால் மறக்கமுடியாத பல சம்பவங்களை ஜனவரி மாதங்கள் பதிவு செய்திருக்கின்றன.

நாட்டின் இனவாத அரசியல், காலஞ்சென்ற தலைவர்களான டி.எஸ்.சேனநாயக்கா, எஸ். டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, சந்திரிகா பண்டாரநாயக்க, சிறிமாவோ பண்டாரநாயக்கா, ஆர்.பிரேமதாசா போன்றோரது ஆட்சிக் காலத்திலும் தொடர்ந்து இடம் பெற்று வந்துள்ளது.

நாட்டில் விடுதலைப்புலிகளுடனான போர் ஆரம்பித்த பின்னர், முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா ஆட்சியிலும், மகிந்த ராஜபக்ச ஆட்சியிலும்தமிழர்கள்மீதான அடக்கு முறைகள், படுகொலைகள் இனவாதத்தின் உச்சத்துக்கே சென்றிருந்தன. தமிழ் மக்கள் மீதான இனவாத நடவடிக்கைகள் யாவும் சிங்கள ஆட்சியாளர்களின்நிரந்தரஆட்சிக்குஇருப்பாக அமைந்திருந்தன.

இவர்கள் பதவி வெறி கொண்டவர்களாகவும், இனவாதிகளாகவும் செயற்பட்டனர். அறுபத்து ஏழு வருடங்களாக தொடர்ந்து தமிழர்கள் மீதான இனவாதத்தை வளர்த்துக் கொண்டிருப்பவர்கள் யார்? என்பதை நாட்டின் அரசியல் வரலாறு தெளிவாக விவரிக்கும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைத் தோற்றுவித்து, நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றி, பிரதமராக மூன்று ஆண்டுகள் மட்டுமே பதவி வகித்த சந்திரிகாவின் தந்தையான எஸ். டபிள்யூ.ஆர். டி. பண்டாரநாயக்கா சிங்களம்மட்டுமே அரச கரும மொழி என்ற சட்டத்தை நிறைவேற்றி நடைமுறைப்படுத்தி, தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிப்பதில்முன்னின்று செயற்பட்டார்.



**கூட்டுஅரசின் சட்டவரைவுக்கு எதிர்ப்பு**

1966 ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் திகதி ஐக்கிய தேசியக்கட்சியும் தமிழரசுக்கட்சியும் இணைந்து, மற்றும் சிறுகட்சிகளையும் இணைத்து கொண்டு கூட்டு அரசொன்றை அமைந்திருந்தன. அந்தக் கூட்டு அரசு

> நாட்டின் இனவாத அரசியல், காலஞ்சென்ற தலைவர்களான டி.எஸ்.சேனநாயக்கா, எஸ். டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, சந்திரிகா பண்டார நாயக்க சிறிமாவோ பண்டார நாயக்கா, பிரேமதாசா போன்றோரது ஆட்சிக் காலத்திலும் தொடர்ந்து இடம் பெற்று வந்துள்ளது. நாட்டில் போர் ஆரம்பித்த பின்னர் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா ஆட்சியிலும், மகிந்த ராஜபக்ச ஆட்சியிலும் தமிழர்கள் மீதான அடக்குமுறைகள், படுகொலைகள் இனவாதத்தின் உச்சத்துக்கே சென்றிருந்தன.



தமிழ்மொழி நடைமுறைப்படுத்தல் பற்றிய ஒரு சட்ட வரைவை நாடாளு மன்றத்தில் சமர்ப்பித்திருந்தது. சிறி மாவோ தலைமையிலான சுதந்திரக்கட் சியுடன் சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பவையும் ஒன்று சேர்ந்து அந்தச் சட்ட வரைவை எதிர்த்ததோடு மட்டுமன்றி, 1966 ஆம் ஆண்டு ஜன வரி எட்டாம் திகதி எதிர்ப்புப் பேரணியை யும் கூட்டத்தையும் நடத்தின. அத னைக் கலைக்க பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒரு பௌத்த பிக்கு கொல்லப்பட்டார். அன்றிலிருந்து ஜனவரி மாதம் இலங்கையின் அரசி யல் வரலாற்றில் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டது.

ஜனவரி மாதமே கடந்த 2015ஆம் ஆண்டின் ஆட்சி மாற்றத்துக்கும் வழி கோலியது. நாட்டின் முதலாவது மகா தேசாதிபதியான சோல்பரிப் பிரபு, 1950 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு பய ணம் மேற்கொண்டபோது தமிழினத் தின் எதிரியை வரவேற்க வேண்டா மெனக் கோரி தமிழரசுக்கட்சி தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்தது. அதையேற்று தமிழ் மக்களும் சோல் பரிப் பிரபுவுக்கு பெரும் எதிர்ப்பைக் காட்டியிருந்தனர். இது, நாட்டின் முதல் பிரதமரான டி.எஸ்.சேனநாயக்காவின் ஆட்சிக்காலத்தின்போது இதுவே ஜனவரி மாதத்தில் முதலில் பதிவாகிய சம்பவமாகும்.

1960 ஆண்டு சிறிமாவோ பண் டாரநாயக்கா ஆட்சிக்கு வந்தபோது, தமிழினத்துக்கு எதிரான மற்றொரு நடவடிக்கையைத் தீவிரப்படுத்தி யிருந்தார். 1961ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தனிச் சிங்களச் சட்டம் முழுமையாக நடை முறைப் படுத் தப்படுமென சிறிமாவோ அரசு அறி வித்தது. வடக்கு, கிழக்கு மாகாணங் களில் சேவையாற்ற சிறிமாவோ அரசு திட்டமிட்ட வகையில் சிங்கள உத்தி யோகத்தர்களை அனுப்பி வைத்து, தனது இன விரோதப் போக்கைக் காட்டியிருந்தது.

1964 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தி லும் தனிச் சிங்களச் சட்டத்தை வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நடைமுறைப் படுத்தப் போவதாக சிறிமாவோ அரசு மீண்டும் அறிவித்தது. தமிழரசுக் கட்சியின் கடுமையான எதிர்ப்புகளால் இந்த நடவடிக்கை பின்னர் கைவிடப் பட்டிருந்தது.

1973 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி வேலணைக்கு வருகை தந்தி ருந்த தபால் தந்தி தொலைத்தொடர்பு அமைச்சரான செல்லையா குமாரசூரி யருக்கு எதிராக கறுப்புக் கொடி ஆர்ப் பாட்டம் நடத்தப்பட்டது. அதே மாதத் தில் நிதி அமைச்சரான என்.எம்.பெரேரா, சுகாதார அமைச்சரான ஆரியதாச ஆகியோர் யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்ட போது இருவருக்கும் எதிராக தமிழ் மக்கள் கறுப்புக் கொடி ஆர்ப்பாட் டம் நடத்தி, தங்களது எதிர்ப் புக்களை வெளியிட்டிருந் தனர்.

### தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளும் ஜனவரியிலேயே

1974ஆம் ஆண்டு ஜன வரி நான்காம் திகதி தொடக் கம் 10ஆம்திகதிவரை நான் காவது உலகத் தமிழா ராய்ச்சி மாநாடு யாழ்ப்பா ணத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்துவதற்கு சம்மதிக்காத அரசு, மாநாட்டின் இறுதி நாளின்போது ஐம்பது ஆயிரத் துக்கு மேற்பட்ட மக் கள் கலந்து கொண்டிருந்த நிகழ்வில் திட்டமிட்டவாறு எதுவித காரண முமின்றி சிங்களப் பொலிஸார் மூலம் நடத்திய அராஜகத்தினால் மாநாடு குழப்பப்பட்டது. பொலிஸா ரின் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் மின்கம்பிகள் அறுந்து நிலத் தில் வீழ்ந்தபோது அதில் அகப்பட்டு ஒன்பது தமிழர்கள் சாவடைந்த னர்.

மரண விசாரணையின்போது மக் களது உயிரிழப்புக்குப் பொறுப்பான வர்கள் பொலிஸாரே என விசாரணைக் குழு தீர்ப்பளித்திருந்தது. சிறிமாவோ வின் அரசு அந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளவில்லை.

1987 ஆம் ஆண்டு ஜனவரி 28, 29, 30 ஆகிய நாள்களில் ஐ.தே.க. ஆட் சியின்போது மட்டக்களப்பு மாவட்டத்தி லுள்ள கொக்கட்டிச்சோலையில் நடந் தேறிய படுகொலை நிகழ்வானது, மிக மோசமானது. இறால் பண்ணைத் தொழிலாளர்கள் உட்பட 133 தமிழர் கள் விசேட அதிர டிப் படையினரா லும், வான் படை யினராலும் நடத் தப்பட்ட தாக்கு தல்களில் கொல் லப்பட்டிருந்தனர், 12 பேர் காணாமற் போயிருந்தனர்.

2000ஆம்ஆண்டு ஜனவரி மாதம் ஐந்தாம் திகதி தமி ழின விடுதலைக் காகப் போராடிய தமிழ்த் தலைவர் களில் ஒருவரான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரான குமார் பொன்னம் பலம் அப்போதைய சந்திரிகா ஆட்சியில் எதிரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டிருந் தார்.



> 1961 ஆம் ஆண்டு ஜன வரி மாதம் தொடக்கம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தனிச் சிங்களச் சட்டம் முழுமையாக நடை முறைப்படுத்தப் படுமென சிறிமாவோ அரசு அறிவித்தது.

### திருகோணமலை மாணவர்களது படுகொலைகளும் ஜனவரி மாதத்து நிகழ்வே

முன்னாள் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ச முதலாவது தடவையாகப் பதவியேற்று, சில மாதங்களின் பின்னர் 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி திருகோண மலை கடற்கரை அருகில் வைத்து ஐந்து உயர்தர வகுப்பு மாணவர்கள் ஆயுதம் தாங்கிய படையினரால் துடிதுடிக்கச் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். அவர்கள் ஐந்து பேரும் பயங்கரவாதிகள் என உறவினர்கள் ஏற்றுக் கொண்டால் மட்டுமே சடலங்களைக் கையளிக்க முடியும் என்று பாதுகாப்புப் படையினரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

படையினரே ஐந்து மாணவர்களையும் சுட்டுப் படுகொலை செய்தனர் என்ற உண் மையை வெளிஉலகுக்கு பகிரங்கப்படுத்தி யதன் காரணமாக திருகோணமலை நக ரின் முக்கிய ஊடகவியலாளரான சுகிர் தராஜன் அதேமாதம் 22ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

இலங்கையில், ஐக்கிய தேசியக்கட்சியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஜனவரி மாதங் களில் தமிழினத்துக்கெதிரான தமது நடவடிக்கைகள் மூலம் இனவாதத்தை வெளிப்படுத்தியுள்ளன. ஆயுதப்போராட்டம் தொடங்கிய காலத்தில் ஜனவரி மாதங் களில் படையினரின் தாக்குதல்களில் பல நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கொல் லப்பட்டிருந்தனர்.

இறுதிப்போரை நடத்திமுடித்து, பல்லா யிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன் றொழித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை, ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் தமது வாக்குகளினால் தோற்கடித்து வீட்டுக்கு அனுப்பிய வரலாற்று நாளும், ஒரு ஜனவரி மாதம் எட்டாம் திகதியேயாகும்.

ஜனாதிபதித் தேர்தலில் தம்மை எதிர்த்துப் போட்டியிட வேறு எவரும் இல்லை என்ற இறுமாப்புக் கதை பேசியவரை, போர் முடிந்த பின்னர் தமிழினத்தின் பிரச்சி னைகளைத் தீர்ப்பதற்கு தயாராக இருக் கின்றேன் என்று கூறி தமிழ் மக்களை ஏமாற்றியவரை தமிழ் மக்கள் பதவியி லிருந்து அகற்ற ஜனவரி மாதத்தை அவரே தேர்ந்தெடுத்திருந்தார். இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து ஜனவரி மாதம் என்பது, ஈழத்தமிழர் களது வாழ்வில் பல துன்பங்களை ஏற்படுத்திய மாதமாகவே அமைந்து வந்துள்ளது. 2015ஆம் ஆண்டு ஜன வரி மாதத்தில் மகிந்த தோற்கடிக்கப்பட்டு நாட்டின் ஆட்சி மாற்றத்துக்கு காரண மாக இருந்த ஜனாதிபதியான மைத்திரி பால சிறிசேனவின் நல்லாட்சிக்கு இரண்டாண்டு காலம் முடிவடைந்துள்ள இன்றைய தருணத்தில், தமிழர் பிரச்சி னைக்கான தீர்வு எப்போதுதான் கிட்டும் என்ற வினாவுடன் இந்த ஆண்டின் ஜன வரி மாதம் மலர்ந்துள்ளது.

---



## வாசகர் திருமுகம்

### "அஞ்சல்" என்பது ஆத்மாவின் கீதம்

இலங்கை அஞ்சல் சேவையின் அதியுயர் பீடத்திலிருந்து, சாதாரண பொது மக்களது கருத்துக்காக இலவச படிவத்துடன் ஒரு பிரசுரம் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகிறது. இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன்பு அஞ்சல் சேவைக்குக் கிடைத்த கௌரவம் வேறு; தற்போது கிடைக்கும் கௌரவம் வேறு; நவீன காலத்தில் இலத்திரனியல் புரட்சியால் பல்வேறு கலைகள் அழிக்கப்பட்டு விட்டன. அந்தநிலை ஒருபோதும் அஞ்சல் சேவைக்கும் ஏற்பட அனுமதிக்கக் கூடாது. பிரசுரம் கிடைக்கப் பெறும் ஒவ்வொருவரும், அதில் அக்கறை காட்டுதல் அவசியம். அந்தப் பிரசுரத் தில் தெளிவான பல விடயங்களுடன், தெளிவில்லாத சில விடயங்களும் உள்ளன. அதில் கேட்கப்படும் வினாக்களுக்கு நாம் அளிக்கும் பதில்களின் ஒட்டுமொத்த விளைவால் சிலசேவைகள் எதிர்காலத்தில் நிறுத்தப்படலாம். ஒரு கடிதத்தினுள்ளே ஓர் இதயத்தின் சுருதியும் அனுப்பப்பட லாம். தீமையான விடயங்களும் அனுப்பப்படலாம். காலங்கள் மாறிய போதும் "அஞ்சல்" என்பது சமூகத்தின் "ஆத்மா"வாகவே உள்ளது. அந்தத் துறையில் பணி புரிவோர் தமது வேலை குறித்துத் தாழ்வுணர்ச்சி கொள்ளத் தேவையில்லை. அரச சேவைகளில் அதற்கும் தனித்துவ மான இடம் உண்டு. அது கையாளும் அனைத்து அம்சங்களும் தொடரப்படவேண்டும். குறைபாடுகள் அறிந்து அகற்றப்பட வேண்டும் முத்தி ரை சேகரித்தல் போன்ற சிறுசிறு கலைகளும் ஊக்குவிக்கப்பட வேண் டும். எனவே உங்களுக்கு குறித்த பிரசுரம் கிடைக்குமாயின், அதனைத் தகுந்த முறையில் பயன்படுத்த முயலவும்.

*சி.ஜெயகணேசன்*
*சாவகச்சேரியூரான்*

### உரிய தரப்பினர் கவனிப்பார்களா?

ஏற்கனவே விபத்துக்கள் நடந்து, மனித உயிர்களைக் காவு கொண்டநிலையில் கச்சேரியடி, கச்சேரி - நல்லூர் வீதியிலமைந்துள்ள புகை யிரதப் பாதைக் கடவைக்கு பாதுகாப்புக் கதவு அமைக்காமல், அலட்சியப்படுத் தப்படுவது கவலை தருகிறது. பல்வேறு வகையான தேவைகளுக்காக அவ்வீதியால் பயணிக்கும் பாதசாரிகள், வாகனச் சாரதிகளது நன்மைகருதி பாதுகாப்புக் கதவு அமைத்துக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளு மாறு சம்பந்தப்பட்ட தரப்பினரைக் கேட்டுக் கொள்கின்றோம்.

*வ.க.ஜெயபாலன் (ஜே.பி)*
*யாழ்ப்பாணம்*



# கடின உழைப்பே உயர்வு தரும்

சிறுவூர் என்ற கிராமத்தில் முத்தப்பன், வேலப்பன் என்ற இரு நண்பர்கள் வசித்து வந்தனர். முத்தப்பன் நல்ல உழைப்பாளி! நிலத்தில் வியர்வை சிந்தி உழைப்பவன். ஆனால் வேலப்பன் ஒரு முழுச் சோம்பேறி! வேளாவேளைக்கு உண்டு உறங்கி வந்தான்.

இருவருக்கும் சிறிதளவு வயல்கள் இருந்தன. முத்தப்பன் தன் வயலில் நெல் விதைத்து நீர்பாய்ச்சி களை எடுத்துப் பாடுபட்டான். அவனது உழைப்பின் பயனாக வயலில் விளைச்சல் மிகுந்தது. முத்தப்பனின் வேலைக்காரர்களும் எஜமானனே வயலில் இறங்கி வேலை செய்கிறாரே நாமும் நன்றாக உழைக்க வேண்டும் ஏமாற்றக்கூடாது என்று சுறுசுறுப்பாக உற்சாகத்துடன் வேலை செய்தனர். அதன் பயனாக நிறைய விளைச்சலை அறுவடை செய்தான் முத்தப்பன்.

நன்கு பாடுபட்ட முத்தப்பன் தன்னிடமிருந்த இரண்டு ஏக்கர் நிலத்தை ஐந்து ஏக்கராக மாற்றினான். அதேசமயம் வேலப்பன் தன்னிடமிருந்த சிறு நிலத்தையும் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து கொண்டிருந்தான். ஒரு நாள் வேலப்பன் இது பற்றி முத்தப்பனிடம் முறையிட்டான்.

நண்பா நீயும் நானும் ஒரே அளவு நிலத்தைப் போன்றுதான் வைத்திருந்தோம். இன்றோ நீ ஐந்து ஏக்கர் நிலத்துக்குச் சொந்தக்காரனாகி விட்டாய். நானோ இருந்த நிலத்தையும் இழந்து கடன்காரனாக நிற்கிறேன். உனக்கு அதிர்ஷ்டம் அதிகமாக உள்ளது. நானோ துரதிர்ஷ்டசாலி! என்று வருத்தமுடன் கூறினான்.

முத்தப்பனோ! நண்பா நான் ஐந்து ஏக்கர் நிலம் வாங்கியதற்கு காரணம் அதிர்ஷ்டம் இல்லை; உழைப்பு. நீ உன் நிலத்தில் இறங்கி ஒரு நாளேனும் வேலை செய்திருப்பாயா? மாட்டாய்; எல்லாவற்றிற்கும் வேலைக்காரர்கள் வைத்தாய்; சரி அவர்கள் ஒழுங்காக வேலை செய்கிறார்களா? என்று கண்காணிக்கக் கூட சோம்பல் பட்டாய்! நண்பா நாம் வியர்வை சிந்தி உழைத்தால், மண்ணும் பொன்னாகும். உரிமையாளன் சோம்பேறியாக இருந்தால், வேலைக்காரர்களுக்கு கொண்டாட்டம்தான். அவர்களும் ஒழுங்காக வேலை செய்யாமல் வெட்டி அரட்டை பேசிச் சென்று விடுவார்கள். உன் பயிர் கவனிப்பாரற்று ஆடு - மாடுகள் மேய்ந்து விளையாமல் போயிற்று!

நானோ தினமும் வயலில் இறங்கி உழைத்தேன்! வேலைக்காரர்களோடு வேலைக்காரனாக உடன் வேலை செய்தேன். இதில் இன்னொரு இலாபமும் இருக்கிறது. ஒரு வேலைக்காரனுக்கு கொடுக்கும் கூலியும் மிச்சமாகும். உரிமையாளன் அருகில் இருக்கிறான் என்ற அச்சத்தில் வேலைக்காரர்களும் ஒழுங்காகப் பணியாற்றுவார்கள். இதனால்தான் என் நிலத்தில் விளைச்சல் மிகுந்தது.

நீ உன் சோம்பேறித் தனத்தை உதறி எறி. இருக்கும் சிறு நிலத்தில் உன் உழைப்பைக் காண்பி! நீயும் விரைவில் என்னைப்போல மாறி விடுவாய் என்றான் முத்தப்பன்.

வேலப்பனுக்கு தன் தவறு புரிந்தது. உழைப்பின் பெருமையை உணர்ந்தான். வயலில் இறங்கி வேலை செய்தான் முத்தப்பனைப்போன்று சந்தோசமாக வாழ்ந்தான்

*“கடின உழைப்பே உயர்வு தரும்”*

## ஆண்டு விழாக்களின் பெயர்கள்

1 ஆவது ஆண்டு விழா – காகித விழா
2 ஆவது ஆண்டு விழா – பருத்தி விழா
3ஆவது விழா – தோல் விழா
4 ஆவது ஆண்டு விழா – மலர், பழ விழா
5 ஆவது ஆண்டு விழா – மர விழா
6 ஆவது ஆண்டு விழா – இனிப்பு விழா
7 ஆவது ஆண்டு விழா – செம்பு விழா
8 ஆவது ஆண்டு விழா – வெண்கல விழா
9 ஆவது ஆண்டு விழா – மண் விழா
10 ஆவது ஆண்டு விழா – தகர விழா
11ஆவது விழா – இரும்பு விழா
12 ஆவது ஆண்டு விழா – லினன் விழா
13 ஆவது ஆண்டு விழா – பின்னல் விழா
14 ஆவது ஆண்டு விழா – தந்த விழா
15 ஆவது ஆண்டு விழா – படிக விழா
20 ஆவது ஆண்டு விழா – பீங்கான் விழா
25 ஆவது ஆண்டு விழா – வெள்ளி விழா
30 ஆவது ஆண்டு விழா – முத்து விழா
40 ஆவது ஆண்டு விழா – மாணிக்க விழா
50 ஆவது ஆண்டு விழா – பொன் விழா
60 ஆவது ஆண்டு விழா – வைர விழா
75 ஆவது ஆண்டு விழா – பவள விழா
80 ஆவது ஆண்டு விழா – அமுத விழா
100 ஆவது ஆண்டு விழா – நூற்றாண்டு விழா

## இலங்கையின் தேசிய சின்னங்கள்

1. இலங்கையின் தேசிய மரம் – நாகமரம்
2. இலங்கையின் தேசியப் பறவை – காட்டுக்கோழி
3. இலங்கையின் தேசிய மிருகம் – யானை
4. இலங்கையின் தேசிய மலர் – நீலஅல்லி


## முழு உருவாக்கம்

சிப்பிக்குள் முத்து
உருவாகத் தேவை
மழைத்துளி மட்டுமல்ல;
மணல் துகள்களும்
தான்!

உனக்குள் முழுமை
உருவாகத் தேவை
நிறைகள் மட்டுமல்ல;
குறைகளும் தான்!

நிறைகள்...
அடுத்தவருக்குக்
கற்றுத் தர!
குறைகள்...
நீ கற்றுக் கொள்ள!





## துணிவு எனும் எண்ணெய்


மனிதனின் வாழ்க்கைச் சக்கரத்தில் கொடுமையான துன்பம் தருகிற கதை ஒன்று ஓடிக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் 'துணிவு' என்ற எண்ணெயைத் தன்னுடைய சக்கரத்துக்கும், மற்றவர்களின் வாழ்க்கைச் சக்கரங்களுக்கும் போட வேண்டும். அப்போதுதான் எல்லாச் சக்கரங்களும் இணைந்து முன்னேறும்.

*- அய்டா*




## வரலாற்றில் இன்றைய தினம்

1994 - நம்பாவவில் பஸ்ஸில் குண்டு வெடிப்பு; 11 பேர் உயிரிழப்பு; 40 பேர் படுகாயம். பொலிஸ் காவலரண் அருகே சம்பவம்.
1995 - பாப்பரசர் வருகையால் கொழும்பில் பாதுகாப்பு அதிகரிப்பு.
2004 - குருதிச் சுத்திகரிப்பு இயந்திரம் யாழ். வைத்திய சாலையில் செயற்படத் தொடங்கியது.
2006 - ஜனவரி முதல் 17 நாள்களில் 25 பேர் காணாமற் போயினர். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு.
2007 - புலிகள் மீதான தடையை ஜேர்மன் அரசு நீக்காதாமென அந்த நாட்டு தூதுவர் ஹெல உறுமயவிடம் தெரிவிப்பு.



## வர்ணம் தீட்டுவோம் வாங்க...





# நட்சத்திரப் பலன்கள்

**சதய நட்சத்திரப் பலன்கள்**

பாவபுண்ணியங்களுக்கு ஏற்ப ஆயுளை நல்குபவரான எமர்தர்மர் தோன்றிய இந்த நட்சத்திரத்தின் அதிபதி சாயாக் கிரகமான ராகுவாகும். இதில் பிறந்தவர்கள் மனசாட்சிக்குக் கட்டுபட்டு வாழ்வர். எப்பொழுதும் சுறுசுறுப்பு உடையவர்கள், நல்ல அழகிய வாயும், சிவந்த உதடுகளும் உள்ளவர். பெண்களால் விரும்பப்படுவர். தயாள குணம் உள்ளவர்கள், கல்வி, கலைகளில் ஆர்வமும்- தேர்ச்சியும் பெறுவர். விரோதிகளை வெல்லும் ஆற்றல் உடைய இவர்கள், மற்றவர்களின் வளர்ச்சியைக் கண்டு பொறாமை கொள்வர். எப்பொழுதும் அலைந்து கொண்டே இருப்பர். இனிமையாகப் பேசியே தங்கள் காரியத்தை சாதித்துக் கொள்வதில் சமர்த்தர்கள்.

**சதயம் : 1ம் பாதம்**

நல்ல குணம் உள்ள இவர்கள் முன்னோர்களையும் மூத்தோர்களையும் மதித்துப் போற்றுவர். உண்மையையும் சத்தியத்தையும் கடைப்பிடிப்பர். தயாள குணம் உள்ள இவர்கள் மற்றவர்களை மதிக்காமல் அவர்களைக் கேவலமாகப் பேசுவர். நல்ல வசதி வாய்ப்பும் எல்லாவித சுகங்களையும் நன்கு அனுபவிப்பர்.

**சதயம் : 2ம் பாதம்**


மனைவி மூலம் பணம் புகழ் பெறுவர். பலவழிகளில் கஷ்டப்பட்டுப் பணத்தை சம்பாதிக்கும் இவர்கள், அடிக்கடி உடல் நலக் குறைவால் அவதிப்படுவர். பணத்தை தாரளமாக செலவு செய்வர். மற்றவர்களின் குற்றம்-குறைகளை கண்டு எள்ளி நகையாடுவர். தாயாரின் அன்புக்கும், பாசத்திற்கும் கட்டுப்பட்டவர்.

**சதயம் : 3ம் பாதம்**

எப்பொழுதும் குதர்க்கமாகப் பேசும் சுபாவம் உடையவர்கள். கஷ்டப்பட்டுப் பொருள் சம்பாதிப்பர். மனைவியால் கஷ்டப்படுவர். வீண் செலவு செய்ய மாட்டார்கள். தன் கீழ் வேலை செய்பவர்களை விரட்டி கொண்டே இருப்பர். சுய தொழில் ஆர்வம் உடைய இவர்களுக்கு உஷ்ண சம்பந்தமான வியாதிகள் ஏற்படும்.

**சதயம் : 4ம் பாதம்**

தெய்வ வழிபாட்டில் நம்பிக்கையும் ஆச்சாரமும் உடைய இவர்கள், எப்பாடு பட்டாவது தங்களது சுகத்தை அனுபவிப்பர். பிறர் கஷ்டத்தை கண்டு கொள்ள மாட்டார்கள், தந்தையின் அன்புக்கு கட்டுப்பட்டவர்கள். அதிக உணவு புசிப்பவர்கள், வாத சம்பந்தமான வியாதியும் வயிற்று கோளாறும் உள்ளவர்கள்.



**நாளை**

**தை-07**

வெள்ளிக்கிழமை -20.01.2017

திதி:அட்டமி மு.இ.07.16

நட்சத்திரம்: சித்திரை கா. 7.42 வரை

ராகுகாலம்:11.05-12.35 வரை

சுபநேரம்:06.35-08.05 வரை

# ட்ரம்பின் ஆட்சியில் காட்சிகள் மாறும்

அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக நாளை பதவியேற்கிறார் டொனால்ட் ட்ரம்ப். அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றம் உலக அரசியலிலும் காத்திரமான ஒரு மாற்றத்தை உருவாக்கும் என்பதே பலரது கருத்தாகும்.

ட்ரம்ப் பதவியேற்றால் மூன்று விடயங்களில் சொல்லிக் கொள்ளும் படியாக மாற்றம் ஏற்படும். ஒன்று-அமெரிக்காவுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையிலான உறவு. இரண்டாவது அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையிலான பிடுங்குப்பாடுகள், மூன்றாவது இஸ்ரேல், பலஸ்தீன விவகாரம்.

ட்ரம்ப் தனது தேர்தல் பரப்புரைகளில் முஸ்லிம்கள், ஆயுததாரிகள் என்றவாறான ஒரு நிலைப்பாட்டை வலியுறுத்தி வந்தார். முஸ்லிம்கள் மற்றும் அகதிகளுக்கு என்று தனியான அடையாள அட்டை வழங்கப்படும், குடியுரிமை பெறாத அகதிகள் திருப்பி அனுப்பப்படுவர், குடியுரிமைபெற்ற அகதிகள் மற்றும் முஸ்லிம்கள் தொடர்ந்து கண்காணிக்கப்படுவர் என்றெல்லாம் தெரிவித்திருந்தார். ட்ரம்ப்பின் இந்த நிலைப்பாட்டுக்கு எதிராகப் பலரும் குரல் எழுப்பியுள்ளனர். தற்போதைய ஜனாதிபதியான ஒபாமாவும் தனது கண்டனத்தைத் தெரிவித்தார். இருப்பினும் ட்ரம்ப் தனது நிலைப்பாட்டில் விடாப்பிடியாக உள்ளார்.

அமெரிக்காவுக்கும், ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையில் ட்ரம்பின் ஆட்சியில் சில கருத்து மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் அழிவடையும் நிலையில் உள்ளது. அதிலிருந்து பிரிட்டன் வெளியேறிய முடிவு வரவேற்கத் தக்கது. அதிலும் ஜேர்மன் ஏகப்பட்ட அகதிகளை ஆதரித்து தவறு செய்துள்ளது. அந்த நாடு பெரும் பின்னடைவுகளைச் சந்திக்கவுள்ளது என்றெல்லாம் ட்ரம்ப் தெரிவித்திருந்தார். இதற்கு, அமெரிக்கா மத்திய கிழக்கு நாடுகளில் மேற் கொண்ட நடவடிக்கைகளாலேயே அகதிகள் உருவாகினர். ஐரோப்பிய ஒன்றியம் 21 ஆம் நூற்றாண்டின் சவாலை எதிர்கொள்ளத்தயார் என்று-ஜேர்மனின் தரப்பில் பதிலடி கொடுக்கப்பட்டது. இந்த வார்த்தை மோதல்கள் தொடர்ந்தும் நீண்டு-நிலைபெறலாம்.

இவற்றைவிட உலக அரசியலைத் தீர்மானிக்கும் பிறிதொரு விவகாரமாக இஸ்ரேல், பலஸ்தீனம் இடையிலான பிடுங்குப்பாடுகள் அமைந்துள்ளன. பலஸ்தீனத்திடமிருந்து கிழக்கு ஜெருசலேமை இஸ்ரேல் ஆக்கிரமித்து வைத்துள்ளது. குறித்த பகுதிகளில் பலஸ்தீனத்தின் சுய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் குடியிருப்புக்களையும் அமைத்து வந்தது. ஆனால், இஸ்ரேலின் இந்த நடவடிக்கைக்கு எதிராகவும் பலஸ்தீனத்துக்கு நெருக்கமாக்கக் கட்டப்படும் குடியிருப்புக்களைக் கண்டித்தும்-அதை நிறுத்த வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அண்மையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அமெரிக்கா தொடர்ந்தும் இஸ்ரேலுக்கு ஆதரவாகவே செயற்பட்டு வருகிறது. ஆனால் அண்மையில் கொண்டு வரப்பட்ட இந்தத் தீர்மானத்தில் நடுநிலைமையைப் பேணியது. அமெரிக்க தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி தீர்மானத்தை இல்லாமற் செய்ய வேண்டும் என்று ட்ரம்ப் தெரிவித்திருந்தார். ட்ரம்ப்பின் கருத்து கண்டுகொள்ளப்படாமையை அடுத்து அவர் ஒபாமா அரசுக்கு தனது கண்டனத்தைத் தெரிவித்தார். 20 ஆம் திகதிக்குப் பின்னர் (ட்ரம்ப் பதவியேற்றதன் பின்னர்) காட்சிகள் மாறும், இஸ்ரேல் தலைநகர் டெல்அவிவில் உள்ள அமெரிக்காவின் இஸ்ரேலுக்கான தூதரகம், அங்கிருந்து அகற்றப்பட்டு ஜெருசலேமில் அமைக்கப்படும் என்றும் ட்ரம்ப் எச்சரித்தார். இவற்றைவிட முக்கியமான விடயமொன்றும் உள்ளது. அது அமெரிக்கா, ரஷ்யா இடையிலான உறவு.




அமெரிக்கா, 35 ரஷ்ய தூதரக அதிகாரிகளை அண்மையில் வெளியேற்றியது. ஆனால், ரஷ்யா பதிலுக்கு எதுவும் செய்யவில்லை. ட்ரம்ப்பின் ஆட்சியை எதிர்பார்த்துக் காத்துள்ளோம் என்று ரஷ்யாவின் தரப்பில் அப்போது தெரிவிக்கப்பட்டது. ரஷ்யா மட்டுமல்ல வறிய, சிறிய, அபிவிருத்தி அடைந்த, அடைகின்ற நாடுகள் என்றும்-அத்தனை தரப்பாலும் ட்ரம்ப் உற்று நோக்கப்படுகின்றார். ஒன்று மட்டும் உண்மை. காட்சிகள் நிச்சயம் மாறும்.

# யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரி உயர்தொழிற்கல்விக்கான ஒரு திறவுகோல்



ஜே.ஜூட்வோல்ட்டன்

துரிதமாக மாறிவரும் நவீன விஞ்ஞான முன்னேற்றங்களும் அதனோடிணைந்த தொழில்நுட்ப வளர்ச்சியும் தரமான நவீன தொழில்நுட்ப திறன்கள் வாய்க்கப்பெற்ற ஊழியப்படையின் கேள்வியை உலக தொழிற்சந்தையில் மட்டுமல்லாது உள்ளூர்மட்டத்திலும் அதிகரிக்கச் செய்துள்ளன. இலங்கையில் தற்போதுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களால் மட்டும் இம்மனித வலுவை வழங்க முடியாது என்றே கூறலாம். ஏனெனில் அவற்றின் பயிற்சிக் கொள்ளளவு அதாவது பயிற்சிக்காக உள்ளீர்ப்பு செய்யக் கூடிய மாணவர் எண்ணிக்கை மற்றும் பயிற்சி வசதிகள் (ஆய்வு கூடம், வேலைத் தளம்) அவற்றுக்கான கேள்விகளை விட குறைவாக இருப்பது ஒருபுறம் இருக்க இவ்வாறான பயிற்சிகளை வேண்டி நிற்கும் மாணவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிப்பதும் பிறிதொரு சவாலாகக் காணக்கிடக்கின்றது.

தற்பொழுது ஓர் ஆண்டில் பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு அனுமதியாகின்ற மாணவர் எண்ணிக்கை சராசரியாக 350,000 ஆக இருக்கின்ற அதே வேளை அதே ஆண்டில் பல்கலைக்கழக அனுமதியை பெறுகின்ற மாணவர் எண்ணிக்கை வெறும் 25,000 ஆக மட்டுமே இருக்கின்றது. இருந்தபோதும் அரச மற்றும் தனியார் தொழிற் கல்வி பயிற்சி நிலையங்களில் அனுமதிக்கக்கூடிய மாணவர் எண்ணிக்கை அண்ணளவாக 150,000 ஆக இருப்பதுடன் ஏறத்தாழ 25,000 மாணவர்கள் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் அடங்கலான ஏனைய மூன்றாம்நிலை உயர்கல்வி நிலையங்களிலும் தமது கல்வியை தொடர்கின்றனர். இந்த நிலமைகளை ஆராயும்போது கிட்டத்தட்ட 200,000 மாணவர்களுக்கு மூன்றாம்நிலை கல்விச்சந்தர்ப்பங்கள் கிட்டுகின்றபோது நாட்டில் சராசரி வருடமொன்றில் பாடசாலைகளின்றும் விலகுகின்ற மற்றும் கற்றலில் இடைவிலகுகின்ற ஏறத்தாழ 150,000 மாணவர்கள் தொழிற்றிறன்கள் அற்றவர்களாக தமது ஜீவனோபாயத்தை ஆரம்பிக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் திறன்கள் அற்ற தொழிலாளர்களாகவும் பாரம்பரிய விவசாயம், மீன்பிடி மற்றம் இன்னோரன்ன பிற தொழில்களை தமது வருவாய் தரும் மூலங்களாக மேற்கொள்கிறார்கள். இருந்தபோதும் இவர்களில் கணிசமான தொகையினர் வியாபாரம், குடிசைக் கைத்தொழில் போன்ற சுயதொழில் கருமங்களில் தங்களை ஈடுபடுத்த சந்தர்ப்பங்கள் உண்டு என்பதும் மறுப்பதற்கில்லை. இவற்றை உற்று நோக்கும்போது குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான மாணவர்களுக்கு தொழில்நுட்பக் கல்வியுடன் கூடிய உயர்கல்வியைப் பெற சந்தர்ப்பங்கள் அரிது அல்லது இல்லை என்று கூறுமளவுக்கு இளைஞர்களின் மத்தியில் 17 சதவீதமாக இருக்கின்ற வேலையற்றோர் வீதம் ஒரு சான்றாகவும் அமைகின்றது. நாட்டின் சராசரி வேலையற்றோர் சதவீதம் ஏறத்தாழ 4 வீதம்ஆக இருக்கின்ற அதேவேளை இது படித்த இளைஞர்கள் மத்தியில் அதிகமாக இருப்பதும் அவர் தம் கற்கை தொழிலுலகுக்கு ஏற்ற தரத்தை அல்லது பொருத்தப்பாட்டை கொண்டிருக்கவில்லை என்பதை இலகுவில் அனு மானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறு கல்வியில் சம வாய்ப்பின்மை அல்லது சம சந்தர்ப்பங்கள் கிட்டாமை என்பதை இல்லாதொழிக்கும் ஒரு துணிவாரம்பிப்பாக நாட்டில் தொழில்நுட்பவியல் கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்கும் பிறிதொரு தனித்துவமான மூன்றாம்நிலை கல்விச்சாலைகளாக பல்கலைக்கழக கல்லூரிகள் விளங்குகின்றன. இந்தப் புதிய பல்கலைக்கழக கல்லூரிகள், திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழில் பயிற்சி (Ministry of Skills Development And Vocational training) அமைச்சின் வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தினது(University Of Vocational Technology) கிளை நிறுவனங்களாக நாடளாவிய ரீதியில் 25 பல்கலைக்கழக கல்லூரிகள் அமைவாக்கம் பெறவுள்ளன. இவற்றை, 20 அரச பல்கலைக்கழக கல்லூரிகளில் அமைவாக்கத்தில், முதற்கட்டமாக 5 கல்லூரிகள் யாழ்ப்பாணம், குளியாப்பிட்டி, இரத்மலானை, மாத்தறை மற்றும் அனுராதபுரத்தில் அமைவாக்கம் பெற்றுள்ளதுடன் அவற்றின் செயற்பாடுகள் 2015 ஆம் ஆண்டு தை மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்லூரியில் 8 பாடப்பரப்புகளுக்கான தேசிய தொழிற்தகைமை மட்டம் (NVQ) 5 இற்குரிய டிப்ளோமா மற்றும் மட்டம் 6 இற்குரிய உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகள் ஆங்கில மொழிமூலம் போதிக்கப்படுவதுடன் ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் போன்ற இணைப்பாட விதானங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. தேசிய தொழிற்தகைமை மட்டம் (NVQ) 4 தகைமை அல்லது க.பொ.த உயர் தரத்தில் சித்தியுள்ள மாணவர்கள் தமது தகைமைக்குப் பொருத்தமான துறையில் தம்மை இணைத்துக்கொள்ளாமல் தவறி விடுகின்றனர். இது உயர்தரத் தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிந்நுட்பவியல் துறையில் சித்தியடையும் மாணவர்களுக்கு மட்டுமல்லாது ஏனைய துறைசார் மாணவர்களுக்குமான வரப்பிரசாதமாகும்.

இந்தக் கற்கை நெறிகளானது ஆரம்பத்தில் 6 மாத கால குறைநிரப்பு அடிப்படை பாடப் பரப்புகளையும் (Bridging Course) பின்னர் முறையான தேசிய தொழிற்தராதர சட்டகம் (National Vocational Qualification Framework and NVQF) என்பதற்கும் அமைய ஓராண்டு உள்ளகப் பயிற்சியையும் (In d House d training) பின்னர் 6 மாத காலத்துக்கு குறையாத வேலைத்தள களப் பயிற்சிகளையும் (On The Job Training-OJT) ஈற்றில் மேலும் ஓராண்டு உள்ளகப் பயிற்சியையும் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தப்பல்கலைக்கழக கல்லூரியானது உயர்தர விரிவுரையாளர் குழாத்தை கொண்டிருப்பதுடன் நவீன வசதிகள் கொண்ட விரிவுரை மண்டபங்கள் மற்றும் தற்கால தொழில்நுட்பத்தில் உருவான தொழிற்சாலை இயந்திரங்களையும் கருவிகளையும் கொண்ட தொழில்நுட்ப கூடங்களையும் கொண்டிருப்பதுடன் மாணவர்தம் கற்றலுக்கு துணைசெய்யும் வேலைத்தளம் நூல்நிலையம், ஆங்கில மொழி மற்றும் கணினிக் கூடங்களையும் வணிக அபிவிருத்தி அலகொன்றையும் (Business Development Unit) தன்னகத்தே கொண் டுள்ளது. இங்கு கற்றல்கற்பித்தல் செயற்பாடானது ஆசிரியர் மையமாகவோ அல்லது மாணவர் மையமாகவோ இன்றி தொழில் மையமாக (Job Oriented) அமைந்திருப்பது ஒரு சிறப்பம்சமாகும். இது எதிர்கால வேலை உலகுக்கு மாண வர்களை தயார்ப்படுத்தும் நோக்கில் தொழிற்தளத்துக்கு வேண்டிய திறன்களை மாணவர் கோட்பாடுகளுடன் இணைந்த செயற்பாடுகளினூடாக அடையவும் அதனூடாக உடனடித் தொழில் வாய்ப்பைப் பெறவும் அவர்களுக்கு ஓர் உந்து சக்தியாக அமையும்.

இந்தப் பல்கலைக்கழக கல்லூரியானது பிரதம நிறைவேற்று அதிகாரி (Chief executive officer-CEO) ஒருவரால் நிர்வகிக்கப்படுவதுடன் பணிப்பாளர் சபை (Board of Directors) ஒன்றினாலும் வழி நடத்தப்படுகின்றது. அத்தோடு இவற்றின் ஆளுகை அதிகாரமானது வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்திடம் இருப்பதுடன் எதிர்காலத்தில் இவை அதனோடிணைந்து (NVQ) மட்டம் 7 இற்குரிய பட்டப் பாட நெறிகளை போதிக்கவும் அவற்றிற்கான பட்ட நற்சான்றிதழை வழங்கவும் காத்திருக்கின்றன. எனவே தொழில்நுட்ப மற்றும் வாழ்க்கைத் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (Technical and Vocational Education And Training-TVET) துறையில் இந்தப்பல்கலைக்கழக கல்லூரிகளின் பங்களிப்பு தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்களின் மத்தியில் ஒரு மேலான அந்தஸ்தையும் உயர்வான சமூகப்பார்வையையும் (Social Image) பெறவுள்ளன. (தொடரும்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்லூரியில் 8 பாடப்பரப்புகளுக்கான தேசிய தொழிற்தகைமை மட்டம் (NVQ) 5 இற்குரிய டிப்ளோமா மற்றும் மட்டம் 6 இற்குரிய உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகள் ஆங்கில மொழி மூலம் போதிக் கப்படுவதுடன் ஆங்கிலம், தகவல் தொழில் நுட்பம் போன்ற இணைப்பாட விதானங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. தேசிய தொழிற்தகைமை மட்டம் (NVQ) 4 தகைமை அல்லது க.பொ.த உயர்தரத்தில் சித்தியுள்ள மாணவர்கள் தமது தகைமைக்குப் பொருத்தமான துறையில் தம்மை இணைத்துக்கொள்ளாமல் தவறி விடுகின்றனர். இது உயர்தரத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பவியல் துறையில் சித்தியடையும் மாணவர்களுக்கு மட்டுமல்லாது ஏனைய துறைசார் மாணவர்களுக்குமான வரப் பிரசாதமாகும்.



# மீண்டும் பேயாக நடிக்கும் நிக்கி கல்ராணி!

கன்னட, மலையாள படங்களில் நடித்து வந்த நிக்கி கல்ராணி, தமிழில் ஆதி நடித்த 'யாகவராயினும் நாகாக்க' படத்தில்தான் நடித்தார். ஆனால் அந்த படம் வெளியாக தாமதமானதால் அதன்பிறகு ஜி.வி.பிரகாஸுடன் அவர் நடித்த 'டார்லிங்' படம் முதலில் திரைக்கு வந்தது. அப்படி வெளியான அந்தப் படம் ஹிட்டாக அமைந்ததால் அடுத்தடுத்து பல படங்களில் நடித்தார் நிக்கி கல்ராணி. தற்போது மொட்ட சிவா கெட்ட சிவா, நெருப்புடா, கீ, மரகத நாணயம், ஹர ஹர மகா தேவகி என பல படங்களில் நடித்து வருகிறார். இதில், யாகவராயினும் நாகாக்க படத்தைத் தொடர்ந்து மீண்டும் ஆதியுடன் நடிக்கும் மரகத நாணயம் படத்தில் டார்லிங் படத்தில் நடித்தது போன்று பேயாக நடித்து வருகிறார் நிக்கி கல்ராணி. அந்தப் படத்தில் அதிரடி பேயாக நடித்தவர் இந்தப் படத்திலும் அதிரடியாக நடிப்பதோடு, ஒரு சண்டைக் காட்சியிலும் நடித்துள்ளாராம். அந்த வகையில், தான் பேயாக நடித்த டார்லிங் படம் ஹிட்டடித்தது போன்று இந்தப் படமும் மெகா ஹிட்டாக அமையும் என்று எதிர்பார்க்கிறார் நிக்கி கல்ராணி.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | | 7 | 6 | | 1 | | |
| | | | | 8 | | | | |
| | | 6 | | | | | 7 | 2 |
| | | 9 | | | | 2 | 4 | |
| | 1 | | | | | 5 | | 3 |
| | | 4 | | | | | | |
| | | 2 | | | 7 | | | |
| | | 7 | 8 | 1 | | | 9 | |
| 3 | | | | | 5 | 7 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 6 | 1 | 9 | 8 | 2 | 3 | 7 |
| 9 | 3 | 7 | 2 | 6 | 5 | 1 | 8 | 4 |
| 2 | 8 | 1 | 3 | 4 | 7 | 5 | 9 | 6 |
| 8 | 6 | 4 | 9 | 5 | 2 | 3 | 7 | 1 |
| 7 | 5 | 9 | 8 | 3 | 1 | 4 | 6 | 2 |
| 1 | 2 | 3 | 6 | 7 | 4 | 8 | 5 | 9 |
| 3 | 1 | 5 | 7 | 2 | 9 | 6 | 4 | 8 |
| 6 | 9 | 8 | 4 | 1 | 3 | 7 | 2 | 5 |
| 4 | 7 | 2 | 5 | 8 | 6 | 9 | 1 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்.
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.






## பாட்டும் பதிலும்

டீச்சர் : நம் தேசியப் பறவை எது?
மாணவன்: "மயில்போல பொண்ணு ஒண்ணு"
டீச்சர் : நம் தேசிய விலங்கு எதுடா?
மாணவன்: புலி உறுமுது புலி உறுமுது
டீச்சர் : நம் தேசிய மலர் எது?
மாணவன்: ஒரு சின்னத்தாமரை என் கண்ணில் பூத்ததே
டீச்சர் : நம் நாட்டின் தலைநகரம் எது?
மாணவன்:டெல்லிக்கு ராஜான்னாலும்
டீச்சர் : நம் தேசிய பழம் எது?
மாணவன்: மாம்பழமாம் மாம்பழம்
டீச்சர் : எனக்குப் பிடிச்ச பாட்டு எதுன்னு தெரியுமா?
மாணவன்: ????
டீச்சர் : " நான் அடிச்சா தாங்க மாட்டே நாலு நாளு தூங்க மாட்டே"














மேடம்: தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர் கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் பன் மடங்கு உயரும். பணியாளர்கள் விரும்பிய பணிமாற்றம் கிடைக்கும். அரசியல்வாதி களுக்கு பதவி பெற அனுகூலம் உண்டாகும்.

இடபம்: எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு ஓரளவு சலுகை வந்து சேரும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

மிதுனம்: அன்பால் அனைவரையும் அரவ ணைப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சக ஊழி யர்களின் உதவி கிடைக்கும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும்.

கடகம்: அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் போட்டி குறுக்கிடலாம். லாபம் சுமாராக இருக்கும். பெண் கள் பிள்ளைகளின் நலனுக்காகப் பாடுபடுவர்.

சிங்கம்: மற்றவர் நலனில் அக்கறை கொள் வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் சுதந்திர மனப்பான்மையுடன் பணியாற்றுவர். பெண் கள் விருந்து விழாவில் ஆர்வமுடன் பங்கேற்பர்.



கன்னி: மனதில் இருந்த குழப்பம் நீங்கும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி திட்ட மிட்டபடி நிறைவேறும். சேமிக்கும் விதத்தில் பணவரவு கிடைக்கும். மாமன், மைத்துனருக்கு உதவுவீர்கள். பயணம் இனிதாக அமையும்.

துலாம்: பேச்சில் நிதானம் தேவைப்படும். தொழில், வியாபாரத்தில் சீர்திருத்தம் மேற் கொள்வீர்கள். லாபம் மிதமாக இருக்கும். பெண்கள் சிக்கனம் மூலம் வீட்டுச் செலவைச் சமாளிப்பர். பெற்றோரின் ஆலோசனையை ஏற்பது நல்லது.



விருச்சிகம்: நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறு வீர்கள். தொழிலில் லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். மாணவர்கள் கண்ணும், கருத்துமாகப் படிப்பர்.

தனுசு: எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் பன்மடங்கு உயரும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

மகரம்: புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள் அதி காரிகளின் பாராட்டைப் பெற்று மகிழ்வர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

கும்பம்: பேச்சால் பிறரை கவர்ந்திழுப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்ல நேரிடும். பெண் கள் பணம், நகை இரவல் கொடுக்க வேண்டாம்.

மீனம்: மனதில் இருந்த குழப்பம் மறையும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கப் பெறுவர். பிள்ளைகளின் நற்செயல் பெருமையளிக்கும்.

# உருளைக்கிழங்கு



# போளி

### தேவையான பொருள்கள்

உருளைக்கிழங்கு - எட்டு (வேகவைத்து, மசித்தது)
கடலைப் பருப்பு - ஒரு மேசைக்கரண்டி
உளுத்தம் பருப்பு - ஒரு மேசைக்கரண்டி
முந்திரி பருப்பு - எட்டு
மைதா மாவு - இரண்டு கப்
பச்சை மிளகாய் - ஒன்று
கறிவேப்பிலை - சிறிதளவு
கொத்தமல்லி - சிறிதளவு
கடுகு - ஒரு கரண்டி
மஞ்சள் தூள் - அரைக் கரண்டி
உப்பு - தேவைக்கேற்ப
நல்லெண்ணெய் - இரண்டு மேசைக்கரண்டி

### செய்முறை

சட்டியில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் பச்சை மிளகாய், கறிவேப்பிலை, கொத்தமல்லி போட்டு வதக்கவும்.
அதில், மசித்த உருளைக்கிழங்கு, உப்பு, மஞ்சள் தூள் சேர்த்து கலந்து கிளறி இறக்கவும்.
ஒரு கிண்ணத்தில் மைதா மாவு, உப்பு, எண்ணெய் சிறிதளவு, தண்ணீர் சிறிதளவு சேர்த்து நன்றாக போளி மாவு பதத்திற்கு பிசைந்து கொள்ளவும்.
மாவை சிறு சிறு உருண்டைகளாக உருட்டிக் கொள்ளவும். பிறகு, ஒரு உருண்டை எடுத்து வாழை இலையில் தட்டி நடுவில் பூரணம் வைத்து மூடி மறுபடியும் மெல்லியதாக தட்டி, தவாவில் போட்டு சுற்றி நெய் ஊற்றி போளி சுட்டு எடுக்கவும்.

# வெயிலும் வியர்வையும்



வெயிலும் வியர்வையும் அதனால் ஏற்படும் உடல் துர்நாற்றமும்தானே இன்றைய தினத்தில் முக்கிய பிரச்சினையே..! அதற்குத்தான் தீர்வு

- அவ்வப்போது தேவையற்ற முடிகளை நீக்கி விடுங்கள்.
- தினமும் இரண்டு வேளை குளியுங்கள்.
- நிறைய தண்ணீர் குடியுங்கள்.
- துர்நாற்றம் ஏற்படும் இடங்களில் ஆன்டி-பாக்டீரியல் கிரீம்களைத் தடவுங்கள்.
- கடைகளில் கிடைக்கக்கூடிய டியோடரன்ட், பாடி ஸ்பிரே போன்றவை வியர்வை துர்நாற்றத்தைத் தடுப்பதற்காக அல்ல.. அது வெளியில் தெரியாமல் மறைப்பதற்காகத்தான்.
- உங்கள் தேவை அதுதான் என்றால் தாராளமாக அவற்றைப் பயன்படுத்தலாம். ஆனால், பொதுவாக எந்த ஸ்பிரேயும் நேரடியாக சருமத்தில் பட்டால் நாளடைவில் அந்த இடம் கருமை அடையக் கூடும். எனவே, கவனம் தேவை.
- காற்று போகிற அளவுக்குத் தளர்வான, காட்டன் உடைகளை மட்டுமே அணியுங்கள். சிந்தடிக் உபயோகித்தாலும் அவை காட்டன் லைனிங் உள்ளவையாக இருக்கட்டும். காட்டன்தான் வியர்வையை உறிஞ்சி, உடலை உலர்வாக வைக்கும்.

# இது புதுசு



## மெழுகுவர்த்தி தாங்கி

மட்பாண்டத்தால் உருவான மெழுகுவர்த்தி தாங்கிகள் அறிமுகமாகியுள்ளன. முன்பு உலோகத்தில் கிடைக்கப் பெற்ற இவை, மட்பாண்டத்தால் உருவாகியுள்ளன. உறுதியான கனமான இவை கடைகளில் புதிதாக அறிமுகமாகியுள்ளன. இவை 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# உணவுப் பழக்கத்தில் மாற்றம் தேவை

வேகமாக மாறிவரும் வாழ்க்கை முறை காரணமாக உணவுப்பழக்கங்களில் தவறான பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. சுகாதாரமற்ற உணவுகள், துரித உணவுகள், குளிர்பாணங்கள் என்று கிடைப்பதை சாப்பிடுவது அல்லது தங்களுக்குப் பிடித்த உணவுவகைகளைச் சாப்பிடுவது எனத் தொடர்கிறது.
கட்டுக்கோப்பான உடலமைப்பு வேண்டும் என்பதற்காக, உடற்பயிற்சி கூடங்களுக்குச் செல்பவர்கள் கூட அதற்கேற்றார்போல் சாப்பிடுவதில்லை. நார்ச்சத்து உள்ள காய்கறிகள், பழங்கள் உண்ணும் பழக்கமும் பலரிடம் இல்லை.
இந்நிலையை மாற்ற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். உணவில் காய்கறிகள், கீரைகள் மற்றும் சுண்டல் இடம் பெறுவது அவசியம். விருந்து போன்ற நிகழ்ச்சிகளுக்கு செல்லும் போது, எண்ணெயில் பொரிக்கப்பட்ட அசைவ உணவுகள், வறுத்த முந்திரி, உப்பு ஏராளமாக சேர்க்கப்பட்ட உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. போதுமான தண்ணீர் குடிக்க வேண்டும்.
உணவு விடயத்தில் கவனமாக இருந்தாலும் வருடத்துக்கு ஒரு தடவை உடல் பரிசோதனை செய்வது அவசியம். ஆண்களின் உணவுப்பழக்கத்தை மேம்படுத்துவதில், குடும்ப உறுப்பினர்களின் பங்களிப்பு 60 சதவீதமாகவும், சம்பந்தப்பட்ட ஆணின் பங்கு 40 சதவீதமாகவும் உள்ளது.
வீட்டில் உள்ள உறுப்பினர்கள் சரியான நேரத்துக்கு, சரியான அளவில் சரியான உணவை ஆண்கள் சாப்பிட்டு வருகிறார்களா என்பதைக் கண்காணித்து வந்தாலே, ஆண்களின் உணவுப்பழக்கம் மேம்படும்



# டிப்ஸ் டிப்ஸ்...



- அவியல் செய்யும்போது தேங்காய், பச்சை மிளகாய், சீரகம் ஆகியவற்றுடன் ஊற வைத்த கசகசாவையும் சேர்த்து அரைத்து பயன்படுத்தினால், அவியல் திக்காக இருக்கும்; சுவையும் கூடும்.



- ஒரு கைப்பிடி கொண்டைக் கடலையை சிவக்க வறுத்து, முதல் நாளே தண்ணீரில் ஊற விடவும். மறுநாள் கொஞ்சம் உளுத்தம்பருப்பு, கறிவேப்பிலை, பெருங்காயத்தூளை தாளித்து, கொண்டைக்கடலையுடன் சேர்த்து தண்ணீர் விடாமல் அரைத்து, கடைந்த தயிருடன் கலந்து உப்பு சேர்த்தால், தயிர்ப்பச்சடி தயார்!




- அல்வா மிக்ஸ் பயன்படுத்தி அல்வா செய்யும்போது, அதிக அளவு வேண்டுமென்றால், சவ்வரிசியை 2 மணி நேரம் ஊற வைத்து, அந்த விழுதை மிக்ஸுடன் கலந்து செய்யலாம். நிறைய அல்வா கிடைப்பதுடன், கண்ணாடி போன்று பளபளப்பாக இருக்கும்.

# மூளை!

## நம்பிக்கைகளின் மூலம்

கார் எஞ்சின் எப்படி வேலை செய்கின்றது என்பதை அறிந்துகொள்ளாமல் நாம் அனைவரும் கார் ஓட்டக் கற்றுக் கொள்ள முடிகிறது. அது போலவே எங்களது மூளை எப்படிக் கற்கின்றது, சிந்திக்கின்றது என்பதை அறிந்திடாது கற்றுக் கொள்கின்றோம்.சிந்தனை வயப்படுகிறோம். மூளை என்பது எப்போதும் கற்றுக் கொள்ளும் ஓர் இயந்திரம். சிறு பராயம் முதல் படிப்படியாக விடயங்களைக் கற்றுக் கொள்கின்றது. இவ்வாறே நாமும் கேட்க, பார்க்க, பேச, நடக்க, ஓட, சிந்திக்க, பகுத்து அறிய எனப் பலவற்றை பலவாறாக கற்றுக் கொள்கின்றோம்.உண்மையில் நாம் எப்படிக் கற்றுக் கொள்கின்றோம் என்பதை இரண்டு முக்கியமான காரணிகள் நிர்ணயிக்கின்றன. ஒன்று எமக்குரித்தான ஜீன்கள் மற்றையது நாம் வளர்ந்த,வாழும் சூழல்.



**மூளை எப்படிக் கற்றுக் கொள்கின்றது?**

மூளை என்பது நரம்புச் செல்களால் (Neurons) பின்னப்பட்ட வலை (Neural Network). நாம் கற்கும்போது புதிய நரம்பு செல் இணைப்புகளை உருவாக்கியோ அல்லது இணைப்புகளின் பலத்தை கூட்டிக் குறைத்தோ எமது மூளை கற்றுக் கொள்கின்றது. இவ்வாறு புலன்கள் மூலமாக சொல்லப்படுகின்ற, உணரப்படுகின்ற உலக நடப்புக்களை, விடயங்களை கண்டு கொண்டு மூளை மாதிரிகளை (Models) உருவாக்குகின்றது. இதில் ஒரு மாதிரியின் பலம் அல்லது நம்பிக்கை என்பது அதன் நிகழ்தகவை பொறுத்ததாக அமைந்துள்ளது. அமைந்து விடுகிறது. நாம் கற்று கொள்ளும்போது அந்த மாதிரியின் நம்பிக்கை நிகழ்தகவு என்பது அதிகரிக்கவோ அல்லது குறையவோ செய்யும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்த மாதிரிகளைக் கொண்டே நாம் வாழ்க்கையை,உலகைப் புரிந்து கொள்ள, கணித்துக் கொள்ள முடிகிறது.அதன்படி வாழ்கின்றோம். புலன்கள் மூலமாக மூளைக்கு செல்லும் எந்த விடயங்களும் உலகைப் பற்றியதான முழுமை அல்ல. அந்த முழுமையற்ற விடயங்களிலிருந்து மூளை ஒரு மாதிரியை உருவாக்கிக் கொண்டு உலகை,வாழ்க்கையைப் புரிந்து கணிப்பதையே அறிவு என்கின்றோம். அனைத்துமே முழுமையற்று இருப்பதால் அனைத்துமே நம்பிக்கையின் அடிப்படைதான் என்கின்றனர் விஞ்ஞானிகள். நம்பிக்கையின் நிகழ்தகவு வேறாக இருக்கலாம். 100 வீதம் நிச்சயம் என்று ஒன்றும் இருந்து விடுவதில்லை. இருந்துவிட முடியாது. ஒவ்வொருவரினதும் மூடநம்பிக்கையும் அவரின் மூளையின் செயல்நிலைப்படியேயான நம்பிக்கையே.

ஆக, நம் நம்பிக்கை என்பது தற்சார்புடையது (Subjective) எனப்படுகிறது. எனவே தான் பாரபட்சமற்ற வெளிசார்புடைய (Objective) ஆராய்ச்சியை (அறிவியல்) நாடி நிற்கின்றது.தேடி நிற்கின்றது. இந்த விடயங்களைத் தான் கலிலியோ உள்ளடங்கலான பல அறிஞர்கள் நமக்கு வழிகாட்டியாக சுட்டியுள்ளனர். காட்டியுள்ளனர். ஆனால் அதை எப்படி எல்லோருக்கும் நம்ப அல்லது புரிய வைப்பது..?

எந்த ஒன்றும் பரிணாம வளர்ச்சி அடைய சில முக்கிய அம்சங்கள் உள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஒன்று சேமிப்பு இடம் (Storage)இரண்டு அதை நகல்கள் எடுத்தல் (Genes) இருக்கும் அல்லது சேமித்த இடம். DNA அதன் நகல் எடுத்தலை இனப்பெருக்கம் என்றும் அதன் பிழைகளை மரபு பிழைகள் என்றும் நாம் குறிப்பிடுகிறோம். பரிணாம வளர்ச்சிக்கு நல்லது கெட்டது என்பதெல்லாம் தெரியாது. சூழலுக்கு ஏற்ப தக்கவைகள் பிழைத்து வளர்ச்சி அடைகின்றன. பரிணாம வளர்ச்சிக்கு மற்றொரு உதாரணமாக மெம்கள் (Memes) சொல்லப்படுகிறது. மெம் என்பது ஒரு யோசனையைக் (Idea) குறிக்கும். கடவுள், மதம், அறிவியல், ஜாதகம், கலாசாரம், ஜாதி எல்லாமும் மெம்கள் தான். இவை இருக்கும் அல்லது சேமித்த இடம் மூளை தான். இவை எப்போதும் ஒரு மூளை யிலிருந்து மற்றொன்றிக்கு காலம் காலமாக மொழி, கலாசாரம் மூலமாகப் பரவுகின்றது. பரப்பப்படுகின்றது அல்லது நகல் எடுக்கப்படுகின்றது.


ஜீன்களைப் போலவே சாவடைந்துபோன மெம்கள் கோடான கோடி உள்ளதாக கூறப்படுகிறது. இவை அனைத்தும் ஏதாவது ஒரு வகையிலே சூழலுக்கு ஏற்ப வளர்ச்சி அடைந்தவைகளாகக் காணப்படுகின்றன. அந்த சூழலில் பல மூடநம்பிக்கைகளுக்கு நம் உணர்ச்சிகள் முக்கிய காரணிகளாக அமைந்து விடுகின்றன. மனிதனின் ஆரம்ப கால கட்டங்களில் அறியாமையும் பய உணர்ச்சியும் பல மூடநம்பிக்கைகளுக்கு முக்கிய காரணிகளாக இருந்திருக்கலாம் எனச் சொல்லப்படுகிறது. மெம்கள் வளர்ச்சி அடைய தேர்ந்த மொழி மற்றும் கலாசாரம் தேவை என்பதால் அதைக் கொண்ட மனிதனிடத்தில் மூடநம்பிக்கைகளும், அறிவியல் வளர்ச்சிகளும் தொற்றிக் கொண்டன. அவற்றை வளர்ச்சிப் போக்கில் காணமுடிகின்றது. ஏனைய விலங்குகளில் இவற்றை காணமுடிவதில்லை.

பகுத்தறிவு என்பது (Critical Thinking)ஒவ்வொரு விடயத்தையும் சீர்தூக்கி வெளிசார்புடன் (Objective) கற்று அதற்கு ஏற்பதாய் நம்பிக்கை நிகழ்தகவுகளை அமைப்பதே. ஆனாலும் இவை அறிவையும் நாம் வளர்ந்த அல்லது வாழும் சூழல்களையும் பொறுத்து அமைந்துள்ளன. முறையான பகுத்தறிவு என்பது இல்லாது போகும் போது மூளை எளிதாக ஏமாந்து போகிறது. நம்பிக்கை நிகழ்தகவுகளை வெளிச்சார்பு அறிவுக்கு (Objective-Knowledge) எதிராக அமைத்துவிடுகிறது.இதனை மூடநம்பிக்கை எனலாம்.

ஆக,இறந்தவருக்கு அஞ்சலி செலுத்துவதும், நினைவுச் சின்னங்கள் எழுப்புவதும், பாடுவதும், கொண்டாடுவதும் பகுத்தறிவு தான். பகுத்தறிவு என்பது நாம் எதைச் செய்தாலும் அதைப் புரிந்து கொண்டு செய்யும் தன்மையிலும் அல்லது குருட்டுத்தனமான செயல்நிலைகளின் கீழ் படிநிலைகள் என்பதிலும் தான் தங்கியுள்ளது. பகுத்தறிவு என்பது நம் மூளையின் அறிவுப் பகுதிய்யை மட்டுமே ஏற்பதல்ல நம் உணர்ச்சிப் பகுதியையும் ஏற்று நடப்பது தான்.

## மரண அறிவித்தல்கள்

### பிளாறிஸ் சகாயதாசன்



பிறப்பு: 21.09.1955
இறப்பு: 17.01.2017

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம். 62 A குருசோல்ட் வீதி. சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட பிளாறிஸ் சகாயதாசன் 17.01.2017 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆ.பிளாறிஸ் - பி.ஆகத்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பிலேந்திரன்- திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் செலஸ்ரின் (டோகா). டக்ளஸ் (மன்னார்). ஜோண்சன் (வவுனியா). யூடிற் (மன்னார்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மற்றும் அந்தோனியம்மாவின் (மலர்) அன்புக் கணவரும் பொலின் (பிரான்ஸ்). நேசன் (பாறின்). சலின் (அமெரிக்கா). பாசன். தீபன். அளெக்ஸ் (ஆஸ்திரேலியா). மேரி மரீனா (முன்பள்ளி ஆசிரியர்). றெஜிஸ்குமார் (பிரான்ஸ்). கனிஸ்ரா ஆகியோரின் பாசமிகு தந்தையும் தயாறூசெல். றெஜி ராஜேஸ்வரன். நிலாந்தினி ஆகியோரின் மாமனாரும் றெஜி. பியூலா. றக்ஷனா. ஏஞ்சல். தினோசியா. எபேஞ்சலின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.01.2017 சனிக்கிழமை நெடுந்தீவில் இடம்பெறும்.


இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### தம்பித்துரை பரராஜசிங்கம்

(ஓய்வு நிலை தபால் அதிபர்)



வியாபாரிமூலையைப் பிறப்பிடமாகவும் 75. மானிப்பாய் வீதி. உரும்பிராய், மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை பரராஜசிங்கம் 18.01.2017 புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் திருமதி ரோகினியின் (ஓய்வுநிலை நூலகர். யாழ். பல்கலைக்கழகம்) அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான தம்பித்துரை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் இந்துமதி (ஆங்கில விரிவுரையாளர். யாழ். பல்கலைக்கழகம்). பாமதி ஆகியோரின் அன்புத் தந்தையும் தனுஷியன். சிவானந்தச்செல்வன் ஆகியோரின் அன்பு மாமனாரும் வினோ. ஜனார்த்தன். ஜெயந்தன். ஜீவகன். ஜெயதக்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் மங்களேஸ்வரி. இந்திரா. குமாரசிங்கம். நவரட்ணசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2017) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ரோகினி பரராஜசிங்கம்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

## மரண அறிவித்தல்



" யாரிடம் செல்வோம் இறைவா
வாழ்வு தரும் வார்த்தை எல்லாம்
உம்மிடம் அன்றோ உள்ளது "

### திருமதி மரியம்மா பெஞ்சமின் கிறிஸ்துதாஸ் ஏபிரகாம்

மாதகலைப் பிறப்பிடமாகவும் இல 111. 4ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி M.B.C. ஏபிரகாம் (மரியம்மா ஏபிரகாம்) நேற்று (18.01.2017) புதன்கிழமை இறை வனடி அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பெஞ்சமின் கிறிஸ்துதாஸின் (ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிகாரி) அன்பு மனைவியும் மடு இராஜேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியர்). லோகேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியர்). எலிசபெத் (ஞானேஸ் - ஓய்வு பெற்ற ஆசிரியர்). அன்ரன். சவுந்தரசிங்கி(ரவி). ரூபன் அரசகுலசிங்கி. ஏபன்வர்ணகுலசிங்கி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கொன்ஸ்ரன்ரைன் மற்றும் மரியதாஸ். பெனடிற். றொசிற்றா. பேபிராணி. நிக்ஷீயா. மதனராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (19.01.2017) வியாழக்கிழமை பி.ப 3.00 மணியளவில் புனித யாகப்பர் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலியின் பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

யாழ்ப்பாணம்.

077 846 4182/ 077 158 3361



அன்னை மடியில்
05.05.1932

இறைவன் அடியில்
13.01.2017

### திருமதி சிவஞானம்மா சிவபூசம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் நந்தாவில் கொக்குவில். லண்டனையும் வதிவிடமாகக் கொண்ட திருமதி சிவஞானம் சிவபூசம் 13.01.2017 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான உலகநாதர் - அருளம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிவபூசத்தின் அன்பு மனைவியும் சிவகுமார் (கனடா). சுகுமார் (லண்டன்). ஞானகுமாரி (ஆஸ்திரேலியா). யோகேந்திரகுமார். இந்திரகுமாரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் குமாரி. கனகா(கனடா). துஸ்யந்தி (லண்டன்). ஸ்ரீகரன் (ஆஸ்திரேலியா). மாலினிதேவி. லக்ஸ்மிகாந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவதர்சி. சிவதர்சன். நிருத்தனன். அத்பன். மௌலி. பவித்தா. சேரன். அனோஜன். அங்கயன். பிரணவன். கவிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ரியானாவின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.01.2017 ஞாயிற்றுக் கிழமை லண்டன் நேரம் முற்பகல் 11 மணிக்கு லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி.யோகேந்திரகுமார்
(யோகன்)

நந்தாவில்,
கொக்குவில்.

தொடர்பு : 077 863 3383 (யோகன்)




## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

பதிவு இல - J/1594 பதிவு திகதி - 11.03.1972

### கேள்விப்பத்திரம் கோரல்

எமது சங்கத்தில் கீழ்வரும் வேலைகளை மேற்கொள்வதற்குரிய கேள்விப்பத்திரங்கள் எம்மால் கோரப்படுகின்றன. இவ் வேலையினை மேற்கொள்ள விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை ரூபா 100.00 செலுத்தி காரியாலய கடமை நேரத்தில் பெற்று பூரணப்படுத்தி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் வேலையினைக் குறிப்பிட்டு தங்களின் கேள்விப் பத்திரங்களை **"தலைவர், சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், டச்சு வீதி, சாவகச்சேரி"** எனும் முகவரிக்கு எதிர்வரும் 05.02.2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**விவரம் வருமாறு :**

01. 199 கனகன்புளியடி
02. 202 இராமாவில்
03. 188 கைதடிச் சந்தி

(01–03) சுற்றுமதில். நவீனக் கிளை கிணறு மற்றும் மலசலகூடம் அமைத்தல்

04. கச்சாய் கொற்சாட்டி ஆதனத்திற்கு 03 பக்க மதில் அமைப்பு
05. 198 பெருங்குளம் கிளைக்கு இருபக்க மதில் அமைத்தல்

**குறிப்பு : ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியாக விண்ணப்பித்தல் வேண்டும்.**

**தலைவர்,**
**ப.தெ.வ.அபி. கூட்.சங்கம்,**
**சாவகச்சேரி.**

# ட்ரம்ப்பின் சிலையை அவமதித்த பெண்

அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் டொனால்ட் ட்ரம்ப் மீதான தமது எதிர்ப்பைப் பெண்கள் அமைப்பு ஒன்று வித்தியாசமாகக் காட்டியுள்ளது.

ஸ்பெயின் தலைநகர் மெட்ரிட்டில் உள்ள நூதனசாலை ஒன்றில் நேற்றுட்ரம்ப்பின் முழுஉருவ மெழுகுச் சிலை ஒன்று திறந்து வைக்கப்பட்டது. இதில் கலந்து கொண்ட பிமென் என்ற பெண் உரிமைகளுக்கான அமைப்பைச் சார்ந்த பெண்ணொருவர், திடீரென்று பாதுகாப்பு அதிகாரிகளை மீறிக்கொண்டு சிலைக்கருகில் சென்றார்.

சிலைக்கருகே சென்றதும் அவர் தனது மேலாடையைக் கழற்றியெறிந்ததுடன் ட்ரம்ப்பின் சிலையின் மறைவுப் பகுதியைக் கைகளால் பிடித்துக்கொண்டு கீழ்த்தரமான கோஷம் எழுப்பி தனது எதிர்ப்பைத் தெரிவித்தார். பாதுகாப்பு அதிகாரிகள் எவ்வளவோ கூறியும் கேட்காமல் எதிர்ப்பு கோஷம் எழுப்பிய அவரை, இறுதியில் குண்டுக்கட்டாகத் தூக்கிச் சென்று அப்புறப்படுத்தினர். (கு)

## மரண அறிவித்தல்கள்

### சரஸ்வதியம்மா கனகசிங்கம்

தையிட்டியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சரவதியம்மா கனகசிங்கம் நேற்று 18.01.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2017) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பாடசாலை வீதி,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**பெறாமக்கள்**

### சின்னத்தம்பி சிவஞானம்

**( ஓய்வு பெற்ற உதவி நூலகர் - வலிகாமம்)**



மயிலணி வடக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவஞானம் நேற்று (18.01.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் சரஸ்வதியின் பாசமிகுகணவரும் சுதர்சன், ஜெயர்சன், ஜெனிதா, சுகந்தி, ஜெயரூபன், சசிபன், அஜந்தன் ஆகியோரின் அன்புத்தந்தையும் சுபாசினி, ராசன், தர்சினி தேவி, சந்திரேகா, சாரதா, மகிழ் ஆகியோரின் மாமனாரும் தமிழினி, பிரிந்தன், விதுரன், காவியா, மதுசா, சுருதி, அமல்ராஜ், காவினியன், சகானா, ஆதனா, அக்ஷயா, தனு, றுக்சன், அல்வின் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான சற்குணம், தர்மகுலசிங்கம் மற்றும் பாலச்சந்திரன், மகேஸ்வரி, ரதி ஆகியோரின் சகோதரரும் சுப்புறு, பூசாரி, நகுலேஸ்வரன், சத்தியராணி காலஞ்சென்ற சத்தியவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2017) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாமகள் சந்திரசேகரம்



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாமகள் சந்திரசேகரம் 18.01.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரத்தின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பாக்கியம் தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற வர்களான அருணாசலம்- வாலாம்பிகைதம்பதிகளின் மருமகளும் கோபீஸகனின்(மாநகரசபை-யாழ்) அன்புத் தாயாரும் கமலலோஜினியின் (யாழ் மத்திய கல்லூரி )அன்பு மாமியாரும் கலாத்மிகா,சிவனுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் ஞானபண்டிதர் காலஞ்சென்ற தையல்நாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.01.2017 வியாழக்கிழமை மு.ப 11.00மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயான்த்திற்கு எடுத்துச்செல்லப்படும் .இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**ச.கோபீஸகன் (மகன்)**
**077 379 3489**

### திருமதி செல்வராணி சிவகுரு




இல. 54, பண்டிதர் மாணிக்க தியாகராஜர் வீதி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி சிவகுரு 17.01.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன்–ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி, சிவகுருவின் (கிருஷ்ணா றேடியோ வேக்ஸ்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லமுத்து, வேலுப்பிள்ளை, நாகராசா, விசாலாட்சி, ராசலிங்கம், தம்பியையா, அன்னலட்சுமி, செல்வநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கிருஷ்ணமலர் (ஆசிரியை-யா/மல்லாகம் மகா வித்தியாலயம்), கிருஷ்ணமேனன் (லண்டன்), கிருஷ்ணமோகன் (ஆஸ்திரேலியா), கிருஷ்ண ஆனந்தன் (கனடா), கிருஷ்ணதாசன் (கனடா), கிருஷ்ணசாந்தி(பிரான்ஸ்) காலஞ்சென்ற கிருஷ்ணபவன் ஆகியோரின் அன்புத்தாயாரும் வரதராஜன், கமலினி, மஞ்சுளாதேவி, சுகந்தி, றஜனி, மார்க்ஸ், நாகலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் பவித்திராஜினி, கிரிஸ்ரீனா, கானியா, கிறிஸ்அற்றோ, அற்ரிசியா, பவறூபன், அற்ரிசன், சாருஜன், சௌமிகா, சனுஜன் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2017)வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பண்டிதர் மாணிக்கத் தியாகராஜர் வீதி,**
**சுன்னாகம்.**
**077 598 0079, 071 882 5127**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**




# இந்தியத் திரைப்படங்களுக்கான தடையை விலக்கிய பாகிஸ்தான்

இந்தியாவில் தயாராகும் இந்திப் படங்களை திரையிடுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையைபாகிஸ்தான் அரசுவிலக்கியுள்ளது.

இந்திய–பாகிஸ்தான் எல்லையில் உள்ள யூரி என்ற கிராமத்தில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியதையடுத்து பாகிஸ்தான் கலைஞர்களை இந்தியத் திரைப்படங்களில் பயன்படுத்த இந்திய அரசு தடைவிதித்தது.

இதற்கு பதிலடியாகவே இந்தித் திரைப் படங்களை பாகிஸ்தானில் திரையிடக்கூடாது என பாகிஸ்தான் அரசு நான்கு மாதங்களுக்கு முன் அறிவித்திருந்தது.

இந்நிலையில், அந்தத் தடையை தற்போது பாகிஸ்தான் விலக்கியுள்ளது. திரையரங்கு உரிமையாளர்களின் தொடர்ச்சியான கோரிக்கைகளையடுத்தே இந்த முடிவை நவாஸ் ஷெரீப் எடுத்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

பாகிஸ்தான் அரசின் இந்தத் திடீர் முடிவால், அடுத்து வெளியாகவுள்ள இந்தித் திரைப் படத் தயாரிப்பாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஷாருக்கானுக்கு பாகிஸ்தானில் பெரு வரவேற்பு இருப்பதால், அடுத்து வெளியாகவுள்ள அவரது திரைப்படமான ரயீஸுக்கு பலத்த ஆதரவு கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (கு)



# காம்பியாவில் அவசரநிலை

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான காம்பியாவில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த இந்த பிரகடனத்தை காம்பிய ஜனாதிபதி யஹ்யா ஜம்மே வெளியிட்டுள்ளார்.

மேற்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள கம்பியாவில், ஜனாதிபதி ஜம்மேயின் பதவிக் காலம் இன்று முடிவடைகிறது.

இந்த நிலையில் குறித்த அவசர நிலை அடுத்துவரும் 90 நாள்களுக்கு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.


கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற தேர்தல் மற்றும் உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாட்டின் தலையீடு அதிகமாக உள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து சட்ட ஒழுங்கு மற்றும் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்று பாதுகாப்புப் படையினருக்கு ஜம்மே வலியுறுத்தினார்.

தனது 21 வருட ஆட்சிக்காலத்தில் யம்மே பல திடீர் முடிவுகள் மற்றும் பல அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.

அந்த வகையில் தாம் எயிட்ஸ் நோய்க்கு மூலிகை மருந்தை கண்டுபிடித்துள்ளதாக 2007இல் அவர் அறிவித்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

அத்துடன் பொதுநலவாய அமைப்பை நவீன காலனித்துவம் என்று தெரிவித்து, அதிலிருந்து காம்பியா விலகுவதாக அவர் 2013இல் அறிவித்திருந்ததுடன் காம்பியாவை ஒரு இஸ்லாமிய நாடாகப் பிரகடனம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)




# ஏலத்துக்கு வரும் ட்ரம்ப் வசித்த வீடு

அமெரிக்காவில் நியுயோர்க் நகரிலுள்ள ட்ரம்ப் சிறுவயதில் வசித்து வந்த வீடு ஏலத்திற்கு வந்துள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் இந்த வீட்டை விலைக்கு வாங்கிய ரியல் எஸ்டேட் நிறுவனம் இந்த வீட்டை தற்போது இணையத்தின் மூலம் ஏலத்தில் விட தீர்மானித்துள்ளது.

அமெரிக்காவின் நியுயோர்க் நகரில் உள்ள பரோ அல் குயின்ஸ் பகுதியில் பிரெட் டிரம்ப் கடந்த 1940 ஆம் ஆண்டில் ஐந்து படுக்கறைகளுடன் கூடிய பெரிய வீடு ஒன்றை கட்டினார்.

குறித்த வீட்டில் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள டொனால்ட் ட்ரம்ப், தனது 4 வயது வரை இந்த வீட்டில் தான் சிறு வயதைக் கழித்து வந்தார்.

டொனால்ட் டரம்பின் தந்தையான பிரெட் டிரம்ப்பின் மறைவுக்கு பின்னர் இந்த வீட்டில்யாரும்வசிக்கவில்லை.

இதையடுத்து கடந்த டிசம்பர் மாதம் குறித்த வீட்டை வாங்கிய ரியல் எஸ்டேட் நிறுவனம் தற்போது அந்த வீட்டை ஏலத்திற்கு விட தீர்மானித்துள்ளது.

ஏலம் கேட்பவர்கள் முன் வைப்புத் தொகையாக ஏலத் தொகையில் 10 சதவீதத்தை முன்கூட்டியே செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் தற்போது ஏலம் நடைபெற்று வருகிறது.

இதேவேளை குறித்த இந்த ஏலத்தில் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்க உள்ளவரும் பெரும் செல்வந்தருமான டொனால்ட் ட்ரம்ப், தனது நெருங்கிய நண்பர்களின் பெயரால் இந்த ஏலத்தில் பங்கேற்கலாம் என குறிப்பிடப்படுகின்றது. (த)

# மெக்சிக்கோவில் துப்பாக்கிச் சூடு; 3 பேர் சாவு



மெக்சிக்கோவின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள கென்கென் நகரில் அரச அலுவலகம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கி தாக்குதலில் சுமார் 3 பேர் உயிரிழந்தனர்.

குறித்த துப்பாக்கித் தாக்குதலில், அலுவலகத்தில் பனிபுரிந்த பணியா ளர்கள் இருவர் உட்பட துப்பாக்கி தாரியும் கொல்லப்பட்டுள்ளதாக அந்த நாட்டு தகவல்கள் தெரிவித்தன.

மெக்சிக்கோவில் கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி தாக்குதலில் 5 பேர் உயிரிழந்திருந்த நிலையில், நேற்று முன்தினம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகைதரும் சுற்றுலாத் தளமான கென்கென் நகரிலுள்ள தலைமை நீதிமன்றத்தை இலக்கு வைத்தே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தை அடுத்து தாக்குதல் நடத்தப்பட்ட பகுதிக்கு அருகாமையில் அமைந்திருந்த பல்பொருள் அங்காடியிலிருந்த அனைவரும் பாதுகாப்பு கருதி வெளியேற்றப் பட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

தாக்குதலை அடுத்து குறித்த பகுதியில் ஏற்பட்ட பதற்றத்தை தணிப்பதற்கான முயற்சிகளைப் பொலிஸார் மேற்கொண்டதுடன் மேலதிகவிசாரணைகளையும்முன்னெடுத்து வருகின்றனர்.

மெக்சிக்கோவில் அண்மைக்காலமாக இராணுவ, கடற்படை மற்றும் மாநகரப் பொலிஸ் ஆகிய அலுவலகங்கள் மீது தொடர்ந்து இத்தகைய துப்பாக்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. (த)

**தேவை**

யாழ். நகரில் உள்ள பிரபலமான போன் சொப்பிற்கு பெண் கணக்காளர் வேலைக்குத் தேவை.
தொடர்பு - 077 044 6317

**சட்டமாணி அனுமதிப்பரீட்சை - 2017**
(திறந்த பல்கலைக்கழகம்)

போட்டிப் பரீட்சையில் உயர்சாதனை பெறல்.
சட்டத்துறையினரின் சிறப்பு வழிகாட்டல்
ஆரம்பம்: 21.01.2017
(சனி) 3 pm
T.P: 076 362 6304
D.C.M கல்லூரி
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
Jaffna.
(J 7778)
(14,17,18)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி
## சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான 01.02.2017 - 31.12.2017 வரையுள்ள காலப்பகுதிக்கான பகிரங்க ஏலக் கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேசநிர்வாக எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தை; இறைச்சிக்கடைகள் என்பவற்றை 01/02/2017 – 31/12/2017 வரைகுத்தகைக்கு வழங்குவதற்காக பகிரங்க ஏலத்தில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏலம் 30/01/2017 முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும்.

ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் கேள்விவைப்புப் பணத்தினை செலுத்திபற்றுச் சீட்டினை 19/01/2017 தொடக்கம் 30/01/2017வரை முற்பகல் 10.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.


| தொ.இல | குத்தகை விபரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்பு பணம் | மாதவாடகை (வரிகள் நீங்கலாக) |
| --- | --- | --- | --- |
| | நெல்லியடி உப அலுவலகம் | | |
| 1. | நெல்லியடி மாட்டிறைச்சிக்கடை | 6000.00 | 100.00 |
| 2. | கோயிற் சந்தைகோழியிறைச்சிக்கடை | 2000.00 | 100.00 |
| 3. | நெல்லியடிஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 100.00 |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | |
| 4. | உடுப்பிட்டிச் சந்தை | 8000.00 | - |
| 5. | உடுப்பிட்டிச் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 5000.00 | 100.00 |
| 6. | உடுப்பிட்டிச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 2000.00 | 100.00 |
| 7. | சாண்டா சந்தை கோழிக்கடை | 500.00 | 100.00 |

இதற்கான ஏலக் கேள்வியில் கலந்து கொள்பவர்கள் மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணத்தினை 2017/01/30ஆம் திகதி முற்பகல் 10.00மணிக்கு முன் செலுத்துவதுடன், சித்திகரக் கேள்விக்காரர் உடனடியாக ஏலத் தொகையின் 1/3 பங்கு பாதுகாப்பு வைப்புப்பணம், VAT,NBT ஆகியவற்றைச் செலுத்தி ஒப்பந்தம் செய்யவேண்டும். பாதுகாப்பு வைப்புப்பணம் உடனடியாக செலுத்தத் தவறும் பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு குத்தகை வழங்கப்படும்.

அ.வினோராஜ்
செயலாளர்
வடமராட்சிதெற்குமேற்குபிரதேச சபை, கரவெட்டி.
19/01/2017.

# மரண அறிவித்தல்

# கந்தையா நடேசன்



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடேசன் (17.01.2017) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிதம்பரம் தம்பதியரின் அன்புமகனும் கமலவதனியின் அன்புக்கணவரும் கிரிஜா, அனுஜா, கோபிநாத், தனுஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஷ்ணகுமார், தேவராஜ் ஆகியோரின் அன்புமாமனாரும் பிறிஜந், துமிஷ்கா, ரிதஷ்கா ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்றவர்களான இராசையா, சிவப்பிரகாசம், சரஸ்வதி, அருணாசலம், மகேஸ்வரி, சிவஞானம், திருநாவுக்கரசு, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2017) வியாழக் கிழமை மு.ப. 11 மணியளவில் தம்புவத்தை ஏழாலை மேற்கில் உள்ள அவரின் மைத்துனரின் (கிருஷ்ணபிள்ளையின்) இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தம்புவத்தை,**
**ஏழாலை மேற்கு, ஏழாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**தேவை**

கச்சேரிப் பகுதியில் தரம் 05 தரம் 08 மாணவன்.மாணவிக்கு வீட்டில் வந்து கல்வி கற்பிக்கக் கூடிய் A/L பரீட்சை எடுத்த மாணவன், மாணவி விரும்பத்தக்கது. **075 7958 720**

**வீடும், கடையும் வாடகைக்குண்டு**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் சகல அடிப்படை வசதியும் கொண்ட வீடும், கடையும் தனித்தனியாக வாடகைக்குண்டு.
**072 627 5626, 077 408 9147, 021 222 2452**

**விற்பனைக்கு**

39/ 3, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளியில் வீடு விற்பனைக்கு உண்டு. அத்துடன் ஆட்டோ, சாலி மோட்டார்சைக்கிள் என்பனவும் விற்பனைக் குண்டு. தொடர்பு : 077 4658 068

**பணிப்பெண் தேவை**

யாழ்ப்பாணம், கந்தர்மடத்தில் நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு சமையல் வேலை உதவி செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை. வீட்டில் தங்கியும் நிற்கலாம், வந்தும் போகலாம். சம்பளம் (15000 - 20000 வரை) தொடர்பு - 077 3611 282

**விற்பனைக்கு**

மரவள்ளிக்கிழங்கு சீவும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு - 075 049 5685

# அரோரா..! அசையும் துருவ ஒளிச் சமிக்ஞை

அரோரா என்பது பூமியின் வடதுருவமான ஆட்டிக் மற்றும் தென்துருவமான அந்தாட்டிக்கா பகுதிகளில் ஏற்படுகின்ற இயற்கை ஒளியாகும். ரோமானியர்களின் அதிகாலைப் பெண் கடவுளின் பெயராக இது விளங்குகிறது. கிரேக்கத்தில் போரியஸ் என்பது வடக்குக் காற்று என்பதாக பொருள் கூறப்படுகிறது. இவ்விரண்டையும் இணைத்து வடதுருவத்தில் தென்படுவதாக சொல்லப்படுகின்ற அசையும் வண்ண ஒளிக்கு பெயர் சூட்டியுள்ளனர். இந்த ஒளியானது பூமியின் 60 பாகை அட்ச ரேகைக்கு மேலாகவும் வானத்தின் வளிமண்டலப் பரப்பினுள் 80 கிலோ மீற்றர் உயரத்துக்கும் மேலாக உள்ள வெப்பக்கோளத்தில் அழகான வண்ணத் திரையாகக் காட்சி அளிக்கிறது.

இதன்படி புவியின் காந்தப் பரப்பிலிருந்து புறப்படுகின்ற மின்னூட்டம் பெற்ற துகள்களான ஒட்சிசன் மற்றும் நைதரசன் அயனிகள் சூரியக் காற்றுடன் மோதும்போதே வானத்தில் வண்ணங்கள் தொடர்ந்தும் உண்டாவதாக அறிவியலாளர்கள் கூறுகின்றனர். இந்த மோதுகையானது பார்ப்பதற்கு வண்ணத் திரைகளைத் தொங்கவிட்டதுபோல் உள்ளதாகவும் அசைவுறுவதாகவும் சொல்லப்படுகிறது. மேற்படி வண்ண ஒளிப்பரப்பானது பகல் வேளையிலும் நிகழ்கிறது. இரவு வேளையில் இந்த ஒளியின் கீழாக அமர்ந்து கொண்டு புத்தகங்களைப் படிக்க முடிவதாகவும் விஞ்ஞானிகள் கருத்துரைக்கின்றனர்.



இந்த ஒளிச் சமிக்ஞைகள் அழகான பச்சை, ஊதா, சிவப்பு வண்ணத்தில் மனதைக் கொள்ளை கொள்ளும் காட்சியமைப்பை அளிக்கிறது. ஒட்சிசன் மின்னூட்டம் பெற்ற துகள்கள் காணப்பட்டால் அந்த ஒளியானது பச்சைப்பழுப்பு நிறம் கலந்த சிவப்பாகவும் நைதரசன் துகள்கள் காணப்பட்டால் அந்த ஒளியானது நீலம் கலந்த சிவப்பாகவும் காட்சி தருகிறது. அந்தப் பகுதியில் உள்ள மக்கள் கூட்டமானது இந்த ஒளி வெளிப்பாடுகளை கடவுளின் சமிக்ஞை என்பதாக நம்பிவருகின்றனர். இவற்றின் நிறங்கள் கணத்திற்குக் கணம் மறைந்து அற்புதமான காட்சிகளைத் தருவதாக கூறுகின்றனர். இந்த அற்புதக் காட்சியமைப்பைக் காணவென கனடாவின் கடற்கரைக்கு மக்கள் அதிகம் சுற்றுலா வருகின்றனர். இந்த அரோரா ஒளிக்கொழிப்பானது தெற்கே அந்தாட்டிக்கா, தென்அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற பிரதேசங்களிலும் தெரிவதாக சொல்லப்படுகிறது.

ஆக, அறிவியலாளர்கள் ஆட்டிக் கண்டத்தில் காட்சி தரும் வண்ணத் திரைக்கு அரோரா போரியாலிஸ் (Aurora borealis) என்றும் அந்தாட்டிக்காவில் காட்சி தரும் வானத்தின் வண்ண ஒளி ஆட்டத்துக்கு அரோரா ஆஸ்த்திரேலிஸ் (Aurora australis) என்றும்பெயர்குறிப்பிடுகின்றனர்.


## நினைவஞ்சலிகள்

பதின்மூன்றாம் ஆண்டு — முதலாம் ஆண்டு

தோற்றம் 17.07.1923 — தோற்றம் 28.04.1933



மறைவு 18.09.2003 — மறைவு 31.01.2016

திதி: தேய்பிறை சப்தமி

**காலிங்கர் நடராசா — மங்கையர்க்கரசி நடராசா**

பந்து மாதம் சுமந்து பெற்றீர் பகல் இரவாய் விழித்திருந்தீர்
பாரினிலே நாம் வாழ நல்ல பண்புதனை ஊட்டி நின்றீர்
பாசமழை பொழிந்து எம்மைப் பக்குவமாய் வளர்த்தெடுத்தீர்
ஏணியாய் நீர் இருந்தீர் ஏற்றமுடன் நாம் வாழ
கலங்கரை விளக்கமாக எமக்கு நல்வழி காட்டி நின்றீர்
அன்பாக அரவணைத்து அறிவுப் பால் ஊட்டி நின்றீர்
எம் வாழ்வின் இருள் அகற்றி ஒளி விளக்காய் இருந்தீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

புகையிரத வீதி அருகில்,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

குடும்பத்தினர்.



## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 06.12.2016 செவ்வாய்க்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் **முத்தையா சண்முகராசா**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (19.01.2017) வியாழக்கிழமை அத்தியடிப் பிள்ளையார் கோயில் மண்டபத்தில் (அம்பலவாணர் றோட், யாழ்ப்பாணம்) முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும். மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

111/11, கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**ஆசீர்வாதம் மரியம்மா**



அன்னை மடியில்
02.07.1939

ஆண்டவன் அடியில்
19.01.2015

அன்பின் திருவுருவாய்
அன்னையின் இலக்கணமாய்
பண்பின் உறைவிடமாய் பாசத்தின் சிகரமாய்
பொறுமையின் ஊற்றாய் வஞ்சகமே அறியாது
சமநீதி கருதி வாழ்ந்த எம் தாயே!
உங்கள் இதயக்கமலத்தை வணங்கி
எம் கண்ணீர்ப் பூக்களைக்
காணிக்கை யாக்குகின்றோம்.
தாயே நீர் எம்மையும்
இவ்வுலகையும் விட்டுப்பிரிந்து
இரண்டு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
எம் நெஞ்சத்தில் என்றும் நீங்காத நினைவுகளுடன்
வாழ்கின்றீர்கள் தாயே உங்கள் ஆன்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இல. 2, விதானையார் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

தங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மகள்



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 16 . 12 . 1949



ஆண்டவன் அடியில் 20 . 12 . 2016

**அமரர் செல்லையா தெட்சணாமூர்த்தி**
(ஓய்வுபெற்ற சிரேஷ்ட தொழில்நுட்பவியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை)

திதி: மார்கழி மாத அபரபக்க சப்தமி

கண்ணின் மணிபோல எமைக் காத்த தந்தையே
விண்ணகம் காணவென விரைந்தோடிச் சென்றதேனோ ?
பதைபதைப்பு இல்லாமல் பக்குவமாய் போனீர்களே அப்பா !
சென்றனையோ சிவலோகம் அம்மாவுடன் சேர்ந்து வாழ
பாரியார் பறந்ததிசை பறந்தோடிச் சென்றீர்களே
பாரினில் எமை பதைபதைக்க தனியே விட்டு
அப்பா அப்பா என வீட்டைச் சுற்றித் தேடித்திரிகின்றனர்
உங்கள் பிள்ளைகள்
பாட்டா எங்கே என ஏங்கித் தவிக்கின்றனர்
உங்கள் அருமைப் பேர்த்திகள்
மாலைநேரத் தொலைபேசியோ என்மனதை இன்னமும் குடைகின்றது
எழுதா விதிக்கு அழுதாத்தான் தீருமோ அப்பா ...
என்றும் உங்கள் ஆத்மா மீண்டும் பிறவா பெருவாழ்வு பெற
எல்லாம் வல்ல இறைவனை நாமும் பிரார்த்திப்போமாக
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

" சொர்ணகிரி "
50/2, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.



## 9ஆம் ஆண்டு நினைவு



அமரர் இராசப்பு அல்பிரட்
**அருமைநாயகம்**

மலர்வு 04.02.1944 — உதிர்வு 19.01.2008

எம் அறிவுக்கு வித்திட்டு எம்மை
ஆளாக்கிய அப்பாவே !
என்றும் நீங்காத நினைவுகளுடன்
உங்கள் குடும்பத்தினர்.

"மேரி இல்லம்"
கரவெட்டி வடக்கு,
வதிரி

அ. றொபின்சன் (மகன்)
குடும்பத்தினர்

## ஓரினச்...
அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை இலங்கைக்கு வழங்குவதற்கு ஓரினச் சேர்க்கையை இலங்கையில் குற்றமற்றதாக அறிவிப்பதற்கு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைச்சர்கள் பலரும் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். ஜனாதிபதியும் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். இந்த நிபந் தனையை நீக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார். (த-5)

## வறட்சியைப்...
பிரதேசங்களில் சிறிய நீர் வழங்கல் பிரிவு மிகமோசமான முறையில் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. இந்த நிலைக்கு முகம் கொடுக்கும் வகையில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் ஊடாக நீர் பவுசர் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற நீர் வழங்கல் நடவடிக்கைகளை விரிவாக்குவதற்கும்,
400 குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கும், வறட்சியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் காணப்படும் பொது ஆழமான ஆயிரம் கிணறுகளைச் சீரமைப்பதற்கும், கையினால் இயக்க கூடிய 200 கிணறுகளைப் பின்தங்கிய கிராமங்களில் நிர்மாணிப்பதற்கும், நீரினைக் கிரமமாகப் பயன்படுத்துவது தொடர்பில் பொதுமக்களை அறிவுறுத்துவதற்கும், நீர் வழங்கல் அவசரமாகக் குறையும் சந்தர்ப்பங்களில் தேவையான துரித நடவடிக்கைகளை எடுப்பதற்காக உரிய அதிகாரிகள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் கோரி முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (த-5)

## படுகொலை...
அமைச்ச ரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார். வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை மீளப் பெற்றுக்கொள்வதற்காக விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளில் இராணுவத்தைத் தண்டிப்பது தொடர்பில் குறிப்பிடப்படவில்லை. அதில் நல்லாட்சி மற்றும் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவது தொடர்பாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.
இராணுவத்தினர் போரின்போது மனிதப் படுகொலை செய்திருப்பின் அவ்வாறு செய்தவர்களைக் கைது செய்யவேண்டும்.
58 நிபந்தனைகள் முக்கியமல்ல. அவை எதனைப் பிரதிபலிக்கின்றன? நல்லாட்சி, மனித உரிமைகளைப் பேணல் மற்றும் அபிவிருத்தி என்பவற்றையே குறிப்பிட்ட நிபந்தனைகள் வலியுறுத்துகின்றன.
கடந்த அரசு அதனைச் செய்யவில்லை. மனித உரிமைகளைப் பாதுகாக்கவில்லை. அதற்கு எதிராகவே இருந்தது. மனித உரிமைகள் பன்னாட்டின் உரிமை அல்ல. அது எமது உரிமைகள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். நல்லாட்சியும் கடந்த அரசில் இருக்கவில்லை. அபிவிருத்தி மாத்திரமே குறிப்பிட்டளவு இருந்தது.
ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை தொடர்பில் நேற்றுத் (நேற்றுமுன்தினம்) தான் அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டது. நிபந்தனைகள் விதித்திருப்பின் அவை அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றத்துக்கு வந்த பின்னர்தான் நடைமுறைப்படுத்தப்பட முடியும். தவறான மற்றும் பொய்யான பரப்புரைகளைச் சிலர் மேற்கொண்டு வருகின்றனர். ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ள விடயங்கள் தொடர்பில் அரசு ஆராய்ந்து வருகின்றது - என்றார். (த-5)

## விவசாயிகளுக்கு...
சபையின் தலைவர் சிட்னி கஜ நாயக்க தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் நட்டஈடு வழங்கப்படும். நிலவும் வறட்சியால் அநேகமான பகுதிகளில் நெற்செய்கை அழிவடைந்துள்ளது.
இன்னும் சில வாரங்களுக்கு வறட்சி நீடித்தால் எஞ்சிய நெற் செய்கையும் பாதிக்கப்படும் அபாயம் நிலவுகின்றது. மேலதிகப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்த விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கான வாய்ப்பு இல்லை.
எவ்வாறாயினும் அடுத்த போகத்தில் இருந்து நெற்செய்கைக்கு மேலதிகமாக சோளம், உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், மிளகாய் செய்கைகள் என்பன கட்டாயமாகக் காப்புறுத்தித் திட்டத்துக்குள் உள்வாங்கப்படவுள்ளன. இதற்கான யோசனை வரவு - செலவுத் திட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது - என்றார். (த-5)

## குறுகிய...
தெரிவித்ததாவது: புதுவருடம் மிகவும் கவலையுடன் வரியைச் சுமந்து வந்துள்ளது. அரசு எல்லாப் பக்கத்தையும் வரியால் அடைத்துள்ளது. அதற்கான முழுப் பொறுப்பையும் மகிந்த மீதுதான் அரசு சுமத்துகின்றது. அரசு என்ன தப்பைச் செய்தாலும் அதற்கு மகிந்ததான் பொறுப்பேற்க வேண்டியுள்ளது.
எதைச் செய்தாலும் கடனை அடைப்பதற்காகவே செய்கின்றோம் என்று இந்த அரசு சொல்கின்றது. அப்படியென்றால் இந்தக் கடன்களை அடைத்து எப்போது நாட்டை அபிவிருத்தி செய்யப் போகின்றீர்கள்?
நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மகிந்த காரணமல்ல. இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடனேயே 15 ஆயிரம் கோடி ரூபாவைத் திருடியது. அதுதான் மத்திய வங்கிப் பிணைமுறி மோசடி. இதுபோன்ற பல மோசடிகளால்தான் நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்குகின்றது. தலைமை அமைச்சர் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும்.
கரம் போர்டில் மோசடி செய்தார் என்று மகிந்தானந்த அளுத்தகமவை சிறைக்கு அனுப்ப முடியுமென்றால் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மத்திய வங்கி மோசடி தொடர்பில் எவ்வாறான நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்று சிந்தித்துப் பாருங்கள்.
நாங்கள் இந்த ஆட்சியில் உள்ள அமைச்சர்கள் குறுகிய காலத்துக்குள் புரிந்த ஊழல், மோசடிகளை டொப் - 10 ஊடாக வெளிப்படுத்தி வருகின்றோம். குறுகிய காலத்துக்குள் மகிந்த தலைமையில் ஆட்சி அமைப்பதற்கான வியூகத்தை நாம் வகுத்துள்ளோம். அந்த ஆட்சியில் இந்த ஊழல்வாதிகள் நிச்சயம் தண்டிக்கப்படுவர் - என்றார். (த-5)

## இலங்கையில்...
வரும் உலகப் பொருளாதார மாநாட்டில் பங்கேற்றுள்ள பிரதமர் அங்கு நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே இந்த விடயங்களைக் கூறியுள்ளார்.
அவர் தெரிவித்ததாவது:
இந்தியாவுடன் எட்கா உடன்படிக்கையில் நாம் கைச்சாத்திடவுள்ளதோடு, இந்தியாவின் தென்பகுதியில் அமைந்துள்ள ஐந்து மாநிலங்களில் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தனித்தனி ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளோம்.
சிங்கப்பூருடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவது தொடர்பில் அரசு பேச்சு நடத்தி வருகின்றது. இது வங்காள விரிகுடாவில் அமைந்துள்ள ஏனைய நாடுகளுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு வாய்ப்பாக அமையும்.
அடுத்த கட்டமாக மியன்மார், மலேசியா, தாய்லாந்து மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளுடன் வர்த்தக ஒத்துழைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது தொடர்பில் அவதானம் செலுத்தப்படவுள்ளது.
சீனா மற்றும் ஜப்பானுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவது தொடர்பிலும் பேச்சு நடத்தி வருகிறோம் - என்றார். (த-5)

## ஐ.நாவுடன்...
சுவிசர்லாந்துக்குச் சென்றுள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவர் நேற்றுச் சந்தித்துப் பேசினார். இதன்போது இலங்கை இணங்கியுள்ளதாகத் தெரிவித்த, எரிக் சொல்ஹெய்ம் தனது கீச்சகத்தில் (ருவிட்டரில்) பதிவிட்டுள்ளார்.
சூழல் இயைவுப் பொருளாதாரம், நீடித்து நிலைத்திருக்கக் கூடிய சுற்றுலாத்துறை, காட்டு உயிர், குடிதண்ணீர் ஆகிய விடயங்களில் ஐ.நா. சூழல் அமைப்புடன் கூட்டுறவாகச் செயற்படுவதற்கு இலங்கைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இணங்கியுள்ளதாக அதில் பதிவிடப்பட்டுள்ளது. (5)

## வறட்சி...
மின் சக்தி அமைச்சு, மகாவலி அமைச்சு மற்றும் நீர்விநியோக அமைச்சு ஆகியவற்றின் செயலாளர்களை உள்ளடக்கிய சிறப்புக் குழுவொன்றை அமைத்து வறட்சியினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை இயன்றளவில் குறைத்து மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்குவதற்கு தேவையான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அரச தலைவர் மைத்திரிபால ஆலோசனை வழங்கினார்.



மேற்கூறிய அமைச்சுக்களின் ஊடாக வறட்சியை எதிர்கொள்வதற்காக தற்போது நடைமுறைப்படுத்தப்படும் மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் தொடர்பாக நீண்ட கலந்துரையாடலொன்று இடம் பெற்றது.
எமது நீர்த்தோற்றுவாய்களைப் பாதுகாத்து இவ்வாறான சூழ்நிலைகளை எதிர்காலத்தில் குறைத்துக் கொள்வதற்கான வழிமுறைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.
தற்போது சேதமடைந்துள்ள குளங்களைச் சீரமைப்பதற்கான செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்துவது பற்றி இதன்போது அரச தலைவர் அறிவுறுத்தினார். நீரைச் சிக்கனமாகப் பாவித்து அதனை பேணுவதற்கான அறிவுறுத்தல்களைப் பொதுமக்களுக்கு வழங்கும் செயற்றிட்டங்களின் தேவைப்பாடு குறித்தும் சுட்டிக்காட்டினார். (த-5)

## கூட்டமைப்பின்...
பட்டுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகப் பிரமாண்டமான அளவில் பொங்கல் விழாவும் பேரணியும் நடத்தத் திட்டமிட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் பொங்கல் விழாவுக்குத் தலைமை தாங்கவுள்ளார்.
ஊர்வலமும் தமிழர் பண்பாட்டு நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.
பிற்பகல் 1.30 மணிக்குக் கல்லடிப் பாலத்திலிருந்து ஆரம்பமாகவுள்ள ஊர்வலத்தில் தலைமை அதிதியாக இரா.சம்பந்தன் கலந்து கொள்ளவுள்ளார். ஊர்வலம் தேவநாயகம் மண்டபத்தில் முடிவடையும். அங்கு கலை நிகழ்வுகள் நடைபெறும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (த-5)

## சீன...
நிகழ்வுக்கு முன்னதாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.
இலங்கையில் சீனாவின் முதலீடுகள் தொடர்பாகச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.
அம்பாந்தோட்டைத் துறைமுகம், கைத்தொழில் முதலீட்டு வலயம் மற்றும் கொழும்பு நிதி நகரத் திட்டம் என்பன தொடர்பாகவும், இவை தொடர்பில் எழுந்துள்ள சிக்கல்கள் குறித்தும், சீன அரச தலைவருடன் தலைமை அமைச்சர் ரணில் பேச்சு நடத்தினார்.
எதிர்கால முதலீடுகள் தொடர்பாகவும், சீன அரச தலைவருடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டதாகத் தலைமை அமைச்சர் செயலகத் தகவல்கள் கூறுகின்றன.
இதற்கிடையே டாவோசில் நேற்று முன்தினம் ஆரம்பமாகிய உலக பொருளாதார மாநாட்டில் 40 நாடுகளின் 3 ஆயிரம் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர். மாநாட்டில் பங்கேற்றுள்ள பல்வேறு உலகத் தலைவர்களையும் தலைமை அமைச்சர் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தத் திட்டமிட்டுள்ளார். (த-5)

## அலங்கா....
போராட்டம் நடத்தப்பட்டது. சுமார் ஐநூறு பேர் வரை அணி திரண்டு தமது உணர்வுகளை தொப்புள் கொடி உறவுகளுக்கான ஆதரவை வெளிப்படுத்தினர்.
தமிழகத்தில் ஜல்லிக்கட்டுக்குத் தடை விதிக்கப்பட்டது. இதனை எதிர்த்து தமிழக மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர். பகல் இரவாக, பனிக் குளிர் பாராது மாணவர்கள் முன்னெடுத்துள்ள இந்தப் போராட்டத்துக்குச் சகல தரப்பினரும் ஆதரவு தெரிவித்துள்ளனர். அவர்களும் போராட்டங்களில் [illegible]மிறங்கியுள்ளனர்.
தமிழகத்துக்கு ஆதரவாக, ஜல்லிக்கட்டு மீதான தடையை நீக்கக் கோரி நல்லூரில் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. சமூகவலைத் தளம் ஊடாகக் குறுகிய நேர அழைப்பு விடுக்கப்பட்டு நேற்றைய போராட்டம் ஒழுங்கமைக்கப்பட்டது.
நேற்று மாலை 3 மணியளவிலேயே, நல்லூர் கோயில் முன்றிலில் இளைஞர்கள் ஒன்று கூடத் தொடங்கினர். மாலை 4 மணியளவில் சுமார் 500 இளைஞர்கள் வரை அணி திரண்டனர். முதன்மைச் சாலைக்கு இறங்காது, நல்லூர் முன்பக்கச் சுற்றாடலில் தமது போராட்டத்தை அமைதியான முறையில் - இயல்பு நிலைக்குப் பங்கம் ஏற்படுத்தாத வகையில் முன்னெடுத்தனர்.
'அலங்கா நல்லூர் ஆடும் வரை ஈழ நல்லூர் அடங்காது', 'நல்லூரில் சூரசங்காரம் சுப்பிரமணிய சுவாமிக்கு', 'அடங்கா நல்லூரிலிருந்து அலங்கா நல்லூருக்கு', 'ஏறு தழுவுதல் எம் உரிமை', 'உலகம் தமிழனை உற்று நோக்கும் எங்கள் ஒற்றுமை உங்களை விரட்டும்', 'எங்கள் அடையாளம் எங்கள் உரிமை', 'கடல் பிரித்தாலும் உயிர் துடிக்கும்', 'எங்கள் குருதி ஒன்றே என்றும் துடிக்கும் வென்றே', 'தலைகள் குனியும் நிலையில் இனியும் தமிழன் இல்லையடா', 'சோழன் கொடிபாயும் சோழியன் குடுமி அறும்', 'போராட்டம் எம் இனக்குணம் சீண்டாதே சிதறுவாய்' ஆகிய வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.
சுமார் ஒன்றரை மணி நேரம் இந்தப் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்தின் முடிவில் இளைஞர்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர்.

(த-5-8-101-37)

## ஓமந்தை...
மாநாட்டில் ஓமந்தை முகாம் [illegible] தொடர்பாகச் செய்தியாளர்கள் எழுப்பிய [illegible] விக்கு பதிலளித்தபோதே அவர் மே[illegible]ண்டவாறு கூறினார்.
ஓமந்தை முகாமுக்கு அருக[illegible]யிலுள்ள காணி தொடர்பில் பொதும[illegible] உரிமை கோரினர். இதற்கு இராணு[illegible]நால் தீர்வு காண முடியாது. இந்தக் கா[illegible] தொடர்பான நடவடிக்கைகளை வவுனி[illegible] மாவட்டச் செயலரிடம் நாம் ஒப்படைத்[illegible]ளோம்.
ஓமந்தையிலுள்ள முகாம் [illegible]றப்படவில்லை. காணி தொடர்பிலே[illegible]ற்பொழுது நடவடிக்கை மேற்கொள்[illegible]ட்டுள்ளது என்றார்.

(த-5)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 19

**யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்**

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யுனிபைட் அணியை எதிர்த்து ஏ.பி.சி. அணி மோதவுள்ளது.

**யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டம்**

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் லீக் முறையிலான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப் பந்தாட்டத் திடலில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பற்றிசியன்ஸ் அணியை எதிர்த்து கே.கே.எஸ். அணி மோதவுள்ளது.

**ஞானமுருகனின் கால்பந்தாட்டம்**

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் அரையிறுதி ஆட்டமொன்றில் மன்னார் கில்லறி அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் அணி மோதவுள்ளது. (ம-23)



# ஜோசவ்வாஸ் ஐக்கியம் அரையிறுதிக்குத் தகுதி

கரணவாய், ஜன. 19

குறிஞ்சிக்குமரனின் கால்பந்தாட்டத் தொடரில் மன்னார் ஜோசவ்வாஸ் ஐக்கிய அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

குறிஞ்சிக்குமரனின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தக் காலியிறுதி ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து மன்னார் யோசவ்வாஸ்நகர் ஐக்கியம் அணி களமிறங்கியது. ஆட்டத்தின் 14 ஆவது நிமிடத்தில் ஐக்கியத்தின் றொஸ்ரின் முதல் கோலைப் பதிவு செய்தார். இரு அணிகளும் பெரும் போராட்டத்தை வெளிப்படுத்திய போதிலும் மாற்றங்கள் ஏற்படாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியும் ஐக்கியத்தின் ஏக ஆதிக்கத்துடன் நகர்ந்தது. ஆட்டத்தின் 36ஆவது, 39ஆவது நிமிடங்களில் ஜோன்சன் மற்றும் யேசுதாஸ் ஆகியோர் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் ஐக்கியம் அணி வெற்றி பெற்றது. ஜோன்சன் ஆட்டநாயகனானார். (ம-108)



# ஆதிக்கம் செலுத்துவது யார்?

ஆஸ்திரேலியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரில் மூன்றாவது ஆட்டம் இன்று இடம்பெறவுள்ளது.

தொடரில் ஐந்து ஆட்டங்கள். இரண்டு ஆட்டங்கள் முடிந்துள்ளன. இரு அணிகளும் தலா ஒரு வெற்றியுடன் சமநிலையில் உள்ளன. இதனால் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி தொடரில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பிக்கும். இந்த ஆட்டத்தில் தோல்வியடையும் அணி அடுத்த இரண்டு ஆட்டங்களிலும் வென்றால் மட்டுமே கிண்ணத்தைக் கைப்பற்ற முடியும் என்ற நிலைக்குத் தள்ளப்படும். இதன் அடிப்படையில் இந்த ஆட்டம் முக்கிய ஆட்டமாகப் பார்க்கப்படுகிறது.

கடந்த ஆட்டத்தின் நாயகனான ஹபீஸ் இந்த ஆட்டத்திலும் பாகிஸ்தான் வெற்றிபெறும் என்று தெரிவித்தார். ஆஸ்திரேலிய அணியின் தலைவரான சிமித் இன்றைய ஆட்டத்துடன் ஆஸ்திரேலியா தொடரில் ஆதிக்கம் செலுத்தும் என்று தெரிவித்திருந்தார். இதனால் இன்றைய ஆட்டத்தில் பெரிய அளவிலான எதிர்பார்ப்புக்கள் உள்ளன. (ம)

# 5 மணிநேரத்துக்கு மேல் நீடித்துச் சென்ற ஆட்டம்



ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இவா கார்லோவிச் (குரோஷியா)- ஹோரோசியா ஜிபல்லோஸ் (ஆர்ஜென்ரீனா) ஆகிய வீரர்களுக்கு இடையிலான மோதல் கிட்டத்தட்ட 5 மணித்தியாலம் 15 நிமிடங்கள் வரை நீடித்துச் சென்றது.

ரசிகர்களுக்கு விருந்து படைத்த இந்த ஆட்டத்தில், பன்னாட்டுத் தரப்படுத்தலில் 20 ஆம் நிலை வீரரான இவா கார்லோவிச் முதல் இரண்டு செற்களையும் 6:7, 3:6 என்று இழந்தாலும் அடுத்த மூன்று செற்களையும் முறையே 7:5, 6:2, 22:20 என்ற புள்ளிகளின் அடிப் படையில் கைப்பற்றி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். நடப்பு வருட ஆஸ்திரேலியத் தொடரில் நீண்டநேரம் நடைபெற்ற ஆட்டமாக இந்த ஆட்டமே அமைந்தது. 2012 ஆம் ஆண்டு ஜோகோவிக் - நடால் இடையிலான இறுதி ஆட்டம் 5 மணி 53 நிமிடங்கள் நடந்ததே ஆஸ்திரேலியத் தொடரில் நீண்ட நேரம் அரங்கேறிய ஆட்டமாகும். (ம)

# யுவராஜ் களமிறங்குவதில் சந்தேகம்



இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டம் கட்டாக்கில் இன்று நடக்கிறது. இந்த ஆட்டத்தில் யுவராஜ் களமிறங்குவதில் சந்தேகம் நிலவுகிறது.

கடந்த ஆட்டத்தில் யுவராஜ் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. இதனால் இன்றைய ஆட்டத்தில் அவருக்குப் பதிலாக மனீஸ் பாண்டேவை களமிறக்க கோக்லி முடிவு செய்துள்ளார் என்று சில தகவல்கள் சமூக வலைத்தளங்களில் கசிந்துள்ளன. அதேபோல் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான தவானை நீக்கி ரகானேவை பதில் வீரராக களமிறக்கவும் கோக்லி முடிவு செய்துள்ளார் என்று சொல்லப்படுகிறது. (ம)

# ஈஸ்வரன், வடதாரகை அபாரம்

யாழ்ப்பாணம், ஜன. 19

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் வடதாரகை, ஈஸ்வரன் அணிகள் அபார வெற்றிபெற்றன.

யங்ஸ்ராரின் மைதானத்தில் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வடதாரகை அணியை எதிர்த்து லக்கிஸ்ரார் அணி மோதியது. இதில் வடதாரகை அணி 8:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. பிறிதொரு ஆட்டத்தில் ஈஸ்வரன் அணியை எதிர்த்து யங்ஸ்ரார் பி அணி மோதியது. இதில் ஈஸ்வரன் அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# ஜல்லிக்கட்டு விவகாரத்துக்கு ஆதரவு கொடுத்தார் சேவாக்



சென்னை, ஜன. 19

ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி கோரியும் பீட்டாவுக்கு தடை கோரியும் சென்னை மெரீனா கடற்கரையில் நேற்று இளைஞர்களால் பெரும் போராட்டம் நடத்தப்பட்டது.

இந்தப் போராட்டத்துக்கு தனது ஆதரவைத் தெரிவித்தார் சேவாக்.

டெல்லி அரசு, மிருகவதைச் சட்டத்தின் கீழ் ஜல்லிக்கட்டைத் தடைசெய்துள்ளது. ஆனால் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டாதலால் அதை தடைப்பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என்று பல அரசியல் கட்சிகள் வலியுறுத்தின.

ஆனால் பொங்கல் முடிந்த பிற்பாடும் ஜல்லிக்கட்டு விவகாரத்தில் உறுதியான எந்த முடிவும் வழங்கப்படவில்லை. டெல்லி அரசின் இந்த நிலைப்பாட்டைக் கண்டித்து தமிழ்நாட்டில் பரவலான கண்டனங்களும் ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் இடம்பெற்று வருகின்றன. இளைஞர்களும் பாடசாலை மாணவர்களும் இணைந்து மெரீனா கடற்கரை முன்பாக நேற்று பெரும் போராட்டத்தில் குதித்தனர். அமைதியான முறையில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான சேவாக் இந்தப் போராட்டத்துக்குத் தனது ஆதரவைத் தெரிவித்தார்.

அமைதியான முறையில் நடந்த இந்தப் போராட்டம் ஏனைய மக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு என்றும் அவர் தெரிவித்தார். (ம)

# தரப்படுத்தலில் கேரத்துக்கு இடம்

பன்னாட்டு கிரிக்கெட் சபை, தனது தரப்படுத்தலை நேற்று புதுப்பித்தது. டெஸ்ட் ஆட்டங்களில் தனிநபர் பெறுபேறுகளில் இலங்கையில் இருந்து கேரத் ஒருவ ருக்கே இடம் கிடைத்தது. அவர் பந்துவீச்சு, சகல துறை என இரு தரப்படுத்தல்களில் முறையே நான்காவது மற்றும் எட்டாவது இடங்களில் உள்ளார்.

**துடுப்பாட்டத் தரப்படுத்தல்**
துடுப்பாட்டத் தரப்படுத்தலில் இலங்கை வீரர்கள் எவருக்கும் இடம் கிடைக்கவில்லை. ஆஸ்திரேலிய அணித்தலைவர் சிமித் 933 புள்ளிகளுடன் முதலாவது இடத்திலும், கோக்லி 875 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், ரூட் 848 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர். நான்கு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே வில்லியம்சன், வோர்ணர், அம்லா, அசார் அலி, யுனிஸ் கான், குயின்டன், வில்லியர்ஸ் ஆகியோர் உள்ளனர். கடந்த ஏழு மாதங்களாக களமிறங்காத போதிலும் வில்லியர்ஸ் தரப்படுத்தலில் பெரும் பின்னடைவைச் சந்திக்கவில்லை.

**பந்துவீச்சுத் தரப்படுத்தல்**
பந்துவீச்சுத் தரப்படுத்தலில் இந்திய வீரர்களான அஸ்வின், ஜடேயா இருவரும் முதல் இரு இடங்களையும் பிடித்தனர். அஸ்வின் 887 புள்ளிகளையும், ஜடேயா 879 புள்ளிகளையும் பெற்றனர். ஹசில்



வூட் 860 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தில் உள்ளார். நான்கு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே கேரத், ரபாடா, ஸ்ரெய்ன், அண்டர்சன், புரோட், பிளன்டர், ஸ்ராக் ஆகியோர் உள்ளனர்.

**சகலதுறைத் தரப்படுத்தல்**
சகலதுறைத் தரப்படுத்தலிலும் அஸ்வினே முதலிடத்தில் உள்ளார். அவர் 482 புள்ளிகளைப் பெற்றுள்ளார். 436 புள்ளிகளுடன் சகிப் அல் கசன் இரண்டாவது இடத்திலும், 376 புள்ளிகளுடன் ஜடேயா மூன்றாவது இடத்திலும் உள்ளனர். நான்கு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே ஸ்ரோக்ஸ், மொயின் அலி, பிளண்டர், ஸ்ராக், கேரத், புரோட், வோக்ஸ் ஆகியோர் உள்ளனர். (ம)



# உலகக் கிண்ணம் முக்கிய இலக்கு

## வில்லியர்ஸ் வெளிப்படை

2019 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ணமே தனது முக்கிய இலக்கு என்று தெரிவித்தார் தென்னாபிரிக்க அணியின் தலைவரான வில்லியர்ஸ்.
காயங்கள் காரணமாக தொடர்ந்து பல வாரங்களாக ஓய்வில் இருந்துவருகிறார் வில்லியர்ஸ். கடந்த வருடத்தின் நடுப்பகுதியில் இருந்து அவர் பன்னாட்டு ஆட்டங்களில் களமிறங்கவில்லை. இதனால் தற்காலிகத் தலைவராக பிளாசிஸ் நியமிக்கப்பட்டார். கடந்த சில தினங்களுக்கு முன்னர் (இலங்கைக்கு எதிரான தொடர் ஆரம்பித்தபோது) வில்லியர்ஸ் டெஸ்ட் ஆட்டங்களில் தலைமைப் பதவியில் இருந்து விலகினார். இதனால் முழுநேரத் தலைவராக பிளாசிஸ் நியமிக்கப்பட்டார். இந்த நிலையில் வில்லியர்ஸ் டெஸ்ட் ஆட்டங்களில் ஓய்வை அறிவித்துச் செல்லவுள்ளார் என்று சில தகவல்கள் கசிந்தன. அவற்றை அவர் மறுத்தார்.
ஓய்வு என்ற பேச்சுக்கு இடமில்லை. டெஸ்ட் ஆட்டங்களை விட மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களில் அதிக கவனம் செலுத்துகிறேன். ஏனெனில் பலம் வாய்ந்த அணிகளில் ஒன்றான தென்னாபிரிக்கா இன்னும் ஓர் உலகக் கிண்ணத்தையேனும் முழுமையாகக் கைப்பற்றவில்லை. இதனால் 2019 ஆம் ஆண்டு உலகக்கிண்ணம் வெல்வதே எனது முக்கிய நோக்கம் என்று வில்லியர்ஸ் மேலும் தெரிவித்தார். (ம)

# நெருக்கடி!


இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெற வுள்ள நிலையில் இந்த ஆட்டத்தில் வெற்றி பெற வேண்டும் என்ற நெருக்கடி நிலை இங்கிலாந்துக்கு ஏற்பட்டது. தொடரில் மூன்று ஆட்டங்கள். முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்றது. இதனால் அடுத்த இரு ஆட்டங்களிலும் வென்றால் மட்டுமே தொடரைக் கைப்பற்றலாம் என்ற நெருக்கடி இங்கிலாந்துக்கு ஏற்பட்டது.
மாறாக எஞ்சியிருக்கும் இரு ஆட்டங்களில் ஒன்றில் வென்றால்கூட கிண்ணத்தை இந்தியா கைப்பற்றுவது உறுதியாகும். பகலிரவு ஆட்டமாகவே இன்றைய ஆட்டம் நடைபெறவுள்ளது. (ம)

# மூன்றாவது சுற்றில் கெர்பர்



நடைபெற்றுவரும் ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார் ஜேர்மன் வீராங்கனையான கெர்பர்.
பன்னாட்டு அந்தஸ்துப் பெற்ற தொடர்களில் ஒன்றான ஆஸ்திரேலியத் தொடர் சில தினங்களின் முன்பு ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது சுற்று ஆட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவரான கெர்பரை எதிர்த்து ஜேர்மனின் கரீனா விதோப்ட் மோதினார்.
மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இலகுவில் கைப்பற்றினார் கெர்பர். இரண்டாவது செற்றை 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தார் கரீனா. வெற்றியாளரைத் தீர்மானிக்கும் மூன்றாவதும் இறுதியானதுமான செற்றில் 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில்வெற்றிபெற்ற கெர்பர் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார். (ம)

# ஐ.பி.எல். தொடரில் இல்லை ரூட்



நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் இருந்தும் விலகும் முடிவை எடுத்தார் இங்கிலாந்து அணியின் நட்சத்திர வீரரான ரூட்.
இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான் ஜோ ரூட் இது வரை ஐ.பி.எல். தொடரில்விளையாடியதில்லை. இந்த சீசனில் ஐ.பி.எல். தொடரில் விளையாட வைக்க சில அணி நிர்வாகங்கள் அவரை அணுகின. ஆனால் அவர் மறுத்து விட்டார்.
இந்த ஆண்டு தொடர்ச்சியாக ஏராளமான பன்னாட்டு ஆட்டங்கள் உள்ளன. அதுவும் வெளிநாட்டில் விளையாட வேண்டி உள்ளது. இதனால் குடும்பத்தை விட்டு நீண்ட காலம் பிரிந்து இருக்கும் நிலை ஏற்படும். எனவே ஐ.பி.எல். நடைபெறும் சமயத்தில் கிடைக்கும் ஓய்வு நேரத்தைக் குடும்பத்துடன் செலவிட விரும்புகிறேன். இதனால் இந்த வருடமும் ஐ.பி.எல். தொடரில் என்னால் விளையாட முடியாது என ரூட் தெரிவித்தார். (ம)

# திலங்க- மத்தியூஸ் இடையே கலந்துரையாடல் தென்னாபிரிக்க ரி-20 தொடர் தொடர்பில்

இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால வுக்கும் இலங்கை அணியின் தலைவர் மத்தியூஸுக்கும் இடையில் நேற்று முன்தினம் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.
தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி டெஸ்ட் தொடரை 0:3 என்று இழந்தது. ரி-20 தொடர் நாளை ஆரம்பமாகவுள்ளது. ரி-20 தொடரைக் கைப்பற்றுவது தொடர்பிலான விடயங்களே அவ்வாறு கலந் துரையாடப்பட்டன. ரி-20 தொடரை இலங்கை அணி கைப்பற்றும் என்ற எதிர்பார்ப்பே பொதுவாக நிலவுகிறது. ஏனெனில் தென்னாபிரிக்க அணி அனுபவமற்ற குறைந்த அனுபவமுடைய வீரர்களையே இந்தத் தொடரில் களமிறக்குகிறது. எதிர்காலத் தொடர்களைக் கருத்தில் கொண்டு கிட்டத்தட்ட 10 வீரர்களுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. (ம)



**வீடு வாடகைக்கு தேவை**
யாழ்நகரை அண்டிய பகுதியில்
வீடு வாடகைக்கு தேவை.
தொடர்பு: 071 618 2182

**வீடு/கடை வாடகைக்கு தேவை**
வவுனியா பேருந்து தரிப்பிடத்திற்கு அண்டிய பகுதியில் காரியாலய பயன்பாட்டிற்கு வீடு அல்லது கடை வாடகைக்கு தேவை.
தொடர்பு : 077 917 9909

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L, A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், தொழில் தேடுவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
ஆங்கிலத்தில் ஒரெழுத்துத்தெரியாதவர்கள்கூட மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 21.01.2017
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00
8 பாடப்புத்தகங்கள் மற்றும் வீடியோ DVD இலவசம்!
வாரநாள் பிரிவுகள் - காலை 08-10 [செவ்வாய் & வியாழன்]
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

செலான்
Seylfie
இளம் உள்ளங்களின் பலம்...

இளைய தலைமுறையினரின் புரட்சிகரமான கணக்கு

டிஜிட்டல் வட்டி மற்றும் FACE BOOK வங்கிச்சேவை



அனுகூலங்கள்

- மாதாந்த வட்டியினை இலங்கை ரூபாவில் அல்லது டிஜிட்டல் முறையில் கையடக்கத் தொலைபேசியில் 'மொபைல் ரீலோட்' ஆக மற்றும் ரூபாவில் பெற்றுக் கொள்ள முடியும்
- Facebook பேங்கிங், இன்டர்நெட் பேங்கிங் மற்றும் Social Banking Apps இலவசம்
- 21 வது பிறந்த தினத்திற்காக ரூ.25,000/- வரை பண வெகுமதி
- பட்டப்படிப்பு அல்லது தொழில் நிபுணத்துவத்திற்கான கல்வியைப் பூர்த்தி செய்கையில் ரூ.25,000/- வரையான பண வெகுமதி
- டயலொக் சிம் இணைப்பு இலவசம்
- குறைந்த வட்டி வீதத்தில் கல்விக் கடன், வியாபாரக் கடன், தனிநபர் கடன் மற்றும் குத்தகைக் கடன் ஆகியன
- SMS Alerts வசதியுள்ள சிப் அடங்கிய Seylfie டெபிட் கார்ட்

*நிபந்தனைகள் உண்டு

www.seylan.lk | 011 200 88 86 | 077 200 88 88

Dialog

செலான் டவர்ஸ், இல. 90, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: +94 11 2456000 தொலைநகல்: +94 11 2456456 மின்னஞ்சல்: info@seylan.lk
பிராண்ட் பினான்ஸ் ரேட்டிங்: "A+" பிற்ச்ரேட்டிங்: A-(lka) கம்பனிப்பதிவு இலக்கம்: PQ 9
செலான் வங்கியானது இலங்கை மத்திய வங்கியின்
கண்காணிப்பின் கீழ் செயற்படும் ஓர் அனுமதிப் பெற்ற வர்த்தக வங்கியாகும்.

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி



# திடீர் மேலெழும்பல் பந்துவீச்சின் மூலம் கோக்லி தடுமாறுவார்

## ஜேக் போல் திட்டம்

இந்திய அணியின் தலைவரான கோக்லியை திடீர் மேலெழும்பல் பந்துவீச்சின் மூலம் ஆட்டமிழக்கச் செய்யலாம் என்று கருத்துத் தெரிவித்தார் இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேக் போல்.

இந்த இரு அணிகளுக்கும் இடையில் முதலாவது ஒருநாள் ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்தியா வெற்றி பெற்றது. இங்கிலாந்து நிர்ணயித்த 350 ஓட்டங்கள் என்ற இலக்கை 63-4 என்ற நிலையில் இருந்து மீண்டு வந்து இந்தியா வெல்ல கோக்லியின் சதம் முக்கிய காரணமாக இருந்தது. இந்த நிலையிலேயே ஜேக் போல் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய அணித்தலைவர் விராட் கோக்லி மிகச்சிறந்த வீரர்தான். ஆனால் அடுத்த ஆட்டத்தில் (இன்றைய ஆட்டத்தில்) அவருக்கு சரியான திட்டம் தீட்டியுள்ளோம். திடீர் மேலெழும்பல் பந்துகளை அவருக்கு வீசவுள்ளோம். அதிலிருந்து அவர் தப்புவது கடினம். இந்த உத்தியில் நிச்சயம் அவர் தடுமாற அதிக வாய்ப்புக்கள் உள்ளன என்று ஜேக் மேலும் தெரிவித்தார்.

கடந்த ஆட்டத்தில் வோக்ஸ் வீசிய திடீர் மேலெழும்பல் பந்துவீச்சொன்றை கோக்லி சிக்சராக மாற்றினார். பன்னாட்டு ஊடகங்கள் சில அரிய ஆட்டம் என்று குறித்த சிக்சரை வர்ணித்தன. சமூக வலைத்தளங்களிலும் குறித்த சிக்சர் வேகமாகப் பரவி வருகின்றது. இந்த நிலையில் ஜேக் போலின் கருத்து முன்னுக்குப்பின் முரணாக வந்தமைந்தது. (ம)

A/L Personal Class 2017/2018/2019
& day batch
உயிரியல்
இரசாயனவியல்
Theory, 37வருட Past Paper கற்பிக்கப்படும்
075 629 5662

**உடனடி விற்பனைக்கு**
வீடு கட்டுவதற்கு உகந்த நல்ல நிலையில் உள்ள பனை மரங்கள், நிலைகள், வளைகள், ஓடுகள், சீற்கள் என்பன நியாயமான விலையில் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:- தொ.பே:-077 4686274
இல.100,3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

**சிறு நீரகம் தேவை**
53 வயதுடைய O+ குருதிவகையைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு O+ குருதிவகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
தொடர்புகளுக்கு:-
077 574 8386

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.